கோகுலம்

GOKULAM ஆகஸ்ட் '96 ரூ. 5/-



கஷ்டமின்றிக் கற்கலாம்; காற்றைப் போலப் பறக்கலாம்!

நான் அழகா?
வண்ணப் பூ அழகா?





கோகுலம்

1996
ஆகஸ்ட்
மலர் : 14
இதழ் : 6

உயிர்களிடத்தில் அன்பு
வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேணும் - பாரதியார்.

அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம். புதுப் பாடங்களெல்லாம் தொடங்கி, மாதத் தேர்வுகளுக்கும் தயாராக இருப்பீர்களே? திட்டமிட்டுக் கொண்டு செயல் படுங்கள். அப்பொழுதுதான் குறைபாடுகளைக் கண்டறிந்து திருத்திக் கொள்ள முடியும்.


எத்தனையோ முறை அறிவித்தும்கூட, இன்னமும் பலர் தாங்கள் அனுப்பும் படைப்புகளில் தங்கள் முழு முகவரியைத் தராமல் விட்டுவிடுகிறார்கள். இதன் காரணமாகவே நல்ல படைப்புகளை வெளியிட முடிவதில்லை.

வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டிக்குக் கதைகள் வந்து குவிந் துள்ளன. கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான ரா.பொன்ராசன் அவர்கள் குழந்தைக் கவிஞரால் தயாரானவர். கவிஞரின் பல இலக்கியப் பணி களுக்கு உறுதுணையாக நின்றவர். கோகுலம் சிறுவர் சங்கம் என்ற அமைப்பை முத்துராமலிங்க புரத்தில் பல ஆண்டுகளாகச் சிறப்பாக நடத்தி வருபவர். சிறுவர்க்காகப் பலரும் எழுதத் தூண்டுகோலாக உள்ள இவர், தனது 71வது வயதில் அடியெடுத்து வைக்கிறார். பல்லாயிரக் கணக்கான கோகுலம் வாசகர் சார்பில் இவர் இன்னும் நீண்டகாலம் நன்கு வாழ்ந்து சிறுவர் இலக்கியத்தை மேலும் செம்மைப்படுத்தித் தொண்டாற்ற வேண்டும் என்று வேண்டுவோம்.


ஓராண்டுக்கும் மேலாக நம்மை மகிழ்வித்து வந்து ஆட்டிப்படைத்த சிறுமி புவனா, இந்த இதழில் நம்மிடம் விடை பெறுகிறாள். தொடர் முடிந்தாலும் புவனா வாசகர் நெஞ்சில் நிரந்தரமாகக் குடியிருப்பாள் என்பது உறுதி. திறமை யான எழுத்துக்கு எத்தனை சக்தி உண்டு என் பதை சகோதரி 'மதிஒளி' புவனா தேடிய புதையல் மூலம் நமக்கு உணர்த்தியிருக்கிறார். புதிய தொடர் கதையைப் பற்றிய அறிவிப்பும் வெளியாகியுள்ளது. உங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி தானே?

அனைவருக்கும் புனிதமான சுதந்திர தின வாழ்த்துகள்.

அன்புடன்
ரேவதி
(கௌரவ ஆசிரியர்)







கோகுலம்

கதைகள்



கட்டுரை




* பூமாவின் வீணை (படக்கதை) பக்கம் 33

பாடல்கள்

நாடகம்

படக்கதை



"என் பேரைச் சொன்னதுமே பூனைப் படையிலே சேர்க்க முடியாதுன்னு சொல்லிட்டாங்க."

"உனக்கு அப்படி என்ன பேரு?"

"எலிகண்ட்!"

- சீர்காழி. வி. ரேவதி

"எனக்கு டாக்டர்னாலே பிடிக்காது?"

"ஏன்டா?"


"அவங்கதான், ஜுரம் வந்தா லீவு போடாதபடி உடனே குணப்படுத்திடறாங்களே?"

– பா. ஜெயக்குமார்

ஆகஸ்ட் 1996
இந்த இதழில்....







"வீட்டுப் பாடத்தை நீயே எழுதாம ஏன் ராமுவிடம் எழுதிக் கொடுக்கச் சொல்றே?"

"நான் வாடகை வீட்டில் குடியிருக்கேன் சார். அதான்!"

– பா. ஜெயக்குமார்





பிரான்சில் உள்ள ஒரு பத்திரிகை, ஆபத்தான காலங்களில் நம்பிக்கையோடு பயன்படுத்தக்கூடிய போக்குவரத்து சாதனம் எது என்பதை விளக்கும் போட்டி ஒன்றை பிரபல கார் தயாரிக்கும் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் நடத்தியது. 70%க்கும் அதிகமானவர்கள் என்ன எழுதினார்கள் தெரியுமா?'' பை சைக்கிள்'' என்று எழுதினார்கள்! அவர்கள் விளக்கிய காரணங்கள் என்ன தெரியுமா? சைக்கிளை ஓட்டக் கற்பது எளிது.

கஷ்டமின்றிக் கற்கலாம் காற்றைப் போலப் பறக்கலாம்!



வீட்டுக்குள் எடுத்து வந்து எளிதாகப் பூட்டி வைக்கலாம். சைக்கிள் ''மெக்கானிசம்'' யாரும் எளிதில் அறியக் கூடியது. மழை, பனி, வெயில் என்று எந்த வெப்ப நிலையிலும், மனித சக்தியால் ஓட்டலாம். பழுதடைந்தால், அரை மணியில் நாமே சீர் செய்து கொண்டு கிளப்பி விடலாம். வாங்குவதும், பராமரிப்பதும் எளிது. பெட்ரோல், டீசல் செலவு இல்லை. கை, கால்கள் உறுதியாக இருந்து, சைக்கிளும் நல்ல நிலையில் இருந்து விட்டால், சைக்கிளைவிட ஆபத்தில் உறுதியாக நம்பக் கூடிய போக்குவரத்து சாதனம் எதுவும் இல்லை என்று அவர்கள் காரணங்களை விளக்கியிருந்தார்கள். இவர்கள் சொல்ல மறந்த ஒரு காரணமும் இருக்கிறது. சைக்கிள் விடும் பழக்கம் நல்ல உடற்பயிற்சியும் கூட!

சைக்கிளின் அருமை பெருமைகளை விளக்க இதை விடவா முடியும்? பெட்ரோல், டீசல் இன்றி, மனித சக்தியால் மட்டும் இயங்கும் சைக்கிள், 18-ஆம் நூற்றாண்டின் பரிசு!



பள்ளி சற்றுத் தொலைவில் அமைந்துள்ள மாணவ, மாணவியர்க்கு சைக்கிள் மிகச் சிறந்த நண்பன். நெரிசல் மிக்க பஸ்ஸை நம்பாது, குறிப்பிட்ட நேரத்திற்குப் போய்ச் சேர்ந்து விடலாம். மேல் நாடு

களில் பள்ளி மாணவர்க்கு சைக்கிளும் நீச்சலும் அவசியம் தெரிந்திருக்க வேண்டும். பள்ளியில் சேர இவை இரண்டும் முக்கிய தகுதிகள்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்புவரை, சைக்கிள் விடக் கற்பது என்பது பெரிய பயிற்சி. கற்றுக் கொள்பவன் ஒரு மணி நேரத்துக்கு வாடகை சைக்கிள் எடுப்பான். நண்பர்கள் நான்கைந்து பேர் அவனுக்குக் கற்க உதவி செய்ய வருவார்கள். கற்பவனை சைக்கிளில் உட்கார வைத்து, பெடல் பண்ண வைத்து, நண்பர்கள் கூடவே ஓடி வருவார்கள். அரைமணி நேரப் பயிற்சியில் 'பேலன்ஸ்' வந்து விடும். ஒரு மணி நேரத்திற்குள் கோணால் மாணலாக என்று ஓரளவு தானே சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொண்டு விடுவான். சைக்கிளில் பேலன்ஸ் வந்து விட்டால், பெடல் பண்ணி ஓட்டுவது மிக எளிது. முன்பெல்லாம் பெரிய சைக்கிள்கள்தான் இருக்கும். அதனால், சிறுவர்கள் மற்றவர் உதவி இன்றிக் கற்பது கடினம்.

இப்பொழுது அப்படியில்லை. தம்பி, தங்கைகள் பயிற்சி பெற என்றே உயரம் குறைந்த சைக்கிள்கள் வருகின்றன. தானாகவே பேலன்ஸ் வரக்கூடிய, இரு பக்கமும் தாங்கி சக்கரம் (RESTING WHEELS) வைத்த சைக்கிள்களும் வருகின்றன. இதில் பழகினால், சாய்ந்தால்கூட எளிதில் விழுந்து விட மாட்டார்கள். முன்பெல்லாம் பெண்களும் சிறுமிகளும் சைக்கிள் கற்பது கடினம். பைஜாமாவோ, இல்லை சுடிதாரோ அணிய வேண்டும். இப்பொழுது பெண்கள் விடுவதற்கு என்றே வடிவமைக்கப்பட்ட சைக்கிள்கள் கிடைக்கின்றன.

முன்பெல்லாம் சைக்கிள் வைத்திருந்தால் அதற்கு லைசென்ஸ் வாங்கி, ஆண்டுக்கு ஆண்டு பணம் செலுத்திப் புதுப்பிக்க வேண்டும். ஓட்டுபவர் மட்டுமே பயணம் பண்ணலாம். பின்னால் இன்னொருவரை ஏற்றிச் சென்றால் குற்றம். சிக்கிக் கொண்டால் போலீஸ்காரர் பிடித்து அபராதம் போடுவார்! நம்ப முடியவில்லை இல்லையா! ஆனால் இப்படிப்பட்ட நிலை இருந்தது உண்மை. இப்பொழுது லைசென்ஸ் கிடையாது. பின்னால் மட்டுமல்ல, பெடல் பண்ணி மிதிப்பவர்களுக்கு வலு இருந்தால் முன்னால் கூட ஒருவரை உட்கார வைத்துக் கொண்டு மிதிக்கலாம்!

படிக்கின்ற மாணவ, மாணவியர்க்கு சைக்கிள் விடத் தெரிந்திருப்பது மிக மிக அவசியம். அதிலும் புதிய குடியிருப்புப் பகுதிகளில் இருப்பவர்களுக்கு இது இன்றியமையாதது. கைகடிகாரம்கூட இரண்டாவது தேவைதான். முதல் தேவை தம்பி தங்கைகளுக்கு சைக்கிள்தான். நேரம் அறிய வேண்டும் என்றால், யாரிடம் கேட்டாலும் கூறுவார்கள்.

அடுத்து வரும் பிறந்த நாளன்று அப்பா, அம்மாவிடம் என்ன பரிசு கேட்கப் போகிறீர்கள்? சைக்கிள்தானே?

அட்டையில் சைக்கிள் விடப் பழகும் சிறுமி : ரேவதி. கற்றுக் கொடுக்கும் அண்ணன் சிறுவன் கார்த்திக்.

வண்ணப்படம் ஸ்ரீஹரி



(ஓரங்க நாடகம்)

எஸ்.ஆர்.ஜி.சுந்தரம்

இடம்: சுரங்கப்பாதை.

தோன்றுவோர்: மாஸ்டர், ஜான்ஸி, சதீஷ், வேர்க்கடலைக்காரர், தலைப்பாகைக்காரர், போலீஸ் இன்ஸ்பெக்டர், ரௌடி.

மாஸ்டர் : ஜான்ஸி, சதீஷ்! இப்படி வாங்க! இந்தப் படிக்கட்டுப் பக்கமா இறங்கி வாங்க! இது என்ன இடம் தெரியுமா?



சதீஷ்: தெரியும் சார்! இதுதானே போனவாரம் நம்ப முதலமைச்சர் திறந்து வைச்ச வீரசவார்க்கார் சுரங்கப் பாதை? பார்க்கப் பிரமாதமாயிருக்கு சார்! சுவரும், தரையும் மழமழன்னு கண்ணாடி மாதிரி இருக்கு!

மாஸ்டர்: பல லட்ச ரூபாய் செலவு பண்ணி இதைக் கட்டியிருக்காங்க! நீங்க ரெண்டு பேரும் இங்கேதான் இன்னிக்கி சமூகசேவை செய்யப்போறீங்க!

ஜான்ஸி: நாங்க என்ன செய்யணும்?

மாஸ்டர் : இது வழியா ஒரு நாளைக்குப் பல ஆயிரம்பேர் நடந்து போறாங்க! போறவங்க தெரிஞ்சோ தெரியாமலோ அங்கங்கே குப்பை போட்டுட்டு அசிங்கம் பண்ணிட்டுப் போயிடறாங்க! கண்டபடி எச்சில் துப்பிட்டுப் போயிடறாங்க. இதை அவங்களுக்கு எடுத்துக் கூறி, தாங்க செய்யறது தப்புன்னு அவங்களை உணர வைக்கணும்.

சதீஷ்: உண்மைதான் சார்! அதோ பாருங்க! நாலுபோ பேசிக்கிட்டே, கையிலே இருக்கிற ஏதோ துண்டுக் காகிதத்தைத் தரையிலே போட்டுக்கிட்டே போறாங்க!

மாஸ்டர்: இதுமாதிரி ஆட்களை நீங்க மடக்கி, திறமையா அவங்ககிட்டே பேசி, குப்பையைத் தொட்டியிலே போடச் சொல்லணும்! எச்சில் துப்பற மாதிரி தெரிஞ்சா அருகிலுள்ள தொட்டிகளைக் காட்டணும்! புதுசா இங்கே யாரும் கடைபரப்பாம பாத்துக்கணும்!

ஜான்ஸி : சார், நீங்க இப்ப சொன்னதெல்லாம் இங்கே இருக்கிற மாநகராட்சி போர்டுலேயும் ஏற்கனவே அழகா எழுதி வச்சிருக்காங்களே?

மாஸ்டர்: என்னபயன்? இந்த மாதிரி பொது இடங்களை சுத்தமா வச்சிருக்க பொதுமக்களும் ஒத்துழைக்கணும்! இதை அவங்க மனசுல படற மாதிரி எடுத்துச் சொல்றது தான் உங்க பணி.

சதீஷ்: இவ்வளவு பெரிய சுரங்கப் பாதையில நாங்க ரெண்டுபேர் மட்டும் தானா சார்?

மாஸ்டர்: பயப்படாதீங்க.. அந்தப் பக்கத்துலேயும்

இரண்டு சாரணர்களைப் போட்டிருக் கோம்! நாங்களும் மணிக்கொரு தடவை, இந்தப் பக்கமா வந்து பார்த்துட்டுப் போவோம்! நான்வரேன் (போகிறார்).


(ஒரு வியாபாரி வருகிறார்)

வியாபாரி: கடலை..... வேர்க்கடலை... சூடான வேர்க்கடலை! (ஒரு தலைப் பாகைக்காரர் வருகிறார்)

தலைப்பாகை: இந்தாப்பா ஐம்பது பைசாவுக்குக் கடலை

'னு

போடாதீங்க சார்!



வியாபாரி: வாழைப் பழம் கூட இருக்கு சார்! நிம்மதியா உட்கார்ந்து சாப் பிட்டுட்டுப் போங்க சார்!

சதீஷ்: ஜான்ஸி... அதோ அங்கே பாரு! அந்தத் தலைப்பாகை ஆளு வேர்க்கடலையை சாப்பிட்டுட்டுத் தோலையும் காகிதத்தையும் தரையிலே அசிங்கமா போட்டிருக்கார்! வா!வா' போய்ச் சொல்லுவோம்!

ஜான்ஸி: சார்!சார்!

தலைப்பாகை: என்னம்மா! என்ன வேணும்? யாரு நீங்க?

சதீஷ் : நாங்க சாரணர் குழுவைச் சேர்ந்தவங்க! சமூகப்பணி செய்ய வந் திருக்கோம்!

ஜான்ஸி: சார், இந்த அறிவிப்புப் பலகையைப் படிச்சுப் பாருங்க! இந்த இடத்தை சுத்தமா வச்சுக்க வேண்டி யது நம்ம கடமை இல்லையா?

தலைப்பாகை : அது தெரியு தும்மா!

சதீஷ்: உங்க பக்கத்துலேயே பாருங்க சார்! நாலு அடி தூரத்திலே, அழகா குப்பைத் தொட்டி வச்சிருக்காங்க! இந்தக் குப்பையை அதுலேதான் போட ணும்!

தலைப்பாகை : அதுவும் சரிதான்!

ஜான்ஸி: இந்தப் பழத்தோலையும் நடு விலே போட்டிருக்கீங்க. நடக்கறவங்க தப்பித்தவறி இதுமேல காலைவச்சா

வழுக்கி விழுந்து அடிபட்டுக்குவாங்கன்னு உங்களுக்கு நல்லா தெரியுமே சார்!

சதீஷ்: அவசரம்கிறதுக்காகவோ, சௌகரியம்கிறதுக்காகவோ இப்படி அசுத்தம் பண்ணலாமா சார்?

தலைப்பாகை: தம்பி, நீ சொல்றதும் சரிதான்!

வியாபாரி (கோபத்துடன்): சார்! நீங்க பாட்டுக்கு எழுந்துபோங்க சார்; இவங்களுக்குப் பதில் சொல்லாதீங்க சார்!

தலைப்பாகை: இவங்க சொல்றதும் சரிதானேய்யா? சரி தம்பி, நானே இதைக் குப்பைத் தொட்டியிலே போட்டுடறேன்!

ஜான்ஸி: நாங்களும் சேர்ந்து குப்பையைத் திரட்டறோம் சார்!

சதீஷ்: சார்! சின்னப் பசங்க சொன்னதைக் கேட்டதுக்காக உங்களுக்கு நன்றி!

தலைப்பாகை: நன்றி! நன்றி!

வியாபாரி: வேர்க்கடலை! வேர்க்கடலை!

சதீஷ்: ஐயா!

வியாபாரி: என்ன, உனக்கும் தங்கச்சிக்கும் வேர்க்கடலை வேணுமா? இந்தாங்க பிடிங்க!

சதீஷ்: ஐயா...வேண்டாங்க!... தயவு செய்து இந்தக் கடையை இங்கேருந்து காலி பண்ணணுங்க!

வியாபாரி: (முறைத்து)ம்! காலி பண்ணணுமா? ஏன்?

ஜான்ஸி: நீங்க விக்கற வேர்க்கடலை, வாழைப்பழம், சிகரெட் இதனால் இதை வாங்கறவங்க இங்கேயே குப்பை போட்டு சுரங்கப்பாதையை அசிங்கமாக்கறாங்க. தயவு பண்ணுங்க...

வியாபாரி: ம்! அதெல்லாம் முடியாது தம்பி! உங்க வேலையைப் பாருங்க!

ஜான்ஸி: இந்த இடத்தை சுத்தமா வைச்சுக்கறதுதான் எங்க வேலை!

வியாபாரி: காலி பண்ண முடியாது தம்பி! வேணும்னா உங்க ரெண்டு பேருக்கும் இலவசமா வேர்க்கடலை தரேன்! வேர்க்கடலை! வேர்க்கடலை!

சதீஷ்: வேர்க்கடலை யாருக்கும் வேணாங்க! ஜான்ஸி நீ வா! மாஸ்டர் சார் வரட்டும்! விஷயத்தைச் சொல்வோம்!

ஜான்ஸி: சதீஷ்! இதோ இங்கே பாரு!

சதீஷ்: அடே மணிபர்ஸ்! யாரோ தவறுதலா விட்டுட்டுப் போயிருக்காங்க!

ஜான்ஸி: இப்பத்தான் விட்டுட்டுப் போயிருக்கணும்! பாவம்!

சதீஷ்: இரு இப்படி வா! இதுலே என்ன என்ன இருக்குன்னு பார்க்கலாம்! (திறந்து பார்த்து) நாலு ஐந்நூறுரூபாய் நோட்டு இருக்கு! ஒரு ஐம்பது பைசா நாணயம்! அட! இதோ விசிட்டிங் கார்டுகூட இருக்கு!

ஜான்ஸி: அதுலே என்ன பேர் போட்டிருக்குபாரு!

சதீஷ்: கிதாநாத்! விலாசம், போன் கூட இருக்கு!

ஜான்ஸி: பத்திரமா வச்சிரு சதீஷ்! இதைத் தவறவிட்டவங்க இங்கே வந்து கேட்டா கொடுத்துடலாம்!

சதீஷ்: சார் சார்! என்ன சார் வாழைப் பழத் தோலை அலட்சியமா இப்படி வீசி எறியறீங்க! பக்கத்துலே குப்பைத் தொட்டி இருக்கு இல்லே?

நடப்பவர்: சாரி தம்பி!

(முரடன் ஒருவன் நாகரீக உடையுடன் வருகிறான்)

முரடன்: தம்பி! தங்கச்சி!

சதீஷ்: என்ன சார் என்ன வேணும்?

முரடன்: வந்து... வந்து.. என்னோட பர்ஸ் காணாம போயிட்டுது.. இந்தப் பக்கமா வரப்போதான் விழுந்திருக்கணும்! நீங்க பார்த்தீங்களா?

சதீஷ்: பர்ஸ் என்ன கலர்? எவ்வளவு பணம் வச்சிருந்தீங்க?

முரடன்: பழுப்பு கலர் பர்ஸ்! நாலு ஐநூறு ரூபாய் நோட்டு, ஒரே ஒரு ஐம்பது

"என்ன குயிலண்ணே. ரொம்ப சந்தோஷமா இருக்கீங்க!"

"எனக்கு சினிமாவுல பாட வாய்ப்புக் கிடைச்சிருக்கு."

- பா. ஜெயக்குமார்



பைசா!

ஜான்ஸி: உங்கே பேரு?

ரவுடி: கிதாநாத்!

சதீஷ்: அப்படியா? கொஞ்சம் இருங்க! எங்ககிட்டே இருக்கற பர்ஸுலே எல்லா விவரங்களும் சரியா இருக்கான்னு பார்த்துட்டு சொல்றோம்!

ஜான்ஸி: (மெதுவாக) சதீஷ்! இந்த ஆளு சொல்றதெல்லாம் சரியாத்தானே இருக்கு? பர்சைக் கொடுத்துடுவோமா?

சதீஷ்: உஷ். கொஞ்சம் பொறு! அவசரப்படாதே! எதுக்கும் இன்னொரு தடவை உறுதி பண்ணிக்கலாம்.

முரடன்: என்ன தம்பி 'செக்' பண்ணிட்டியா? சீக்கிரம் வா!

சதீஷ்: சார் கரெக்ட்! உங்க பர்ஸே தான்! உங்ககிட்டேயே கொடுத்துடறோம்! ஆனா எங்க சாரணர் சட்டப்படி, நீங்க இப்போ ஒரு படிவத்தைப் பூர்த்தி செய்து கொடுத்த பிறகுதான், இந்த பர்ஸை வாங்கிக்க முடியும். படிவம் எங்க மாஸ்டர் கிட்டே இருக்கு! அவர் மேலேதான் நின்னுக்கிட்டிருக்கார். நாங்க போய் வாங்கிக்கிட்டு வந்துடறோம்! நீங்க இங்கேயே இருங்க! ஒரே நிமிஷத்துலே வந்துடறோம்!

முரடன்: சரி தம்பி! சீக்கிரம் வா!

சதீஷ்: ஜான்ஸி வா!... (இரகசியமா) ஜான்ஸி! உடனே நீ இந்த நெம்பருக்கு போன் பண்ணு! கிதாநாத்துங்கிறவரு பேசுவாரு!

ஜான்ஸி: கிதாநாத்தா?


சதீஷ்: ஆமாம்! விவரத்தை அப்புறம் சொல்றேன்! கிதாநாத் போனை எடுத்தா ஒரு நிமிஷம்கூட தாமதிக்காம இந்த சுரங்கப் பாதைக்கு வரச் சொல்! சீக்கிரமா போ! அதோ எஸ்.டி.டி. பூத்! போ!

முரடன்: என்ன தம்பி ஏதோ படிவம் கொண்டு வரேன்னே? சும்மா வந்திருக்கே?

சதீஷ்: இதோ மாஸ்டரே வந்துக்கிட்டிருக்கார்! அவரே படிவத்தைக் கொண்டு வரேன்னார்! அதுக்குள்ளே எனக்கு நீங்க ஒரு சின்ன உதவி செய்யணும்!

முரடன்: ம்! செஞ்சுடறேன்! என்ன உதவி?

சதீஷ்: அதோ அந்த வேர்க்கடலை வியாபாரி கடையைப் பரப்பி உட்கார்ந்துகிட்டு ரொம்ப இடைஞ்சல் பண்றார்! அதனால இந்த இடத்தை சுத்தமா



''நம்ம கழுதை அண்ணனுக்கு நாட்டு நடப்பெல்லாம் நல்லாத் தெரியும்.''

''எப்படி?''

''அவர்தான் தினமும் செய்தித்தாள் சாப்பிடறாரே.''

— பா. ஜெயக்குமார்

வச்சுக்கறது ஒரு பிரச்னையாயிருக்கு!

முரடன்: அப்போ, அந்த வியாபாரியை இங்கேந்து கிளப்பிடணும்! அவ்வளவுதானே? இதோ கிளப்பிடறேன்!

(ஜான்ஸி வருகிறாள்)

சதீஷ்: ஜான்ஸி, வந்துட்டியா? என்ன போன் பண்ணியா? மெதுவா பேசு!

ஜான்ஸி: ம்! கிதாநாத்தே எடுத்து பேசினார். பக்கத்து தெருவிலேதான் அவர் வீடாம்! உடனே புறப்பட்டு வரதா சொன்னார். அந்த கிதாநாத் யாரு?

சதீஷ்: உஷ்! பேசாதே! அந்த ஆள் வரான்!

முரடன்: என்ன தம்பி பாத்தியா! அந்தக் கடைக்காரரை ஒரே மிரட்டல்லே துரத்தியடிச்சுட்டேன்!

சதீஷ்: நன்றி சார்!

முரடன்: பர்ஸைக்கொடு தம்பி! எப்போ படிவம் வந்து, எப்ப நான் பூர்த்தி செஞ்சு?

ஜான்ஸி: தொலைஞ்சது கிடைச்சாச்சு! பொறுமையா இருங்க!

சதீஷ்: அதோ படிவம் வந்தாச்சு! பின்னால திரும்பிப் பாருங்க சார்!

முரடன்: ம்! எங்கே தம்பி! ஆ! போலீஸ் இன்ஸ்பெக்டர்?

சதீஷ்: சார், நீங்கதானே இன்ஸ்பெக்டர் கிதாநாத்!

கிதாநாத்: ஆமாம்! போன் பண்ணது நீங்கதானே?

சதீஷ்: ஆமாம் சார்! இந்த பர்ஸ் கீழே கிடந்ததுன்னு நாங்க எடுத்து வச்சோம்! ஆனால் இவர் இந்தப் பர்சை தன்னோடதுன்னு சொல்லிக்கிட்டு வந்தார். இந்தப் பர்சைப் பத்தின விவரங்களையும் சரியா

சொன்னார்!

ஜான்ஸி: அப்படி இருந்தும் சதீஷ் இந்தப் பர்ஸை இவர்கிட்டே கொடுக்காம நேரத்தைக் கடத்திக்கிட்டிருந்தான்! உங்களுக்கும் போன் பண்ணி வரச்சொன்னான்! ஏன் இப்படி நடந்துக்கிட்டே சதீஷ்?

சதீஷ்: ஜான்ஸி! இந்தப் பர்ஸோட உண்மையான சொந்தக்காரர் இந்த இன்ஸ்பெக்டர் கிதாநாத் சார்தான்! இந்தப் பர்ஸுலே இருந்த இன்ஸ்பெக்டரோட போட்டோ அடையாள அட்டையை வச்சுத்தான், இவன் உண்மையான கிதாநாத்தா இருக்க முடியாதுன்னு கண்டு பிடிச்சேன்! இந்த போட்டோவை நீ கவனிக்கல்லே! இந்தாங்க இன்ஸ்பெக்டர் உங்க பர்ஸ்!

இன்ஸ்பெக்டர்: நன்றி சதீஷ்! ஏய்! ஏய் பிக்பாக்கெட் பொன்னாயிரம், எங்கே ஓடப் பாக்கறே? எலும்பை முறிச்சுடுவேன் ஜாக்கிரதை! இன்ஸ்பெக்டர்கிட்டேயே உன் பிக்பாக்கெட் வேலையைக் கச்சிதமா செய்துட்டியே!

ஜான்ஸி: அப்படின்னா, உங்க பர்ஸையே பிக்பாக்கெட் செய்து, தவறு தலா இங்க தொலைச்சுட்டு, அதையே தன்னோடதுன்னு சொல்லிக்கிட்டு வந்திருக்காரா?

இன்ஸ்பெக்டர்: ஆமாம்! பிக்பாக்கெட் பண்ணினதும் பர்ஸைத் திறந்து பார்த்துட்டு எல்லா விவரங்களையும் நினைவிலே வைச்சுக்கிட்டிருந்திருக்கான். அடையாள போட்டோ அதிலேயே இருந்ததனால இப்போ மாட்டிக்கிட்டான்! இவன் இதுவரைக்கும் ஆயிரத்துக்கும்மேல பிக்பாக்கெட் பண்ணியிருக்கான்! நல்ல வேளை, நீங்க எச்சரிக்கையா நடந்துக்கிட்டு, எனக்கு போன் பண்ணிட்டீங்க! ஜான்ஸி-சதீஷ்! உங்க துணிச்சலையும், புத்தி கூர்மையையும் நான் ரொம்பப் பாராட்டறேன்! நானும் சின்ன வயசிலே சாரணர் குழுவிலே இருந்தவன்தான்! நாளைக்கு உங்க மாஸ்டரை சந்திக்க வரேன்! ஏ! பொன்னாயிரம்! என்னடா சின்ன பசங்களைப் பாத்து பல்லைக் கடிக்கறே?' நடடா ஸ்டேஷனுக்கு!

ஜான்ஸி: சதீஷ்! அதோ அங்கே பாரு!

சதீஷ்: சார்!சார்!- நில்லுங்க!.. குப்பை போடாதீங்க சார்!

பாரீர்!

மூவர்ணக் கொடி
அங்கு
பறக்குது பாரீர் -
மூத்த தேசம் நமது
மண்ணைக்
காத்திட வாரீர்!

காவி வெள்ளை பச்சை வர்ணம்
என்ன சொல்லுது?
கதை கதையாய் சுதந்திரத்தின்
மகிமை சொல்லுது!


எத்தனையோ தேசத் தலைவர்
இரத்தம் சிந்தினர்!
இனிய நாட்டைக் காக்கத் தங்கள்
உயிரைத் தந்தனர்.


பக்தர் போல் தேசம் தானே
தெய்வம் என்றனர்!
பாரினில் நாம் சுதந்தி ரத்தைப்
பார்க்கச் செய்தனர்!

தர்ம சக்கரம் கொடி நடுவில்
சுழல்வதைக் காணீர்!
சத்தியமே வெல்லும்
என்ற
தத்துவம் பாரீர்!

வீரம் அன்பு கருணை
காந்தி
வழிகளைப் பேணி,
வெற்றிக் கொடி உலகில் மேலும்
உயர்வதைப் பாரீர்!

— பாரதி நாதன்.





வி.ர. வசந்தன்

எழுதும்

புதிய தொடர்கதை


உதயன் எங்கே?

● படிக்க வேண்டும் என்ற அளவில்லாத தாகத்தோடு வந்தான் உதயன்!

கோகுலம் செப்டம்பர் இதழில் ஆரம்பம்

● அவனைக் காணவில்லை என்றால்! எங்கே போயிருப்பான் என்று எல்லோரும் தவித்தார்கள். உங்களையும் தவிக்க வைக்க...





நசுக்கிடுவோம்!

இந்தியத் தாயை வணங்கிடுவோம்
இனிய தமிழை வளர்த்திடுவோம்!

என்றும் உண்மை உரைத்திடுவோம்
எளிமை வாழ்வு வாழ்ந்திடுவோம்!

நேசக் கரங்கள் நீட்டிடுவோம்
நேர்மையாக வாழ்த்திடுவோம்!

சாதி, மதங்கள் மறந்திடுவோம்
சமமென எல்லோரையும் எண்ணிடுவோம்!

நாட்டை உயர்த்த முனைந்திடுவோம்
நாச சக்திகள் நசுக்கிடுவோம்!

— எம். முகம்மது உசேன்,
மேல்கரைப்பட்டி.


பள்ளி

கல்வியைத் தந்திடும் பள்ளி - நல்ல
கலைகளைத் தந்திடம் பள்ளி.
ஒழுக்கம் தந்திடும் பள்ளி - நல்ல
உயர்வைத் தந்திடும் பள்ளி.

நேர்மையைத் தந்திடும் பள்ளி - நல்ல
நோக்கத்தைத் தந்திடும் பள்ளி.
மேன்மை தந்திடும் பள்ளி - நல்ல
மேதை ஆக்கிடும் பள்ளி.

— வி. பாலு, பொன்புதுப்பட்டி.





கூறுங்கள்!

மாமா எங்கள் மாமா
மேன்மை மிக்க மாமா!

தலையில் 'குல்லா' அணிந்த
தங்க நேரு மாமா!

சட்டையில் ரோஜாப்பூவை
சிரித்து அணிந்த மாமா!

குழியில் விழுந்த பந்தை
கூர்மதி கொண்டு எடுத்தார்!

மனிதருள் இவரே மாணிக்கம்
மறுக்க முடியுமோ கூறுங்கள்!

— எம்.ஏ. முஹமது அலி, சேலம் - 10.

ஆசான்!

எங்கள் வகுப்பு ஆசிரியர்
எல்லாம் அறிந்த ஆசிரியர்.

அன்பே அவர்தம் பண்பாடாம்
அறிவே அவர்தம் உரையாகும்.

முத்தாய் பாடம் கற்பிப்பார்
முதுகைத் தட்டி ஊக்கிடுவார்.

தப்பு தவறு செய்திட்டால்
தண்டிக்க சிறிதும் தயங்கிடார்!

எங்கள் ஆசான் போலொருவர்
எங்கும் உண்டோ சொல்லிடுவீர்!

— மு.சி. உம்மு அம்மாரா, லால்பேட்டை.



மீன்

நீரில் வாழும் மீன் இது
நீந்தி மகிழும் மீன் இது

சிறிய பெரிய மீன் இது
செதில் நிறைந்த மீன் இது


துடுப்பு வால் மீன் இது
துள்ளி ஓடும் மீன் இது

பிடிக்க வழுக்கும் மீன் இது
பள பளக்கும் மீன் இது

தங்க நிற மீன் இது
தூங்க மறந்த மீன் இது

எங்கள் வீட்டில் அன்பாக
அனைவரும் நேசிக்கும் மீன் இது!

— எம். சேக் உசேன், வடகரை.





மான்

துள்ளி துள்ளி ஓடுமாம்
புள்ளி கூட இருக்குமாம்!

காட்டில் சுற்றித் திரியுமாம்
காட்டுக்கு அழகு கூட்டுமாம்!

வளைந்த கொம்பும் இருக்குமாம்
வம்புச் சண்டை போடுமாம்!

மிரண்டு மிரண்டு பார்க்குமாம்
மின்னல் போலவே மறையுமாம்!

— ஹரி, மதுரை - 2.



ஆறு

மலையில் பிறந்து மகிழ்வுடனே
மண்ணில் விழுந்து பொங்கிடுவாள்
அலைகள் பெருகும் நுரையினிலே
அழகு நடனம் ஆடிடுவாள்!

அணைகள் பலவும் கடந்திடுவாள்
ஆயிரம் காலாய் பிரிந்திடுவாள்
துணைக்குப் பலரைச் சேர்த்திடுவாள்
தூய்மை யாகச் சென்றிடுவாள்!

உழவுத் தொழிலைப் பெருக்கிடுவாள்
உணவு நிரம்ப அளித்திடுவாள்
உழவர் வாழ்வை உயர்த்திடுவாள்
உலகம் அதனால் வாழ்ந்திடுமே!

கவலை ஏதும் இல்லாமல்
கடலில் சென்றே கலந்திடுவாள்
அவளை யாரென அறிவீரோ?
அவள்தான் ஆறு என்பவளாம்!

— **புதுவை செ. இராமலிங்கன்.**

குடை

வட்டமான குடையைப் பார்
வானை நோக்கும் குடையைப் பார்!
கொட்டும் மழைக்குக் கைகொடுக்கும்
கருப்பு வண்ணக் குடையைப் பார்!

வெயில் தாக்கா விதமாக
வடிவம் அமைந்த குடையைப்பார்
நொடியில் விரித்து மடித்திடவும்
நுட்பம் நிறைந்த குடையைப்பார்!

— **பா. ராஜிக் அகமது, காரைக்கால் - 2.**





மழை

உயிர்கள் வாழ்வதும் மழையாலே!
பயிர்கள் செழிப்பதும் மழையாலே!

வானம் பொய்த்துப் போனாலே,
வாழுதல் இங்கே எவ்வாறு?

மண்ணுக்கேற்ற நிறமாக
மாறுதல் மழையின் சிறப்பன்றோ!

மண்ணில் விழும் மழைத்துளிபோல்
வாழ்தல் நமக்குப் பெருமைதான்!

— **நெய்வேலி குறிஞ்சி.**

அன்னை

அன்னை அன்னை அன்னையாம்
அன்பைப் பொழியும் அன்னையாம்
என்னைப் பத்து மாதங்கள்
ஏற்றுச் சுமந்த அன்னையாம்.

பாசம் பொழியும் அன்னையாம்
பொறுமை மாறா அன்னையாம்
ஈசன் எனக்கு அருள் செய்ய,
இந்த உருவில் வந்தன்றோ!

— பு. கயல்விழி, சிங்கப்பூர்.



குருவி!



சின்னச் சின்னக் குருவி
சிறிப் பறக்கும் குருவி!

வண்ண வண்ணக் குருவி
வானில் பறக்கும் குருவி!

குப்பை சேர்க்கும் குருவி
கூடு கட்டும் குருவி!

பட்டுப் போன்ற உடலை
பேணும் நல்ல குருவி!

— ஆர். சீதாலெட்சுமி, வல்லநாடு.

குறள் படி

அறிவு பொங்கிட குறள்படி
அன்பு ஓங்கக் குறள்படி

அறம் பெருகவே குறள்படி
அநீதி நீங்கிட குறள்படி

நல்லவன் ஆகிட குறள்படி
நீதி நிலைத்திட குறள்படி

நன்றி நாடிட குறள்படி
நட்பு மலர்ந்திட குறள்படி

செல்வம் கூடிட குறள்படி
சினம் மாறிட குறள்படி

சிந்தனை ஊறிட குறள்படி
சீர்மை நிலைத்திட குறள்படி.

— க. கவிதா, கோவில்பட்டி - 2.





என்ன பண்ணுவாய்?

முத்துவும் முருகனும இணை பிரியாத நண்பர்கள். அதில் முத்து நன்றாகப் படிப்பான். ஆனால் முருகனோ, நன்றாகப் படிக்கக்கூடியவன் என்றாலும், முத்து இருக்கும் தைரியத்தில் படிக்கவே மாட்டான். ஏனென்றால், முத்துதான் முருகனுக்கு முன்னால் உட்கார்ந்து பரீட்சை எழுதுவான். அவனைப் பார்த்து எழுதி நல்ல மதிப்பெண் வாங்கி விடுவான். முத்துவுக்கு இது தெரியாது. அவனுக்கு இது தெரிந்த போது அதிர்ந்து போனான்.

அடுத்த மாதம் பரீட்சை என்பதால் முத்து நன்றாகப் படித்துக் கொண்டிருந்தான். ஆனால் முருகனோ முத்து இருக்கும் தைரியத்தில் படிக்காமல் விளை யாடிக் கொண்டிருந்தான். முத்து முருகனிடம் "டேய் முருகா, நீயும் படிக்க ஆரம்பிடா. என்னை இடம் மாற்றி உட்கார வைத்து விட்டாலோ, இல்லை எனக்கு பரீட்சை எழுத முடியாமல் போனலோ என்ன பண்ணுவாய்? படிக்க ஆரம்பி" என்று எச்சரிக்கை செய்தான்.

அதற்கு முருகன், "அட போடா! நீ இருக்கும்போது எனக்கு என்னடா பயம்? நீ பயப்படுவது மாதிரி எதுவும் நடந்து விடாது" என்று அவனுக்கு தைரியம் சொல்லி விட்டு மீண்டும் விளையாடப் போய் விட்டான்!

பரீட்சை முதல் நாள். வழக்கப்படி முருகன் முத்துவைப் பார்த்து அப்படியே பரீட்சையில் எழுதினான். அன்றைக்கே முத்துவிற்குக் கடுமையான காய்ச்சல்.

அடுத்த நாள் முத்துவால் பள்ளிக்கு வர முடியாது என்பது தெரிந்ததும் முருகன் பதறிப்போனான். புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான். மறுநாள் பரீட்சையில் முருகன் தனக்குத் தெரிந்தவற்றை மட்டும் எழுதினான். எழுதிய பிறகு வீட்டிற்கு வந்து அடுத்த பரீட்சைக்குத் தயார் பண்ண ஆரம்பித்தான். முருகன் மாறிவிட்டதை அறிந்த முத்து "முருகா, நீ சொந்தமாக முயற்சி செய்து படிக்க வேண்டும் என்பதற்காகவே நான் போட்ட நாடகம் இது" என்று சிரித்தான்.

எம்.ஸ்ரீதரன்

பரீட்சை ஹாலை விட்டு வெளியே வந்த பார்த்திபன் நண்பன் நவநீதனோடு வீட்டுக்குப் புறப்பட ஆயத்தமானான். அதற்குள் அங்கே ஓடி வந்து வழிமறித்தான் உதயன்.

"டேய் பார்த்திபா, சொன்னபடி நடக்கத் தெரியாதே உனக்கு? மொதல்லே



ஙக மேலே காசு!

காசை எடுத்து வையுடா!" படபடப்பான வார்த்தைகள் உதயனின் வாயிலிருந்து உதிர்ந்தன. பாவம், அவன் சட்டையைப் பிடித்து உலுக்காததுதான் பாக்கி.

பார்த்திபனின் முகம் அவமானத்தால் சுருங்கிச் சிறுத்தது. அவன் நிலையைப் புரிந்து கொண்ட நவநீதன், தானே வலிய வந்து, "இவனுக்கு எவ்வளவு காசு தரணும்டா பார்த்தி?" என்று கேட்டான்.

ஆனால் பார்த்திபன் வாய் திறக்கு முன்பே முந்திக் கொண்ட உதயன், "வெறும் ஐம்பது காசுதான். அதைக் கொடுக்காமே டிமிக்கியடிக்கப் பாக்கிறான். காசு இல்லேன்னா, அவனோட பேனாவைக் கொடுத்திட்டுப் போகச் சொல்லு!" என்று முகம் முறித்துப் பேசினான்.

நவநீதனால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. "அடச்சீ நிறுத்துடா. ஐம்பது காசுக்காக அவனோட பேனாவைப் பிடுங்கிடுவியோ? ஏண்டா, இவன் உன்னோட சொந்தச் சித்தியின் மகன் இல்லையா? உனக்குக் கொஞ்சமாவது அன்பு, பாசம் இருக்கா? அது கூட வேணாம்; கூடப் படிக்கிறவங்ககிட்டே எப்படி நடந்துக்கிடணும்கிற புத்தியாச்சும் உனக்கு இருக்காடா?" என்று சற்றுக் கடுமையாகவே சத்

சீனி விஜயராணி



தம் போட்டான்.

"சித்தி மகனோ, பெத்தி மகனோ? காசு விஷயத்திலே கரெக்டா நடக்கணும்!" – அடம் பிடிக்கும் தனது பாணியை விட்டு அசைவதாக இல்லை உதயனின் பேச்சு.



"இந்தா, ஐம்பது காசுக்குப் பதிலா ஒரு ரூபாயா வாங்கிக்க; பேச்சை விடு!" என்று கண்டிப்பான குரலில் அதட்டிய நவநீதன் ஒரு ரூபாயை எடுத்து நீட்ட, அதை வாங்கிக் கொண்டு வாய்திறக்காமல் அங்கிருந்து கிளம்பினான் அவன்.

பார்த்திபனைத் தன் சைக்கிளின் பின்னால் அமர்த்திக் கொண்டு மெதுவாகப் பெடல் போட்ட நவநீதன், "இந்த நச்சு வாயன்கிட்டே போயி எதுக்குடா கடன் வாங்கினே?" என்று அவனை நொந்து கொள்ளும் தொனியில் வினவினான்.

"ஐயோ, ஐயோ! நானாவது அவன் கிட்டே காசு வாங்குறதாவது? அது ஒரு பெரிய வயிற்றெரிச்சல்..." என்று பீடிகை போட்டான் பார்த்திபன்.

"கொஞ்சம் விவரமாத்தான் சொல்லித் தொலையேன்டா!"

"இன்னிக்குக் காலையிலே பரீட்சைக்கு வருகிற அவசரத்திலே என் பேனா எப்படியோ கீழே விழுந்துட்டது. ஹாலுக்குள் நுழைய அஞ்சு நிமிஷம் இருக்கப்போ தற்செயலா பேனாவைத் தேடிய எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. பையில் காணோமின்னு பதறிப் போயிட்டேன். அப்போதான் இந்த உதயன் பயல் ஞாபகம் வந்திச்சி. பெரியம்மா பிள்ளையாச்சேன்னு தேடிப் பிடிச்சி மாத்துப் பேனா இருந்தா எழுதிட்டுத் தர்றதாக் கேட்டேன். நல்ல காலம்; நான் தவற விட்ட என் பேனாவே அவன் கையிலேயே கெடச்சிருக்கு. வழியிலே கண்டெடுத்தானாம். அதை எடுத்துப் பத்திரப்படுத்தினதுக்காக ஐம்பது பைசா கொடுத்தே ஆகணுமின்னு வம்பு பண்ணினான். என் கையிலே காசு இல்லாததாலே பரீட்சை முடிஞ்சப்புறம் யாரிடமாச்சும் வாங்கித் தர்றேன்னு பிராமிஸ் பண்ணிப் பேனாவை வாங்கினேன். அதுக்காகத்தான் கடன்காரனைப்படுத்துறாப் போல என்னைப் படுத்திட்டுப் போறான்!"

"அடப்பாவி! சரியான கிராதகன்தான் போலிருக்கு! இவனெல்லாம் ஒரு படிக்கிற பையனா? கை தவற விட்ட உன் பொருளைத் திரும்ப உன் கிட்ட ஒப்படைக்கக் கூலியா? அதுவும் சித்தியின் மகன்கிட்டேயேவா? சேச்சே! நெனச்சிப் பாக்கவே நெஞ்சி கரிக்குதுப்பா!"

"நவநீதா, இதைக் கேட்டிட்டே இவ்வளவு ஆச்சரியப்படுற நீ, அவனைப் பத்தின மத்த கதைகளைக் கேட்டா அப்படியே சிலையாகிப் போயிடுவே!"

"அதென்னடா பார்த்தி?" – நவநீதனின் விழிகள் வியப்பால் விரிந்தன.

"இவன் தன் வீட்டுக்குள்ளேயே யாருக்கு உதவி பண்ணாலும் சரி; உடனுக்குடனே கூலி வாங்காமே விட மாட்டான். அம்மாவுக்காக மார்க்கெட்டுக்குப் போயிட்டு வர கை மேல ஐம்பது காசு; லைப்ரரியில் அப்பாவுக்குப் புத்தகம் மாத்திட்டு வர்றதுக்கு கை மேலே ஒரு ரூபா காசு. பாட்டி தாத்தாவுக்காகப் பக்கத்துக் கடையிலே போயி வெத்தலை பாக்கு வாங்கிட்டு வர கைமேல இருபத்தஞ்சி காசு. இப்படி ஒவ்வொண்ணுக்கும் ஒரு ரேட் வச்சிருக்கான். அதை வசூல் பண்ணாமே விடவே மாட்டான். தன்னோட தங்கைக்கு சின்ன ஜாமென்ட்ரி டிராயிங் போட்டுக் கொடுக்கிறதுக்குக் கை மேலே பத்துக் காசை வச்சாகணும். சில்லரைக் காசு இல்லாமே, இந்த மாமூல் நின்னதுன்னா, மறுநாள் அந்த வேலையைச் செய்ய முடியா

துன்னு நிமிந்துக்குவான்."

"அவனோட அப்பா அம்மா அவனைக் கண்டிச்சி புத்திமதி சொல்ல மாட்டாங்களா?"

"எங்க பெரியம்மாவும் பெரியப்பாவும் அவனுக்குப் புத்தி சொல்லிச் சொல்லி அலுத்துப் போயிட்டாங்க. தன்னோட நியாயமான கடமைகளைச் செய்யுறதுக்குக் காசு கேட்கறது கேவலமான செயல்னு எத்தனையோ சொன்னாங்க. ஆனா, அவன் அதையெல்லாம் காதிலே வாங்கினால்தானே?"

பேசிக் கொண்டே வந்ததில் தூரம் போனது தெரியவில்லை. பார்த்திபன் இறங்க வேண்டிய இடம் வந்து விட்டது. நவநீதன் அவனிடமிருந்து விடைபெறும் போது, "நீ வேணுமின்னாலும் பாரு; காசு வாங்கி ருசி கண்டுக்கிட்ட உதயனுக்கு நல்லது கெட்டது தெரியாமே போகப் போகுது. கடைசியிலே ஏதாச்சும் சிக்கல்லே சிக்கி, ஆபத்துல மாட்டிக்கிறப் போதான் அவனுக்குப் புத்தி வரப் போகுது!" என்று சொல்லி விட்டுத் தன் வழியில் சைக்கிளைத் திருப்பிக் கொண்டு புறப்பட்டான்.



ஒரு மாதம் கூட ஓடி மறையவில்லை. அதற்குள் நவநீதனின் கணிப்பு நிஜமாகும் அந்தச் சம்பவம் நிகழ்ந்து விட்டது.

உதயன் தன்னுடைய பள்ளி பேட்ஜுக்கு பாலீஷ் போட்டு வைத்திருந்தான். மறுநாள் பள்ளி ஆண்டு விழா. எல்லோரும் கண்டிப்பாக பேட்ஜுடன் வர வேண்டும் என்ற கண்டிப்பு. இல்லாவிட்டால் அபராதம் உண்டு. பளபளவென்று இருந்த வெண்கல பேட்ஜை என்னமோ தின்பண்டம் என்று எண்ணி காகம் ஒன்று தூக்கிக் கொண்டு பறந்தது. உதயன் விரட்டினான். காகம் அதைக் கிணற்றில் போட்டு விட்டுப் பறந்து விட்டது!

எதிர் வீடு உதயனின் வகுப்பு நண்பன் கணேசனுடையது. அவர்கள் வீட்டில் பாதாளக் கரண்டி இருந்தது. அதைப் போட்டு எடுத்தால் பேட்ஜ் வந்து விடும்.

உதயன் கணேசனிடம் போய்க் கேட்டான்.

"தாராளமாகத் தருகிறேன். ஆனால் பதினைந்து நிமிஷத்துக்கு வாடகை ஐந்து ரூபாய். முன்பணமா இருபது ரூபாய் தந்திட்டு பாதாளக் கரண்டியைக் கொண்டு போ" என்றான் கணேசன்.

"சும்மா தூங்கிக்கிட்டுக் கிடக்கும் பாதாளக் கரண்டியை இரவல் தர வாடகையா!" என்றான் உதயன் திகைப்புடன்.

"சும்மா பையில் வைச்சிருக்கிற பேனாவுக்கு எட்டணா வாடகை வாங்குவது எத்தனை நியாயமோ, அதைவிட நியாயமானதுதான் பாதாளக் கரண்டிக்கு வாடகை வாங்குவதும்."

உதயன் திகைத்துப் போய் நின்றான்.

எல்லோரிடம் கணக்குப் போட்டு இரக்கமின்றி நடந்து கொண்ட அதே கணக்கை, மற்றவர்கள் தன்னிடம் போட்ட போதுதான் உதயன் அதன் கொடுமையை உணர்ந்தான்.

கடமைகளைச் செய்யக் கூட காசு கணக்குப் போட்டு வந்த உதயன் இப்பொழுது முழுவதுமாக மாறி விட்டான்!




கேளுங்கள் சொல்லப்படும்!

• சூயெஸ் கால்வாயை யார் அமைத்தார்கள்? இதனால் என்ன பயன்? - தூ. சேமையா, தர்மபுரி - 2.




சூயெஸ் கால்வாய் அமைக்கப்படு முன் இந்தியாவில் இருந்து இங்கிலாந்துக்கு கடல் வழியாக 19,000 கி.மீ. பயணம் செய்ய வேண்டும். சூயெஸ் கால்வாய் அமைக்கப்பட்ட பிறகு இது 9,500 கி.மீட்டராகக் குறைந்து விட்டது. முக்கியத்துவம் புரிந்ததா? இந்தியாவையும் இங்கிலாந்தையும் இணைக்கும் குறுக்கு வழி இது. இந்தக் கால்வாயின் நீளம் 165 கி.மீ. இதை அமைத்த பெருமைக்குரியவர் Ferdinalid De Lesseps என்ற பிரஞ்சுப் பொறியியல் வல்லுநர் 1858ல் பணிகள் தொடங்கப் பட்டு, 1869ல் முடிக்கப்பட்டன. செலவு 55 கோடி ரூபாய்.

• இராமேஸ்வரம் கடல் 'பாம்பன்' என்று அழைக்கப்படுகிறதே! இந்த பாம்பன் யார்? - விசு. கணபதி, முகையூர்.




திருமால், வாமன அவதாரம் எடுத்த போது, மூன்றடி தானம் கேட்க, மாபலி என்ற (மகாபலி) சக்கரவர்த்தி வரம் வழங்கினார் அல்லவா? இந்த மாபலி சக்கரவர்த்தியின் முன் பிறவிப் பெயரே பாம்பன்

• கதருக்கும், கைத்தறிக்கும் என்ன வேறுபாடு? - வி. கமலவேலன், ராணிப்பேட்டை.




கையால், கை ராட்டை கொண்டு நூல் நூற்று, அந்த நூலைக் கொண்டு கைத்தறியில் நெய்யும் ஆடையே கதர். இயந்திரத்தால் (மிஷினால்) தயாரான நூலைக் கொண்டு, கைத்தறியில் நெய்யப்படும் ஆடையே கைத்தறி.

• சென்னை நகரத்திற்கு என்று ஏதாவது தனிச் சிறப்பு இருக்கிறதா? - வா. பெர்னாண்டஸ், கல்கத்தா - 11.



மற்ற நகரங்களுக்கு இல்லாத தனிச் சிறப்பு என்று கேள்வி இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இந்தியாவில் முதன் முதலில் நகராட்சி அமைக்கப்பட்டது இந்த சென்னை நகரில்தான். பொது மருத்துவமனை முதன் முதலாக (இந்தியாவில்) அமைக்கப்பட்டதும் இங்குதான். இந்தியாவில் உள்ள கொடிக் கம்பங்களில் மிக உயரமானது இங்குதான் உள்ளது. பட்டியல் இன்னும் நீளமானது. ஆனால் இடமில்லை!


• தேள் வயிறு வெடித்துத்தான் குட்டி (குஞ்சு) போடும் என்பது உண்மை தானா? அப்படியானால், தேள், தன் குட்டிகளைத் தானே தின்றுவிடும் என்பது சரியில்லையே? விளக்கவும் - மு. சாமன்ராவ், பெங்களூர் - 4.



தேள், வயிறு வெடித்துத்தான் குட்டி (குஞ்சு) போடும் என்பது சரியல்ல. குடும்பம் நடத்த வரும் ஆண் தேளை, குடும்பம் நடத்தி முடிந்ததும் பெரும்பாலும் பெண் தேள் தின்றுவிடும். கரு வளர இந்த இரை அவசியம். அம்மாத் தேள், குட்டிகளைத் தின்றுவிடும் என்பது முற்றிலும் சரியல்ல. குட்டி போட்டதும் அம்மாவுக்கு அகோரப் பசி இருக்கும். அதனால் ஒன்றி ரண்டு குட்டிகளைத் தின்றுவிடும். இது தவிர, குட்டிகள் வளரும் போது, ஏதாவது ஒரு காரணத்தால் அவை ஊனமாகி விட்டால், அம்மாத்தேள் அதை இரையாக்கிக் கொண்டு விடும். உறுப்பை இழந்த தேள், மற்ற தேள்களுக்கு இரையாவதைவிட, நாமே இரையாக்கிக் கொள்வோம் என்ற எண்ணத்தில்தான்!

• அணுக் கடிகாரங்கள் என்றால் என்ன? சாதாரண கடிகாரத்திற்கும் இவைகளுக்கும் என்ன வித்தியாசம்? - கு. வேதநாராயணன், மாயூரம் - 2.

எத்தனைதான் கவனமாகக் கடிகாரங்களைத் தயாரித்தாலும் அவை காலங் காட்டுவதில் ஒரு சிறிது வேறுபடுகிறது. சாதாரண மனித வாழ்க்கைக்கு இந்த வேறுபாட்டால் பாதிப்பு இல்லை. ஆனால் அறிவியல் ஆராய்ச்சிகளில் இந்த மிகச் சிறிய அளவிலான வித்தியாசங்கள் கூடப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இக் குறையைத் தவிர்க்க, மிகத் துல்லியமாக சரியான நேரத்தைக் காட்ட அணுவைப் பயன்படுத்தி கடிகாரங்களைத் தயாரிக்கும் முயற்சிகள் தொடங்கப்பட்டு, ஓரளவு வெற்றியும் கிடைத்து விட்டது. அமெரிக்கா அம்மோனியா மூலக் கூறைப் பயன்படுத்தி அணுக் கடிகாரம் தயாரித்துள்ளது. இந்த கடிகாரம் கூட ஒரு வினாடி வித்தியாசம் காட்டித்தான் ஓடும். ஆனால் எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை தெரியுமா? 15 ஆண்டுகளுக்கு ஒருமுறை! சீசியம் (Casium) மூலக் கூறைக் கொண்டு தயாரிக்கப்பட அணுக் கடிகாரம் 300 ஆண்டு




சேரநம்பி

களுக்கு ஒரு வினாடி வித்தியாசம் காட்டி ஓடும்!

• ஐ.நா.சபையின் சின்னத்தைச் சுற்றி லும் கீழ்ப்பகுதியில் இருந்து, அணைத்தது போல் மேல் பக்கமாக இலைகள் காணப் படுகின்றனவே! இவை எந்த மரத்தின் இலைகள்? இல்லை வெறும் அலங்காரத் திற்காகத்தானா? - மே. சாலிமர், மொரப்பூர்.




ஐக்கிய நாடுகள் சபையின் சின்னத் தைச் சுற்றிலும் காணப்படுவது ஒலிவ (ஆலிவ்) மரத்தின் இலைகளே. சமாதானத் தின் சின்னமாக ஒலிவ மர இலைகளைத் தருவது ஐரோப்பிய நாடுகளின் வழக்கம். எனவே அமைதியைத் தருவதாக இது இடம் பெற்றுள்ளது.



• ஏற்கெனவே சுவரில் அடிக்கப்பட் டுள்ள ஆணியை எடுக்க, சுத்தியலைப் பயன்படுத்துகிறோமே, இதில் பயன்படும் சக்தி எது? அறிவியல் அடிப்படையில் பதில் தேவை. - மொ. எத்திராசன், கரூர் - 2.

சுத்தியலின் பிடுங்கும் முனைக்கு, அதிக அளவிலான இழுக்கும் சக்தி ஊட்டப் பட்டு ஆணி பிடுங்கப்படுகிறது. நெம்பு கோல் தத்துவம் பயன்பட்டு, இழுக்கும் சக்தி, சுத்தியலின் பிடுங்கும் முனையில் திரட்டப்பட்டு, ஆணி மேல் நோக்கி இழுக் கப்படுகிறது.

• ஓவியர்கள் கவிஞர்களாக இருக்க முடியுமா? - தா. வேழவேந்தன், பரங்கிப் பேட்டை.



ஏன் முடியாது? இரண்டுமே கலை உணர்வின் வெளிப்பாடுதானே? உலகப் புகழ் பெற்ற ஓவியர் மைக்கலாஞ்சிலோ ரோம் நகரில், போப் பாண்டவரின் விருப் பப்படி பல ஓவியங்களைத் தீட்டியவர். இவர் அவ்வப் பொழுது கவிதைகளும் படைத்து வந்தார். ரவீந்திரநாத் தாகூர் கூட ஓவியர்தானே?

• பகவான் ரமண மகரிஷி அவர்




களின் இயற்கைப் பெயர் என்ன? சொந்த ஊர் எது? அவர் ஏதாவது புத்த கங்கள் எழுதியிருக்கிறாரா? - சு. அடைக் கல ராஜ், வேளாங்கண்ணி.

ரமண மகரிஷி அவர்களின் இயற் பெயர் வேங்கட்ராமன் என்பது. இராம நாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருச் சுழியே அவரது சொந்த ஊர். பக்தி

நெறியை அன்பு மார்க்கமாகப் பரப்பிய இப்பெரியார் எழுதிய நூல்களுள் குறிப்பிடத்தக்கவை அருணாசல துதி, பஞ்சகம், உபதேச உந்தியார், உள்ளது நாற்பது ஆகியவை. சில மொழி பெயர்ப்பினையும் செய்துள்ளார். இந்திய அரசு இம்மகானது நினைவைப் போற்றும் வகையில் தபால் தலையை வெளியிட்டுள்ளது.

* **International Time Line என்பது என்ன? இ. சங்கரி, மேட்டுப்பாளையம்.**

சர்வதேச காலக்கோடு என்ற International Time Line என்பது நமது வசதிக்காக ஏற்படுத்திக் கொண்ட கற்பனைக்கோடு. பூமி தன்னைத் தானே சுற்றிக் கொண்டு, சூரியனையும் சுற்றி வருவதால் பூமியின் ஒரு இடத்தில் உள்ள நேரம் மற்றொரு இடத்தில் இருக்காது. மாறுபடும். இந்தக் குழப்பத்தைச் சரி செய்து கொள்ள உருவாக்கப்பட்ட கற்பனைக் கோடே இது. இது ஆசியாக் கண்டத்துக்கும் அமெரிக்கக் கண்டத்துக்கும் இடையே பசிபிக் கடல் வழியாகச் செல்கிறது.




* **இதுவரை குழந்தை இலக்கியம் படைத்தவர்கள் யாருக்காவது நோபல் பரிசு கிடைத்திருக்கிறதா? - மார்ட்ஹட்சன், பாளையம்கோட்டை.**



ருட்யார்டு கிப்ளிங் (Rudyard Kipling) இருக்கிறாரே. இவர் நமது பம்பாயில் பிறந்தவர். 1907 ல் நோபல் பரிசு பெற்ற இவர் சிறந்த குழந்தை இலக்கியப் படைப்பாளி. 1913 ல் நோபல் பரிசு பெற்ற ரவீந்திரநாத் தாகூரும் கூட குழந்தைகளுக்காகவும் எழுதியவர்தானே.


* **குருநானக்கும் கபீர்தாசரும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்களா? - வா. குட்டியப்பன், இரணியல்**



சீக்கிய மதத்தை நிறுவிய குருநானக்கும், கபீர்தாசரும் சம காலத்தில் வாழ்ந்தவர்களே, இருவரும் கீர்த்தனைகள் இயற்றுவதில் திறமை பெற்றவர்கள். அது மட்டுமா? சீக்கியர் வேத நூலாகிய "ஆதிகிரந்த்"தில் கூட இருவரும் இயற்றிய பல கீர்த்தனைகள் அடங்கியுள்ளன.

* **குறிஞ்சி மலரின் நிறம் நீலம்தானே? இது செடியா மரமா? - வா. கப்பையன், அறந்தாங்கி.**


12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் குறிஞ்சி மலரின் வண்ணம் நல்ல ஊதா நிறம். ஆனால் வெண்மை, மஞ்சள்




வண்ணக் குறிஞ்சி மலர்களும் உண்டு. அதிக அளவில் காணப்படுவது ஊதா மலர்களே. குறிஞ்சி செடியாகவும் வளரும். குற்று மரமாகவும் வளரும். இதில் 200 இனங்கள் உண்டு.

* கடைத் தெருவில், உயரத்தில் ஒட்டப்பட்ட வண்ண விளம்பர சுவரொட்டிகள் நாளடைவில் வண்ணம் மங்கி வெளுத்து விடுகின்றனவே! என்ன காரணம்? - மா. முத்துவேல், விருதுநகர்.

சூரியனிடம் இருந்து பெறும் வெயிலுக்கு வண்ணங்களை மங்க வைக்கும் ஆற்றல் இயற்கையாகவே இருக்கிறது. அதோடு காற்றில் உள்ள வேதிப் பொருள்களும் சேர்ந்து போஸ்டரில் உள்ள வண்ணங்களை மெதுவாக வெளுக்க (Bleach) வைக்கின்றன. இப்படியே தினமும் நடக்க, நாளடைவில் வண்ண போஸ்டர், வண்ணப் பொலிவு இழந்து வெறும் வெள்ளைத் தாளாகி விடுகிறது.





* முதல் இதய மாற்று சிகிச்சையைச் செய்தவர் யார்? யாருக்கு இது செய்யப்பட்டது? - வி. தேவானை, கல்லுப்பட்டி, புதுகை.


முதல் இதயமாற்று அறுவை சிகிச்சை கேப்டவுனில் (தென் ஆப்பரிக்கா), டிசம்பர் 3 ஆம் நாள் நடை பெற்றது. ஆண்டு 1967. இந்த அரிய சாதனையை டாக்டர் கிறிஸ்டியன் பர்னார்டு என்பவர் தனது உதவியாளர்களுடன் செய்தார். செய்து கொண்டவர் 55 வயதான சொயா வாஷ் கான்ஸ்கி என்பவர்.

"பேரன் பிறந்திருக்கான்னு போன வாரம் தான் லீவு போட்டீங்க; இன்னைக்கு மறுபடியும் பேரன் பிறந்திருக்கான்னு சொல்றீங்களே?"

"ஹி...ஹி... போன வாரம் பொண்ணு வயிற்றுப் பேரன் சார்; இது, பிள்ளை வயிற்றுப் பேரன்!"

– சீர்காழி வி. ரேவதி





* கம்பருக்கு முன்னால் இராமாயணம் தமிழில் இருந்திருக்கிறதா? - திருமா. சொக்கநாதன், மணியாச்சி.

இருந்திருக்கிறது என்பதை தொல்காப்பிய உரை பேராசிரியர்களின் குறிப்பு காட்டுகிறது. ஆனால், நூல்களின் பெயர் தெரியவில்லை.

கொண்டையை மடக்குமா கொண்டலாத்தி?

ரேவதி



தலையை ஆட்டி ஆட்டிப் பறந்து கொண்டிருந்த பாபுவின் பட்டத்திற்கு ஆபத்து வந்து விட்டது. மாணிக்கத்தின் கதவுப் பட்டம், "விர்விர்" என்ற சத்தத்துடன் நொடியில், மேலே ஏறி, பாபுவின் பட்டத்திற்கு அருகே வந்து விட்டது. அதன் கனத்தால் நூலுக்கு ஏற்பட்டிருந்த விறைப்பும், அறுக்கும் கூர்மையும் பிளேடுக்குக் கூட இருக்காது!

"டேய் மாணி... வேண்டாண்டா... என் காற்றாடி விளையாட்டுப் பட்டம்டா. உன்னுது பந்தயக் காற்றாடிடா. அறுத்துடாதேடா. நானே என் பட்டத்தை இறக்கிக்கிறேன்" என்று கெஞ்சியபடி, பாபு தன் பட்டத்தை அவசரம் அவசரமாகக் கீழே இறக்கிக் கொண்டிருந்தான்.

"மாணிக்கண்ணா, என் குஞ்சத்தை வேற பட்டத்தோட கட்டியிருக்காங்க. வெட்டினா, பட்டத்தோடு குஞ்சமும் எங்கேயாவது போய் விழுந்துடும். கண்டு பிடிக்க முடியாது" என்று கெஞ்சினாள் கோதை.

மாணிக்கம் எதையும் பொருட்படுத்தவில்லை.

"இதுவரை இந்தக் காற்றாடி சீசனில் ஐயாவோட கதவுப் பட்டம் நாற்பத்தொன்பது காற்றாடிகளை அறுத்து வெற்றிக் கொடி நாட்டியிருக்கு. இது ஐம்பதாவது பட்டம். இதையும் வெட்டிட்டால், என் பட்டம் பொன் விழாக் கொண்டாடும்" என்று வெறித்தனமாக இருந்தான் பாபு.

தன் பட்டத்தைக் காப்பாற்ற பாபு செய்த முயற்சிகள் எதுவும் பயன் பெறவில்லை.

"விர்ர்ர்...ர்...!"

மேலே தலைநிமிர்ந்த அதே வேகத்தில் தலையைத் தாழ்த்தி இறங்கிய கதவுப் பட்டம், பாபுவின் காற்றாடி நூலுக்குள் நுழைந்து மறுபடி உயர்ந்தது.

அவ்வளவுதான்! நூல் அறுந்து பாபுவின் பட்டம் இறங்கி நெளிந்து நெளிந்து மறைந்து விட்டது!

"ஐம்பது காற்றாடிகளை அறுத்த காற்றாடி மன்னன் மாணிக்கம் வாழ்க!" என்று ஒரு சிறுவன் குரல் எழுப்பினான்.

"மாணிக்கண்ணே, சொல்லச் சொல்லக் கேட்காம பட்டத்தை அறுத்து காணாம பண்ணிட்டீங்க. அதில் கட்டியிருந்த குஞ்சம்,



சுதாகிட்ட இரவல் வாங்கிக்கிட்டு வந்தது" என்றான் கோதை.

"ஐயையோ! இதை ஏன் முன்னா டியே சொல்லலே கோதை?" என்று பதறினான் மாணிக்கம்.

"அப்ப உன் தங்கை சுதாவு துன்னா ஒரு நியாயம். என்னு துன்னா ஒரு நியாயமா? இரு, நல்லா சிக்கிக்கிட்டே. ஐம்பது காற்றாடிகளை அறுத்த காற்றாடி மன் னனா?" என்று பல்லைக் கடித்தாள் கோதை.

"கத்தாதே கோதை. இப் பவே போய், காற்றாடியைக் கண்டுபிடித்து விடலாம். பாபு நீயும் வா."

பொன்விழா கொண் டாடிய பெருமிதம் ஒளிந்து கொள்ள, மாணிக்கம் தானே அறுத்த காற்றாடியைத் தேடிக் கொண்டு கிளம்பினான். பாபு, கோதையுடன் ஒரு பட்டா ளமே பின்தொடர்ந்தது.

ஆற்றங்கரை ஓரமாக இருந்த சிவன் கோவில் நந்தவனத்தில்தான் அந்தக் காற் றாடி மரத்தில் சிக்கித் தலைகிழாகத் தொங் கிக் கொண்டிருந்தது.

இவர்கள் நுழையும்போதே "ஊபூ... ஊபூ" என்ற ஏதோ ஒரு பறவையின் இனிய குரல் வரவேற்றது.

கோதை அவசரம் அவசரமாகத் தன் பைக்குள் வைத்திருந்த பைனாகுலரை எடுத்து வைத்து சுற்றுமுற்றும் நோக்கி னாள்.

"என்னம்மா பார்க்கறே?" என்று கேட்டபடி தோட்டக்காரர் தன் குடி சையை விட்டு வெளியே வந்தார். சிறுவர் பட்டாளத்தைக் கண்டதும் அவர் முகம் கடுமையானது. "எங்கே வந்தீங்க இத்தனை பேரும்? கண்டபடி செடி கொடிகளை மிதிச்சு பூச்செடிகளைப் பாழ்பண்ணா தீங்க" என்றார்.

"அறுந்த காத்தாடியைத் தேடிக்கிட்டு வந்தோம். அதோ வில்வ மரத்தின் உச்சி யில் சிக்கிட்டிருக்கு பாருங்க" என்றான் பாபு.

"வில்வமரம் உறுதியானது இல்லே. அத னால அது மேல ஏறக் கூடாது. மூங்கி

லைக் கட்டிப் பார்க்கலாம். ஆனா காத்தாடி உருப்படியா கிடைக்காது."

தோட்டக்காரத் தாத்தா பாபு-கோதைக்குத் தெரிந்தவர். ஆதலால் உதவ முன்வந்தார். அவரே இரண்டு மூங்கில்களைப் பிணைக்க, பட்டாளம் அவரைச் சுற்றி உட்கார்ந்து கொண்டது.

"என்னவோ அருவருப்பான வாடை வருதே தாத்தா!" என்று முகத்தைச் சுளித்தான் பாபு.

"பட்டுப் போன கொய்யா மரத்துல கொண்டலாத்தி கூடு கட்டிருக்கு. அது தான் இத்தனை நாத்தம்."

"இத்தனை பூக்களின் வாசனையையும் மீறி இப்படி வாடை அடிக்குதே! இதை ஏன் தாத்தா உள்ளே சேர்க்கறீங்க?"

"கொண்டலாத்தி கூடுதான் இத்தனை வாடையே தவிர, இது என்னைப் போன்ற தோட்டக்காரர்களுக்கு நல்ல நண்பன். செடிகளுக்குத் தீங்கு செய்யும் புழு பூச்சிகளை இது இரையாக்கிக் கொண்டு விடும். தோட்டத்துலே இது இருந்தால் செடிகளுக்குப் பாதுகாப்பு."

"ஊபூ ஊபூ" சத்தம் அருகில் கேட்டது. கோதை பைனாகுலரை வைத்துப் பார்த்தான். இரண்டு அழகான பறவைகள், விளாம்பழ மரக் கிளையில் உட்கார்ந்து குரல் கொடுத் தன.

கோதை பறவைகளின் உருவத்தை விளக்க, பாபு பென்சிலை எடுத்துக் குறித்துக் கொண்டான்.

"வெளிர் மஞ்சள் நிறம். மைனா, புறா அளவு. முதுகு, இறக்கை, வால் பகுதிகளில் வரிக்குதிரை மாதிரி கருப்பு வெள்ளைப் பட்டைகள். தலையில் விசிறிக் கொண்டை. அலகு மெலிந்து சற்று வளைந்து நீண்டது. இறகுகளின் நுனி கருப்பு."

கோதையிடம் இருந்து பைனாகுலரை வாங்கி எல்லாச் சிறுவர்களும் பார்த்தனர். இதற்குள் இரண்டு பறவைகளும் பறந்து விட்டன.

தோட்டக்காரர் மூங்கில் கழியால் வில்வ மரத்தில் சிக்கியிருந்த காற்றாடியை எடுத்துக் கொடுத்தார். கட்டியிருந்த குஞ்சத்தைப் பிரித்து கோதையிடம் கொடுத்தான் மாணிக்கம்.

அடுத்த நாள் பள்ளியில் ஓவிய வகுப்பு. "உங்களுக்குத் தெரிந்த ஒரு பறவையின் படத்தை வரைந்து காட்டுங்கள்'' என்றார் ஆசிரியர்.

முந்தின தினத்தன்று கொண்டலாத்தியைப் பார்த்திருந்த மாணிக்கம், பாபு, கோதை, ரங்கு, திருமலை ஐவரும் அதையே வரைந்தனர்.

"இதென்னது! உன்னுடைய கொண்டலாத்திக்கு விசிறிக் கொண்டையே இல்லையே!" என்று மாணிக்கத்திடம் கேட்டான் கோதை.

''என்னுடைய கொண்டலாத்திக்கும் கூடத்தான் இல்லை. நாங்க பார்க்கும் போது கொண்டை இருக்கவில்லை'' என்றனர் பாபு, ரங்கு திருமலை.

"ஒருவேளை நாங்கள் பார்த்தது பெண் பறவையோ என்னவோ!'' என்றான் மாணிக்கம்.

ஓவிய ஆசிரியராலும் இந்தச் சந்தேகத்தைத் தீர்க்க முடியவில்லை. "சாதாரணமாக ஆண் பறவைகளுக்குத்தான் கொண்டை இருக்கும். சேவல், மயில் எல்லாம் இப்படித்தானே?" என்றார்.

இருந்தாலும் பாபுவாலும், கோதையாலும் மனதை சமாதானம் செய்து



கொள்ள முடியவில்லை. தாங்கள் வரைந்த படங்களை எடுத்துக் கொண்டு அன்று மாலையே தோட்டக்காரத் தாத்தாவைத் தேடிக் கொண்டு போனார்கள். ஓவிய ஆசிரியரும் கூடவே வந்தார்.

படங்களைப் பார்த்த தாத்தா, மகிழ்ந்து போனார். "கண் பார்த்தா கை பேசும் பாங்க. உங்க விஷயத்திலே இது சரியாப் போச்சு. கொண்டலாத்தியை எத்தனை அழகா படமா வரைஞ்சிருக்கிங்க தம்பி!" என்று வியந்து கொண்டார்.

"தாத்தா, உங்க பாராட்டுக்கு நன்றி. ஆனா, இப்ப நாங்க வந்திருக்கிறது பாராட்டைக் கேட்க இல்லே. கொண்டலாத்திக்கு கொண்டை உண்டா இல்லையா?" என்று கேட்டான் பாபு.

"கொண்டை இல்லாத கொண்டலாத்தி, பெண் பறவைதானே?" என்று கேட்டான் மாணிக்கம்.

"கொண்டலாத்தி பறவையில் ஆண் பெண் இரண்டுக்குமே அழகா, ஒரே மாதிரி கொண்டை உண்டு. வேணும் போது கொண்டையை விரிக்கும். வேண்டாதப்போ சுருக்கிக்கிடும். அலகால் மண்ணைக் கிளறும் போது கொண்டை இறகுகள் பின்னோக்கி தலையில் மடிந்து கொள்ளும். அபாயமோ, அதிர்ச்சியோ ஏற்பட்டால் சிறகுகள் சிலிர்த்து நிற்க, கொண்டையை விரித்துக் கொள்ளும்."

ஓவிய ஆசிரியர் உட்பட எல்லோரும் திகைத்து நின்றனர்.

அறிவியல் உண்மைகள்

❁ கொண்டலாத்தி (HOOPOE) சாதாரணமாக எங்கும் காணப்படும் அழகான சிறிய பறவை. புறா அளவு. விலங்கியல் பெயர் UPUPA EPOPS. குடும்பம் UPUPIDATE.

❁ கூட்டமாகவும் தனியாகவும் வசிக்கும். வயல்வெளி, தோட்டம், பூங்காக்களில் உள்ள பூச்சி, புழுக்களே இரை.

❁ ஆண் பெண் இரண்டுக்கும், மடக்கி விரிக்கக்கூடிய சிறகுக் கொண்டை உண்டு.

❁ நீண்ட சற்று வளைந்த மெல்லிய ஆனால் உறுதியான அலகு. இதால் மண்ணைக் கிளறும், தோண்டும். பூச்சி புழு பிடிக்கும்.

❁ தோட்டங்கள், வீட்டுச் சுவர்களின் பிளவுகளில், கோணாமாணா கூடு கட்டும். இதன் கூடு இருக்கும் இடத்தில் அருவருக்கத்தக்க வாடை வீசும். "ஊபூ... ஊபூ" என்று குரல் கொடுக்கும்.

❁ 5 அல்லது 6 முட்டைகள் இடும். பெண் அடை காக்க, ஆண் இரை தேடி வரும். முட்டைகள் அழுக்காக; தொட முடியாதபடி இருக்கும். இது இயற்கை அளித்துள்ள பாதுகாப்பு.


❁ இது விவசாயிகளின் நண்பன். மீன் கொத்திக்கும் மரங்கொத்திக்கும், கொண்டலாத்திக்கும் வித்தியாசம் தெரியாமல் பலரும் தவிப்பார்கள். நீங்கள் அப்படி இல்லையே!

"ஏன் இந்த வினாவுக்கு விடை 50-ஆம் பக்கம் 6-ஆம் எண் கேள்வியின் விடையை எழுதுகன்னு எழுதி இருக்கே?"

"நோட்ஸில் அப்படித்தான் இருந்தது சார்!"

— நாகை. சு. சங்கர்தயாள்





"சார், 'B' க்கு குளிருமா?"

"ஏண்டா?!"

"அது 'AC'க்கு நடுவுல இருக்குதே....!"

— நெய்விளக்கு கார்த்திக்

பாதியில் நின்ற பந்தயம்!

கூத்தபிரான்

அந்தத் தெருவுக்கே திடீரென்று கௌவரம், அந்தஸ்து, பிரகாசம் எல்லாம் வந்தது. காரணம், அந்த சின்னத் தெரு பூராவும் சோடியம் விளக்குகளின் பிரவேசம்.

அதே தெருவிலே ஒரு பாட்டி ரொம்ப நாளா இட்லி வியாபாரம் செய்துக்கிட்டு எளிமையா வாழ்ந்துக்கிட்டு வர்றாங்க. உறவுன்னு யாரும் கிடையாது. காசைத் தட்டுலே போட்டுக்கிட்டு, "இட்லி பாட்டி"ன்னு கூப்பிட்டுக்கிட்டு வர்ற பிள்ளைங்களைக் கண்டால், பாட்டிக்குப் பரவசம்; பிரியம்; பாசம்.

"வாடா என் ராசா. உட்காரு. நல்லா இருக்கியா? படிக்கிறியா? விளையாடறியா? இரு. இட்லி வெந்துகிட்டு இருக்கு. எடுத்து சூடாத் தர்றேன்"னு சொல்லிக்கிட்டு குழந்தைகளுக்கு திருஷ்டி சுத்தி நெத்தியில் சொடிக்கிக் கொள்வாள். ஊரார் பிள்ளைகளைப் பார்த்து சந்தோஷப்படுவாள். பாட்டி குடிசைக்கு நேரயும் ஒரு சோடியம் விளக்கு. அதனால் பாட்டியின் குடிசைக்கே ஒரு தனி களை கூடியது. பாட்டிக்கு காவலா ஒரு நாய், ரொம்ப நாளா பாட்டியோட வீட்டிலேயே இருக்கு. பாட்டி கடைக்குப் போனால் கூடவே போகும். கோவிலுக்குப் போனாலும் பின்னாலேயே போகும். பாட்டி தூங்கிட்டாளான்னு நல்லா தெரிஞ்ச பிறகுதான், குடிசைக்கு வெளியே வந்து படுக்கும். அத்தனை அறிவு, பாசம்; நன்றி எல்லாம்.

அந்த நாய் இப்போ குட்டி போட்டிருக்கு. ஒரே சந்தோஷம். குட்டிகளைப் பாட்டி, ஆசை ஆசையா எண்ணிப் பார்த்தா. அஞ்சு. எல்லாம் அழகான குட்டிகள்! கருப்பு, வெள்ளை நிறத்திலே ஒன்று. முழுசா கருப்பா ஒன்று. பழுப்பு நிறத்திலே ஒன்று. காதும், வாலும் மட்டும் வெள்ளை, உடம்பு கருப்பா ஒன்று.

ஐந்தாவது நாய்க் குட்டி பால் போல. பாட்டி வீட்டு நாய், குட்டி போட்டிருப்பது தெரிந்தவுடனே, தெருப் பிள்ளைங்க, கூட்டம் கூட்டமா பார்க்க வந்தாங்க. பாட்டியைப் பார்த்தாங்க.

"நாங்க நாய்க் குட்டிகளைப் பார்க்கணும். ஆசையாயிருக்கு."

"எத்தனை குட்டி




போட்டிருக்கு?"

"நாய்க் குட்டிகளை எட்டயிருந்தே பார்த்துட்டுப் போறோம்."

"நாங்க எடுத்துக்கிட்டுப் போயிட மாட்டோம்."

"எத்தனை கலரு?"

பாட்டி, சிரித்துக் கொண்டே ஒரு முறத்



திலே, மெத்தை போல துணியைப் போட்டு அதுலே கண்கள் திறக்காத, நாய்க் குட்டிகளை வைத்துக் கொண்டு வந்து காட்டினாள்.

"பாருங்கடா எத்தனை கலரு பாருங்க! குட்டிக் காலுங்களைப் பாருங்க! டேய், வாலுங்களா, நாய்க்குட்டிகளோட வாலுங் களையும் பாருங்கடா"ன்னு சிரிச்சுக் கிட்டே சொன்னாள் பாட்டி.

நாய்க்குட்டிகளைப் பார்த்த சந்தோஷத் திலே பிள்ளைகளும் திரும்பினாங்க. தெருப் பிள்ளைங்களுக்கு எடுத்துக் காட்டி, பேசிக்கிட்டிருக்கிறதைப் பார்த்த பெரிய நாய் பாட்டி பக்கத்திலேயே நின்னு, பாட்டி மூஞ்சியையும், பசங்க மூஞ்சியை யும் மாறி மாறி கவனமா பார்த்துக்கிட்டு இருந்து, பாட்டி நாய்க் குட்டிகளை உள்ளே கொண்டு போகும் போது அதுவும் பின்னாலேயே போச்சு.

கொஞ்ச நேரம் பொறுத்து கையில் டம் ளருடன் வந்து பாட்டியின் முன்னால் நின் றான் பாபு.

"பாட்டி, குட்டிங்களுக்குப் பால் கொண்டு வந்திருக்கேன்."

"இத்தனை பசங்க வந்து பார்த்தாங் களே. எல்லாருமே வெறுங்கையை வீசிக் கிட்டுத்தானே வந்தாங்க? இவன் மட்டும் தானே பாலோடு வந்திருக்கிறான்!" என்று



வியந்து கொண்டே அவனைக் குட்டிகளிடம் அழைத்துப் போனாள் பாட்டி.

நாய்க் குட்டிகளைப் பார்த்த பாபுவுக்கு ஓரே சந்தோஷம். காரணம், நாய்க் குட்டிகள் அத்தனையழகு.

"பாட்டி! பாட்டி, இந்த நாய்க் குட்டிகளை நாம பத்திரமா பார்த்துக்கணும்"ன்னு சொல்லிக்கிட்டே, நாய்க் குட்டிகளைத் தொட்டுத் தூக்கப் போனான் பாபு. அதுவரை பேசாம படுத்துக்கிட்டு இருந்த தாய் நாய், படக்னு எழுந்து நின்றது.

இதைக் கவனிச்ச பாட்டி, "பாபு தம்பி! தொடாம பாரு. அதுங்க ஆத்தாவுக்கு பிடிக்கல்லே. அதன் கோபத்தைப் பாரு!" என்றாள்.

ஒரு வாரம் ஓடிப் போச்சு. இட்லிக்காரப் பாட்டி வீட்டிலே, அழகான நாய்க் குட்டிகள் வளர்ந்துகிட்டு வர்ற செய்தி அந்தப் பேட்டை பூரா பரவிப் போச்சு. பள்ளி செல்லும் போதும், வரும் போதும் பிள்ளைங்க நாய்க் குட்டி தரிசனத்துக்காக, மகிழ்ச்சியோடும் வியப்போடும் காத்திருந்தார்கள்! பாட்டியின் குடிசைக்கு முன்னால் கூட்டம் கூடி நின்றார்கள்.

மூணு மாசம் ஓடிப் போச்சு. பாட்டியாலே, நாய்க் குட்டிகளை பத்திரமா பார்த்துக்கிறது பெரும்பாடாயிக்கிட்டே போச்சு. இருந்தாலும் நாய்க் குட்டிகளைக் கண்ணும் கருத்துமா பாசத்தைக் கொட்டி வளர்த்தாள். ஊர்க் குழந்தைகள் காலையும் மாலையும் திரண்டு வந்து பார்த்து மகிழ்ந்தார்கள். பாபு தினம் ஒருவேளையாவது வந்து நாய்க் குட்டிகளுக்கு பால் ஊத்தி வைப்பான். அதுங்களும் தட்டைச் சுத்தி வட்டமா நின்னு பால் குடிக்கும். இந்த அழகை, போட்டோ எடுக்க வசதியில்லியேன்னு பாபு, தினமும் வருத்தப் படுவான்.

அன்றைக்கு பொழுது விடிஞ்சதும் விடியாததுமா பாட்டி தெருவிலே வந்து நின்னு, "என் கண்ணுங்களைக் காணுமே! என் குட்டிகளைக் காணுமே! யாரோ திட்டம் போட்டு, ஐந்து குட்டிகளையும் சொல்லி வெச்ச மாதிரி கொண்டு போயிட்டாங்களே! கல் மனசுக்காரங்க ஒரு குட்டியைக் கூட அம்மாவுக்கு விட்டு வைக்கலியே! நான் என்ன செய்வேன்? இந்த அநியாயத்தைக் கேட்க யாருமில்லியா?" என்று பெரிதாகப் புலம்பினாள்.

ஐந்து குட்டிகளைப் பறிகொடுத்த அம்மா நாயைப் பாட்டி அணைத்துக் கொண்டு அழுதபோது ஊர்க் குழந்தைகள் கண் கலங்கினர்.

"எப்படியாவது கண்டுபிடிச்சுடலாம்" என்று பாபு, பாட்டிக்கு ஆறுதல் சொன்னான்.

நாட்கள் ஓடின. பக்கத்தூரிலே திருவிழா. அதில் புதுமையாக, நாய்க் குட்டி

ஓட்டப் பந்தயம் நடக்கப் போவதாக அறிவிப்பு வந்தது. அந்தப் பந்தயத்துல காணாம போன நாய்க் குட்டிகளும் வரலாம் என்று பாட்டி எண்ணினாள். பாபுவுக்கும் அந்தச் சந்தேகம் இருந்தது. பந்தயத்தன்று இருவரும் முன்னதாகவே கிளம்பிப் போனார்கள்.

விளையாட்டு மைதானத்தில் அலங்காரத் தோரணங்கள். ஓடு பாதைகளைக் குறிக்க, சுண்ணாம்புக் கோடுகள் எல்லாம் போட்டுத் தயாராயிருந்தது. மாலை நாலு மணிக்குப் பந்தயம். பிற்பகல் இரண்டு மணியிலேர்ந்து பந்தயம் நடக்கிற மைதானத்திலே கூட்டம் கூட ஆரம்பித்து விட்டது. பந்தயம் தொடங்கும் நேரம் நெருங்கிக் கொண்டே இருந்தது. பாபுவுக்கும் பாட்டிக்கும் நிலைகொள்ளவில்லை.

ஒலிபெருக்கியில், பந்தயத்தில் கலந்து கொள்பவர்களுக்கு என்று ஓர் அறிவிப்பு வந்தது. பாட்டியும், பாபுவும் உன்னிப்பாகக் கவனித்தனர். "நாய்க் குட்டிகளோடு, அதன் உரிமையாளர்கள் களத்திற்கு வரவும் என்றது அறிவிப்பு. பாபு, பாட்டி இருவரும் தவித்தனர்.

சொல்லி வைத்தாற்போல, ஐந்து சிறுவர்கள் வந்தனர். கையில் ஆளுக்கொரு நாய்க்குட்டி! ஐந்து பேரும் வரிசையாக வந்து நின்றார்கள். எல்லோருமே கொஞ்சம் பெரிய சிறுவர்கள்.

"பாபு தம்பி, நல்லாப் பாருடா. நம்ம நாய்க்குட்டிகளா?"

"நிச்சயமாத் தெரியலையே பாட்டி! ஓடி வரட்டும். பார்த்துக்கலாம்" – பாட்டியின் தவிப்புக்கு சமாதானம் சொன்னான் பாபு.


ஒலிபெருக்கியில் அறிவிப்பு தொடர்ந்தது.

"நடுவர் முதல் விசில் ஊதியவுடன் நாய்க் குட்டிகளோடு வந்து நிற்க வேண்டும். இரண்டாவது விசில், நாய்க் குட்டிகளை ஓட விடத் தயாராகக் குறிப்பிட்ட ஒரு பாதையில் நிறுத்த வேண்டும். மூன்றாவது விசில், நாய்க்குட்டிகளை ஓட விட வேண்டும்" என்று விதிமுறைகள் ஒலித்தன.

சொன்னபடி, மூன்றாவது விசிலும் ஊதி, நாய்க்குட்டிகள் பந்தயத்தில் ஓட விடப்பட்டன. ஒரே கைதட்டல் ஒலி! ஓடு பாதையில் நாய்க்குட்டிகள் பயந்து பயந்து மெதுவாக, கூட்டத்தினை சுற்றுமுற்றும் பார்த்தபடி ஓடின. திடீரென்று ஓடு பாதையை விட்டு ஐந்தும் விலகின. ஓரம் கட்டி ஓடின. ஐந்தும் ஒன்றாகச் சேர்ந்து பாட்டி, பாபு பக்கத்தில் வந்து நின்றன! வாலை ஆட்டியபடி கால்களின் நடுவே புகுந்து கொண்டன!

"என் கண்ணுங்களா! குட்டிங்களா! செல்வங்களா!'' என்று அப்படியே கையிலேயெடுத்து வாரி அணைத்துக் கொள்ள ஆரம்பித்தாள் பாட்டி. "திருட்டுப் பசங்களா! எங்க ஊரு நாய்க் குட்டிகளை திருடியாந்து பந்தயமா நடத்தறீங்க? உங்களைச் சும்மா விடப் போறதில்லே"ன்னு பாட்டி கத்தினாள். பாட்டிக்குத் தெரியாம அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்த பெரிய நாயும் குரைச்சுது. விஷயம் எல்லாருக்கும் தெரிஞ்சு போய், நாய்க் குட்டிகளைத் திருடின கும்பலும் மாட்டிக் கொண்டது! பந்தயம் பாதியில் நின்றது. ஆனால் பாசம் வென்றது! தாயன்புக்கு நிகராக வேறு எது உண்டு?

நாய்க் குட்டிகளுடன், பாட்டியும், பாபுவும் ஊருக்குத் திரும்பினார்கள். சோடியம் விளக்கு வெளிச்சத்தில், தெருவே அவர்களை கௌரவித்தது.



" 'ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்' என்ற பாட்டை கண்டக்டர் பாடினால் எப்படிப் பாடுவார்?''


" 'ஊதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்'னு பாடுவார்.


– பி. கோவிந்தசாமி


பூமாவின் வீணை
கதை அமைப்பு : ரே.
ஓவியம் : சசி
பூமா ஏழைச் சிறுமி...
அவள் தந்தை மண் பாண்டக் கலைஞர்
பெற்றோருக்கு உதவியாக பூமாவும் மண் மிதிப்பாள்...
மண் பிசைவாள்...
பானைகள் செய்ய உதவுவாள்...
சந்தைக்குச் சென்று விற்பாள்...


பள்ளிக்கும் சென்று படித்து வந்தாள்...
பூமாவுக்கு இசையில் அளவில்லாத ஈடுபாடு. தானே பாடுவாள்...
கோவில் திருவிழாவில் தவறாது இசைக் கச்சேரி கேட்பாள்.
வானொலியில் பாட்டுக் கேட்டால், நின்று கேட்பாள்.


ஒரு நாள் பள்ளியிலிருந்து திரும்பும்போது...
யாரோ வீணை வாசிக்கிறார்கள்! எத்தனை அற்புதமான வாசிப்பு!
ஜன்னல் வழியாகப் பார்த்தாள்.
தினமும் பூமா ஜன்னலுக்கு அருகே நின்று வீணை வாசிப்பைக் கேட்டாள்.
ஒரு நாள் கொட்டும் மழையில் நனைந்தபடியே.
சாரலடிக்கிறதே... ஜன்னலை மூடலாம்.



ஏம்மா நனையரே! உள்ளே வா!!
தொடர்ந்து வீணை வாசிப்பீர்களானால் வரேன்.
வீணையில் இத்தனை ஈடுபாடா! உள்ளே வாம்மா வாசிக்கிறேன்...
பூமா உள்ளே வர... குருஜி வீணை வாசிக்கிறார்.
முடித்ததும்.
கீர்த்தனையை முடித்து விட்டேம்மா... மகிழ்ச்சிதானே?
மகிழ்ச்சிதான் ஐயா. இலேசாக ஓர் அபஸ்வரம் விழுந்ததே! இதுவரை இப்படி ஏற்பட்டதில்லையே...? என்ன காரணம்?
உன் இசை ஞானத்தை அளவிடவே வேண்டுமென்றே செய்தேன். உன் பெயர் என்னம்மா?
என் பெயர் பூமா... தினமும் தங்கள் வாசிப்பைக் கேட்டு வருகிறேன்...



பூமா, வீணை கற்கிறாயா? சொல்லித் தரேன்?
ஐயா, எங்கப்பா சாதாரண மண் பாண்டக் கலைஞர். வசதி இல்லாத குடும்பம்.
எனக்கு சம்பளம் வேண்டாம்மா. உன் ஆர்வத்திற்கும், இசை ஞானத்திற்கும் நான் தரும் பரிசு இது!
பயிற்சி செய்ய என் வீட்டில் வீணை இல்லையே?
இங்கேயே, இந்த வீணையிலேயே பயிற்சி பண்ணும்மா...
வீட்டில் பூமாவின் பெற்றோர்...
கூழுக்கே வழியில்லாதவனால் யானையை வளர்க்க முடியுமா? வசதிக்கு மீறின ஆசை வேணாம்மா!
ஒரே அடியா அப் படிச் சொல்லி விடாதீங்க. நம்மால பண்ணித்தர முடி யாத வசதியை இன் னொருத்தர் தர முன் வரும் போது ஏன் மறுக்கணும்? அவர் எல்லோருக்கும் வீணை சொல்லித் தருவது இல்லை.
சரி, இதுக்குமேலே நான் தடை சொல்லலே...
நன்றிப்பா!


குருஜி பூமாவுக்கு வீணை கற்றுத்தரத் தொடங்கினார்.
மாதங்கள் ஓடின.
அசுர சாதகம்மா! இத்தனை விரைவில் இந்த அளவுக்குக் கற்றுக் கொண்டு வாசிப்பது, பெரிய சாதனைம்மா!
எல்லாம் உங்கள் ஆசிதான் குருஜி...
சுதா வருகிறாள்-
யாரும்மா! என்ன வேணும்?
நான், சுதா... மிராசுதாரர் நாகலிங்கத்தின் ஒரே பெண்!
கேட்கும் சம்பளம் தரேன்னு வீணை கத்துக்கக் கேட்டேன். மாட்டேன்னுட்டீங்க! இந்த பூமாவுக்கு மட்டும் எப்படிக் கத்துக் கொடுக்கறீங்க...?
வீணை தெய்வீகக் கலை. அதைக் கத்துக்க பண வசதி தகுதியில்லே... உண்மையான ஈடுபாடு முக்கியம்...
எல்லாமே, பணத்துக்கு அடுத்தபடிதானே?
அதுதான் இல்லை.


நீங்க சொல்லித் தரலேன்னா என்ன? ஊரிலே வேறு யாருமேவா இல்லே? பணத்தை வீசினா, வீட்டுக்கு வந்து சொல்லித் தராங்க...
என்ன அகம்பாவம்?
காலம் ஓடியது...
பூமா, நான் காசியாத்திரை போவதாக இருக்கிறேன்...
வீணையைப் பிரிந்து உங்களால் இருக்க முடியுமா குருஜீ?
வீணையைத்தான் தகுந்த ஆளைத் தேடி ஒப்படைத்து விட்டேனே?
இன்னுமா புரியலே? வீணையை உன்னிடம் ஒப்படைத்து விட்டேனே?
குருஜீ! எனக்கு இந்தத் தகுதி இருக்கா?
வசதியை விடும்மா! உனக்கு இதற்கு முழுத்தகுதி இருக்கு. மற்ற தகுதிகளை யும்கூட இதுவே கொடுக்கும்!
குருஜீ...!



இது என் குருநாதருக்கு, அவரது குரு தந்த வீணையம்மா. ஒரே மரத்தில் குடைந்து செய்யப்பட்ட ஏகாந்த வீணை. தகுதி உள்ளவர்கள் வாசித்தால் இது இசையாகவே பேசும்! அத்தகைய நாதம் எழும்!
இதைப் பெருமையோடு மன மகிழ்ச்சியுடன் உன்னிடம் ஒப்படைக்கிறேம்மா.
தினமும் தவறாமல், ஒரு முறையாவது நீ இதை எடுத்து வாசிக்க வேண்டும். இதுதான் நீ எனக்குத் தரும் குருதக்ஷிணை.
கண்டிப்பாகச் செய்வேன் குருஜி...
ஏகாந்த வீணை பூமாவின் குடிசைக்குக் குடியேறியது.
நாட்கள் ஓடின. பூமாவின் அப்பாவுக்கு விபத்தில் வலது கை முறிந்தது. படுத்த படுக்கையானார்.




டாக்டர் வந்து பார்த்து...
செயற்கைக் கை வைத்தால் எல்லாம் பண்ணலாம். ஐயாயிரம் செலவாகும்.
அத்தனை பணத்துக்கு எங்கே போவது...?
எல்லோரும் கவலையுடனிருக்க... சுதா வருகிறாள்.
பூமா உன்னிடம் தனியாகப் பேசவேண்டும்.
தனியாக அழைத்துப் போய்...
ஒரு யோசனை கூறினால் தவறாக எண்ணமாட்டாயே?
கூறு சுதா!
ஏகாந்த வீணை வேண்டும்னு எத்தனையோ முயற்சி பண்றேன், கிடைக்கலே... குருஜியின் வீணை உன்னிடம்தானே இருக்கு?
...அதை என்னிடம் கொடு ஐயாயிரம் தரேன்!
அதை விற்க எனக்கு உரிமை இல்லை சுதா!


யார் விற்கச் சொன்னது? பணத்தை எப்போ வேண்டுமானாலும் திருப்பித் தந்து விட்டு எடுத்துக் கொள்.
தினமும் ஒருமுறையாவது கண்டிப்பா வீணையை வாசிப்பதாக வாக்குத் தந்திருக்கேன்!
என் வீட்டுக்கு வந்து தினமும் ஒரே ஓர் பாட்டை மட்டும் வாசிக்க அனுமதிக்கிறேன். சரிதானே?
குருஜி! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.
வீணை கைமாறி சுதாவின் வீட்டுக்குச் செல்ல... அப்பாவுக்குக் கை கிடைக்கிறது.
தினமும் பூமா, சுதாவின் வீட்டுக்குச் சென்று ஒரு பாட்டு வாசிப்பாள்.
ஒரு நாள்...
பூமா! நாளைக்கு பெங்களூர் போகிறேன். விடுமுறை முடிந்த பிறகுதான் திரும்புவேன்...


அப்போ... நான் தினமும் ஒரு பாட்டு வாசிப்பது?
கவலைப்படாதே... வீணை என் அறையில் தான் இருக்கும். ஒப்பந்தப்படி, நீ வந்து ஒரே ஓர் பாட்டை மட்டும் வாசித்துப் போகலாம்.
பூமா தினமும் சுதாவின் வீட்டுக்குப் போய் வாசித்தாள்.
ஒரு நாள், சுதா வீட்டுப் பணியாள் வந்து-
பூமாம்மா... உங்களை ஐயா உடனே அழைத்து வரச் சொன்னார்.
சுதாவின் அப்பாவா!
பூமா போனதும்...
வாம்மா, பூமா-இவங்களெல்லாம் ஜெர்மனியிலிருந்து என் தொழிற் சாலையை விரிவு படுத்துவது சம்பந்தமா வந்திருக்காங்க....
ரொம்ப மகிழ்ச்சி அங்கிள்!
இங்க வந்த பிறகுதான் இவர்கள் எல்லாம் இந்திய இசையில் ஈடுபாடு உடையவர்கள் என்பது தெரிந்தது.
அப்படியா! எவ்வளவு பெருமையாயிருக்கு!


வீணையில் அபாரமான ஈடுபாடு. ஏகாந்த வீணையைப் பார்த்தார்கள். இதில் வாசித்துக் கேட்க விரும்பி னார்கள். அதுதான் உன்னை வரச் சொன்னேன்.
பூமா வீணையில் வாசிக்க-
அபாரம்! தந்தி வாத்தியத்தில் இத்தனை அற்புதமாக இசை எழுப்ப முடியும் என்பது பெரிய வியப்பு. இன்னும் இரண்டு மூன்று பாட்டு வாசி. நாங் கள் டேப்பில் பதிவு பண்ணிக் கிறோம்!
பூமா தயங்க...
ஏம்மா தயங்கறே? எத்தனை ஆசையா கேட்கிறாங்க?
மனம் புண்படும்படி எதுவும் கேட்கலையே! ஏன் கண் கலங்கறேம்மா?
பூமா ஒப்பந்தத்தை விளக்கி...
தினமும் ஒரே ஓர் பாடலை மட்டுமே வாசிக்க ஒப்பந்தம்! அதை என்னால் மீற முடியாது. மன்னியுங்கள்.


உங்கள் பெண்ணும் இசைக் கலைஞர் என்றீர்கள்! உண்மையான இசைக் கலைஞரால் இவ்வளவு கல் நெஞ்சத்துடன் இருக்க முடியுமா?
அடகுக் கடைக்காரர் கூடத் தேவலை போல் இருக்கே!
பூமா! இதெல்லாம் எனக்குத் தெரியவே தெரியாதம்மா... என்னை மன்னித்துவிடு...
அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டதாக எடுத்துக் கொள்கிறேன். இனிமே வாசிக்கத் தடை இல்லையே?
அதெப்படி அங்கிள் நினைக்க முடியும்? கடனாக வாங்கிய பணத்தை நான் இன்னும் திருப்பித் தரலையே?
பூமா. நீ இரண்டு மணி நேரம் வாசிக்கப் போவதை நாங்க பதிவு செய்யப் போறோம். அதற்கு சன்மானமா, ஐயாயிரம் ரூபாய்க்கு அட்வான்சா செக் தரோம். நீ அதை இவரிடம் கொடு. ஒப்பந்தம் தீர்ந்து விடும். இதற்கு மறுப்பு இருக்காதே?
நன்றி ஐயா!


அதோடு உன்னை ஜெர்மனிக்கு அழைத்து கச்சேரி பண்ண வைக்கவும் முடிவு எடுத்திருக்கிறோம்.
அதற்கு முன்னால், வரும் விஜயதசமியன்று, நம்மூர் கோவிலில் உன் வீணை அரங்கேற்றம். செலவு என்னுடையது.
எல்லாம் குருஜியின் அருள்!
என் செயலை நினைத்து வெட்கப்படுகிறேன் பூமா. குருஜி, என்ன தகுதியை எதிர்பார்த்தார் என்பது புரிந்து விட்டது. என்னை மன்னித்துவிடு!

கோடை விடுமுறைப் போட்டி – 2

முடிவு

இந்தப் போட்டியை அறிவித்த போது, வாசகர்கள் இதை எப்படி வரவேற்பார்களோ என்ற சந்தேகம் இருந்தது. ஆனால், இதில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையைப் பார்த்த போது எங்கள் சந்தேகம் பறந்தோடி விட்டது. இதில் மற்றொரு சிறப்பும் உண்டு. விடையைத் தவறாக எழுதியவர்கள் மிகச் சிலரே! பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க குலுக்கல் முறையே கைகொடுத்தது.

சரியான விடை :

1. கருடன் – கரும்பில் உள்ள முதல் இரண்டெழுத்தான "கரு"வையும், திருடனில் உள்ள கடைசி இரண்டெழுத்தான "டன்"னையும் சேர்த்தால் வருவது.

2. கம்பன் – "கம்பு" சொல்லின் முதல் இரண்டு எழுத்தான "கம்", ரிப்பனின் கடைசி இரண்டெழுத்தான "பன்"னையும் சேர்த்ததால் வருவது.

3. மகுடம் – "மகுடி"யின் முதல் இரண்டு எழுத்துகளையும், "குடம்" த்தின் கடைசி இரண்டு எழுத்து களையும் சேர்த்தால் வருவது.

4. கரண்டி – கரப்பு சொல்லின் முதல் இரண்டு எழுத்துகளையும், 'வண்டி'யின் கடைசி இரு எழுத்துகளையும் சேர்த்தால் வருவது.

5. கரகம் – "கரம்" சொல்லின் முதல் இரண்டு எழுத்துகளையும், "மேகம்" சொல்லின் கடைசி இரு எழுத்துகளையும் சேர்த்தால் வருவது.


6. கணக்கு – "கணபதி"யின் முதல் இரு எழுத்துகளையும், "நாக்கு"ன் கடைசி இரு எழுத்துகளையும் சேர்த்தால் வருவது.


7. அரவம் – "அரசன்"னின் முதல் இரண்டு எழுத்துகளையும் "தவம்" சொல்லின் கடைசி இரு எழுத்துகளையும் சேர்த்தால் வருவது.


ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :


1. ஜி. செரோஷா, ஆவடி, சென்னை – 109.
2. எஸ். பாலமுருகன், இராமநாதபுரம் – 3.
3. தேவந்தி துரைராஜ், திருப்பத்தூர் – 1.
4. வி. கணேஷ், திருவான்மியூர், சென்னை – 41.
5. சி. முருகன், முத்துசுப்பையாபுரம், முகவூர்.
6. P. ரகுராமன், மயிலை, சென்னை – 4.
7. ஆர். பார்த்திபன், வில்லியனூர், புதுவை மாநிலம்.
8. P. அஜய் கார்த்திக், பார்வதிபுரம், முசிறி.
9. P. பாலாஜி, பெரிய சேவலை – 607 209.
10. சி. வி. கல்யாணி, காவேரிப்பட்டணம்.
11. எஸ். சுதா, கல்பாக்கம் டவுன்ஷிப்.
12. எஸ். தஹ்ஸீன் நிலோஃபர், வெளிப்பட்டணம் அஞ்சல்.
13. என். ரேகா, மதுரை – 1.
14. கே. ஜரிஸ் சகாய பாமா, திட்டுவிளை, குமரி மாவட்டம்.
15. ஏ. பாத்திமா, பொதக்குடி – 614 103.
16. வி.பி. மதியரசி, ஆவுடையாள்புரம், இடிந்தகரை அஞ்சல்.
17. எம். வித்யா, சென்னை – 10.
18. ஜி. ரங்கநாயகி, அட்டகட்டி – 642 116.
19. எஸ். ரம்யா, கொரநாட்டுக் கருப்பூர் அஞ்சல்.
20. ஜி. வித்யா, கோவை – 2.


பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்டு அசத்தியவர்களுக்கு நன்றி!



கோகுலம்
Name:
Std:
Sub:



கோகுலம்
Name:
Std:
Sub:



கோகுலம்
Name:
Std:
Sub:


கோகுலம்
Name:
Std:
Sub:


Name:
Std:
Sub:
கோகுலம்


கோகுலம்
Name:
Std:
Sub:


Name:
Std:
Sub:
கோகுலம்


கோகுலம்
Name:
Std:
Sub:

என்ன ஒற்றுமை?
—போட்டி முடிவு

கோகுலத்தைத் தொடர்ந்து படிக்கும் வாசகர்களுக்கு இந்தப் போட்டி மிக எளிதாக இருந்திருக்கும். எலி, பூனை, ஆந்தை, தேள், வௌவால், பாம்பு, பல்லி, சேவல், நரி ஆகியவைகளைப் பற்றிக் கதை வடிவில் அறிவியல் செய்திகள் பல இதழ்களில் தரப்பட்டுள்ளன. அதோடு இவையாவும் நாம் அடிக்கடி பார்க்கக்கூடியவை. இவைகளில் கோழியைத் தவிர, மற்றவை எல்லாமே இரவில் இரை தேடுபவை! இதுதான் ஒற்றுமை. கோழி மட்டுமே பகலில், வெளிச்சத்தில் இரை தேடும். இதுவே தனித்து நிற்பது. எதையும் ஊன்றிக் கவனிக்க வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.

சரியான விடை எழுதியவர்கள் குவியலில் இருந்து, பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. எம். அபர்ணா, உடுமலைப்பேட்டை.
2. அனுஷா, இராமநாதபுரம்.
3. ஆர். கார்த்திக் குமார், கூடலூர்.
4. எம். சத்வானா கணேஷ், திண்டுக்கல்.
5. எஸ். சிந்துஜா, தஞ்சை – 4.
6. க. பொன்தமிழ்ச் செல்வன், திருமலாபுரம், போடிநாயகனூர்.
7. P. அசோக்குமார், திருச்சி – 21.
8. ஆர். அமுதா, சென்னை – 59.
9. ஏ.வி. வெற்றிவேலன், பனப்பாக்கம் அஞ்சல்.
10. ஆர். ஜெயசுந்தர், அருப்புக்கோட்டை.
11. இராம.சுகுமார், சங்கரன்கோவில்.
12. கே. ஈஸ்வரி, திருவனந்தபுரம் – 23, கேரள மாநிலம்.
13. பேபி ராஜம், திருநெல்வேலி – 7.
14. எம். முகம்மது ரஃபிக், தலைவாசல்.
15. கே. மீனாக்ஷி லலிதா, கல்லிடைக்குறிச்சி.
16. எஸ். ராஜமீனா, மதுரை – 1.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

புவனா தேடிய புதையல்

13. புதையல் கிடைத்தது!



புவனா, ராம்நாத்துடன் கிளம்பிப் போனாள். அவள் நடையில் தளர்வோ, முகத்தில் குழப்பமோ, பேச்சில் தடுமாற்றமோ இல்லை.

"ராம்நாத் பாபு அவர்களே, இத்தனை சுத்தமாகத் தமிழ் பேசுகிறீர்களே! எப்படி?"

"எனக்கு ஓவியத்தில் தனி ஈடுபாடு. சென்னையில் உள்ள ஓவியக் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் படித்துப் பட்டம் வாங்கியவன் நான்" என்று ராம்நாத் பெருமையுடன் கூறிக் கொண்டார்.

திடீரென்று ராம்நாத்தின் குரலில் கடுமை கூடியது. "புவனா, பேச்சுக் காட்டி, பராக்குக் காட்டி, என்னை ஏமாற்றி விடலாம் என்று எண்ணி விடாதே. புதையல் மறைத்து வைக்கப்பட்டுள்ள இடத்தைக் கூறும்படி, இந்திராணியின் தூண்டுதலால் மகாராணாவிடம் கேட்டாய் இல்லையா? உங்க அப்பா சுந்தரம் கூட அதைக் கேட்டதற்காக உன்னைக் கடிந்து கொண்டாரே? இருந்தாலும் மகாராணா குனிந்து உன் காதோடு அதைக் கூறினார் என்று நிறுத்தியிருக்கிறாய். அதற்கு மேல் என்ன? மகாராணா கூறியதை நினைவுபடுத்திக் கொண்டு கூறு" என்று மிரட்டினார்.

புவனா, அந்த மிரட்டலுக்கு அஞ்சவில்லை.

"அப்படியானால், டாக்டர், ரவியோடு நான் பேசிக் கொண்டு இருந்ததை நீங்கள் பின்தொடர்ந்து கேட்டுக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அப்படித்தானே?"

"ஆமாம் ஆமாம்" என்று சலிப்புடன் கூறிய ராம்நாத், "அதற்காகத்தானே நான் கதவுகளை மூடி உங்களைச் சிறைப்படுத்தினேன்? அந்த விஸ்வநாத் வந்து உங்களை விடுவித்து என் திட்டத்தைக் குளறுபடி பண்ணிச் சிதைத்து விட்டான்" என்று

மதிஒளி

அலுத்துக் கொண்டார். உடனேயே, "சரி சரி. புதையலைப் பற்றிக் கூறு...? மகாராணா கூறியதை நினைவுபடுத்திக் கொள்" என்று கெஞ்சினார்.

பூங்காவில இருந்த புல்தரை பெஞ்சியில் புவனா அமர்ந்து கொண்டாள்.

"ராம்நாத் அவர்களே... என்னை யோசிக்க விட மாட்டேன் என்கிறீர்களே! என்னைச் சிந்திக்க விட்டால்தானே நான் நினைவு படுத்திக் கொண்டு கூற முடியும்?"

"சரி, சரிம்மா! நான் தொந்தரவு பண்ணலே. நீ இப்படியே இங்கேயே உட்கார்ந்து யோசனை பண்ணு. நான் அதோ, அந்த சிமெண்ட் பெஞ்சியில் உட்கார்ந்து கொள்கிறேன். என்னை ஏமாற்ற மட்டும் நினைக்காதே. அது நடக்காது. பிறகு நான் பொல்லாதவனாகி விடுவேன்" என்று எச்சரித்து விட்டு சற்றுத் தள்ளி இருந்த பெஞ்சில் உட்கார்ந்து கொண்டார் தாடிக்கார ராம்நாத்.



நேரம் ஓடியது. "தூங்கி விடாதேம்மா. ரோஸ் மில்க், காப்பி, டீ ஏதாவது வரவழைக்கட்டுமா?" என்று அடிக்கடி கேட்டார் ராம்நாத். புவனா வேண்டாம் என்று மறுத்துக் கொண்டே இருந்தாள்.

திடீரென்று புவனா நிமிர்ந்து உட்கார்ந்தாள். அவளையே கவனித்துக் கொண்டிருந்த தாடிக்கார ராம்நாத் ஓடி வந்து, "என்னம்மா, நினைவு வந்ததா?" என்று ஆவலுடன் கேட்டார்.

"ராணா கூறியது என்ன என்பது தெளிவாக நினைவுக்கு வரவில்லை. ஆனால் இப்படித்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். புதையல்தான் எல்லாம் கணேஷிடம் இருக்கு என்று பொருள்பட மகாராணா கூறினதாக நினைப்பு" என்றாள் புவனா.

"அப்படியா! கணேஷ் என்றா, பிள்ளையார் கோவிலைத்தான் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பார். வா போய்ப் பார்க்கலாம்!" என்று மகிழ்ச்சிக் கூத்தாடிய ராம்நாத் விரைந்தார். புவனாவும் பின்தொடர்ந்தாள்.

மகாராணாவின் நந்தவனப் பகுதியில் மிக அழகான பிள்ளையார் கோயில்



ஒன்று இருந்தது. அதற்குப் பூஜை எதுவும் கிடையாது. கோவில் சிறிதானாலும், சிற்ப வேலைகள் நிறைந்து கலையழகுடன் இருந்தது.

நேராகப் பிள்ளையார் சிலையிடம் போன தாடிக்கார ராம்நாத், பீடத்துடன் பிள்ளையாரை அசைத்துப் பார்த்தார். பிள்ளையார் முதலில் மக்கர் பண்ணினாலும், விரைவில் அசைய ஆரம்பித்தார்! அதன் போக்கிலேயே விட்டு, ராம்நாத் சுழற்றினார். சிலை சுழலச் சுழல, பிள்ளையாருக்குப் பின்னால் தரையில் சுரங்கப் பாதை தெரிந்தது!

"இப்படி ஒரு சுரங்கம் இங்கே இருப்பது எனக்கே தெரியலையே! மகாராணா பெரிய ஆள்தான்!" என்று கூறியபடி அடக்க முடியாத பேராசையுடன் தாடிக்கார ராம்நாத், 'விடுவிடு'வென்று சுரங்கப் பாதையில் இறங்கினார். தனக்குப் பின்னால் புவனா வருகிறாளா என்பதைக் கூடக் கவனிக்காமல், புதையலை அடைந்து விடும் பேராசையில் அவர் தன்னையே மறந்து விட்டார்.

புவனா எதிர்பார்த்தது இதைத்தான்!

கண்ணிமைக்கும் நேரத்திற்குள் புவனா, ஓடிச் சென்று, பிள்ளையாரை எதிர்ப்பக்க மாகச் சுற்றினாள். சுரங்க வழி மூடிக் கொள்ள பிள்ளையார் பழைய நிலைக்கு வந்தார். "புவனா, புவனா சுரங்கத்தை மூடாதே!" என்று ராம்நாத் போட்ட கூச்சல் வெளியே துளி கூடக் கேட்கவில்லை.

"ராம்நாத் அவர்களே... நானே மறுபடியும் வந்து உங்களை விடுவிக்கிறேன். அது வரை சற்று அமைதியாக இங்கேயே இருந்து ஓய்வெடுங்கள். ராணா குறிப்பிட்ட கணேஷ், பிள்ளையார் கணேஷ் அல்ல. அவசரத்தில் அசடாகி, அகப்பட்டுக் கொண்டு விட்டீர்களே! என் வேலையை எளிதாக்கி விட்டீர்களே! இத்தனை எளிதில் உங்களை சிறைப்படுத்த முடியும் என்பதை நான் எண்ணிக் கூடப் பார்க்கவில்லையே!" என்று மகிழ்ச்சியுடன் கூறிய புவனா, வந்த வழியே ஓடினாள். பூட்டை உடைத்து டாக்டரையும், ரவியையும் விஸ்வநாத்தையும் விடுவித்துக் கொண்டு விரைந்தாள்.

அடுத்த அரை மணிநேரத்தில், புவனா மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இருந்தாள். கூடவே விஸ்வநாத், ரவி, டாக்டர்.


தான் யாரென்பதை ஆட்சித் தலைவருக்கு விளக்கிய புவனா, "மகாராணாவின் புதையல் எங்கே புதைக்கப்பட்டுள்ளது என்பதை மகாராணாவே என்னிடம் கூறியுள்ளார். ஆனால், அது என் நினைவுக்கு வராமல் இத்தனை நாட்களாகத் தவித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது நினைவுக்கு வந்து விட்டது. எல்லாம் கணேஷிடம் இருக்கு என்று ராணா கூறினார். கணேஷ் என்பது பிள்ளையார் கோவிலோ இல்லை ஒருவரது பெயரோ அல்ல. மகாராணாவின் வயதான பட்டத்து யானையின் பெயர்தான் கணேஷ்" என்றாள்.

"ஆனால் அந்த கணேஷ் யானை ராணா காலத்திலேயே இறந்து விட்டதே?" என்றார் ஆட்சித் தலைவர்.


"உண்மைதான். ஆனால், யானை கொட்டடி (கொட்டகை) இன்னும் இருக்கே? அங்கே தோண்டிப் பார்த்தால் கண்டிப்பாகக் கிடைக்கும்."

அன்று பிற்பகலிலேயே யானை கொட்டடியைத் தோண்டும் பணி மாவட்ட ஆட்சித் தலைவரின் மேற்பார்வையில், தக்க பாதுகாப்புடன் தொடங்கப்பட்டது. புவனாவின் நம்பிக்கை வீண் போகவில்லை. அழகிய வேலைப்பாடு நிறைந்த மிகப் பெரிய தாமிரத் தவலை நிறைய தங்க, வைர நகைகள், பொற்காசுகள்! வெள்ளிக் கட்டிகள்! தவலைக்கு மேல், ஒரு நீண்ட வெண்கலப் பெட்டியில் கடிதம் ஒன்றும் இருந்தது. மகாராணாவின் முத்திரை இட்டு 'சீல்' வைக்கப்பட்டிருந்த அந்தக் கடிதத்தை, ஆட்சித் தலைவரே பிரித்துப் படித்தார்.

"இந்த ராம்தம்பூர் சமஸ்தானத்திற்கு உண்மையான வாரிசு விஸ்வநாத்தான். கல்விக்காக லண்டன் போன அவருடைய தாத்தா மட்டும் பிடிவாதம் பிடிக்காது கிராப்பை மாற்றிக் கொண்டிருந்தால், இந்த மகாராணா பதவி எனக்கு வந்திருக்காது. நானே கிராப் வைத்துக் கொண்டிருக்கும்



நிலையில், அந்தக் காலத்தில் கிராப்புக்காக ஒரு சமஸ்தானத்தின் உரிமையையே இழக்கும்படி நேர்ந்த அவரது நிலையை எண்ணி நான் வருந்துகிறேன். அதிலும் எனக்கு வாரிசு இல்லாத நிலையில், நானும் கிராப்புடன் இருக்கும் நிலையில் இது என்னை முள்ளாகக் குத்துகிறது. எனவே எனக்குப் பிறகு விஸ்வநாதனையே இந்த சமஸ்தானத்திற்கு முழு உரிமையுள்ளவனாக்குகிறேன். விஸ்வநாத்தைத் தேட நான் எடுத்த முயற்சிகள் எதுவுமே பயனளிக்கவில்லை. என்னைச் சுற்றியுள்ள உறவினர்கள், சொத்துக்காகவே இருக்கிறார்கள். என் கண் முன்னாலேயே அவர்கள் சண்டை போட்டுக் கொள்வதை நான் காண்கிறேன். பணத்தாசை பிடித்த அவர்கள் பிடியிலிருந்து இந்த விலைமதிப்பில்லா புராதான நகைப் புதையலைக் காக்கவே இதைப் புதைத்து வைக்கிறேன். விஸ்வநாதன் வந்து விட்டால், சட்டப்படி அவனே இதற்கெல்லாம் உரிமையுள்ளவன்.




இதை நான் உயிலாக்கி விட்டால், இந்தப் பணத்தாசைப் பேய்களால் விஸ்வநாதனின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்றே இந்த ஏற்பாடு" என்று எழுதப்பட்டு, மகாராணாவின் கையெழுத்தோடு கடிதம் முடிந்திருந்தது.

சட்ட ஆலோசகர்கள் வரவழைக்கப்பட்டனர். அது புதையலாக இருந்தாலும், சட்டப்படியான வாரிசு விஸ்வநாத்தான் என்பது உறுதியாக்கப்பட்டு விட்டதாலும், எல்லாம் விஸ்வநாத்திடம் ஒப்படைக்கப்பட்டன. பெருந்தன்மை கொண்ட விஸ்வநாத் எல்லா உறவினர்களுக்கும் கணிசமான பங்குகொடுத்தார். குழப்பமெல்லாம் நீங்கி புவனா தன் பெற்றோர் ரவி, டாக்டருடன் சென்னைக்குக் கிளம்ப ஏற்பாடுகள் நடந்தன.

"புவனா, எனக்கு உரிய சமஸ்தானமும், புதையலும் கிடைக்க முக்கியப் பங்கு வகித்தவள் நீதான். புதையல் இருந்த இடத்தை நினைவுபடுத்திக் கொண்ட நீ, மனம் வைத்திருந்தால் தாடிக்கார ராம்நாத்துடன் கூட்டுச் சேர்ந்து அவைகளைப் பங்குபோட்டுக் கொண்டிருக்கலாம். அப்படிச் செய்யாது, நேர்மை உணர்வோடு, புத்திசாலித்தனமாக, துணிவோடு நடந்து கொண்டு, புதையலையும் கண்டுபிடித்து, அது எனக்கே உரியது என்று மகாராணா எழுதிய கடிதத்தையும் தேடிக் கொடுத்தாயே...! உண்மையில் இந்தப் பெருமையும் செல்வமும் உனக்கே உரியது. என்னுடைய அன்புப் பரிசாக இதில் உனக்கும் பங்கு தர விரும்புகிறேன். மறுக்காது ஏற்றுக் கொள்" என்றார் விஸ்வநாத்.

"ஐயா, இந்த ராம்தம்பூர் சமஸ்தானம் ஏற்கெனவே புதையலாசை காரணமாக என் தந்தையைப் பலிகொண்டு விட்டது. ஆனால், இதற்கு மருந்து தடவுவது போல் விலைமதிப்பில்லாத வேறு ஒரு புதையலை எனக்கு இந்த ராம்தம்பூர் ஏற்கெனவே வழங்கி விட்டது. அதனால், நீங்கள் வழங்கும் இந்தப் புதையல் எனக்கு வேண்டவே வேண்டாம்" என்றாள் புவனா.

"ஏற்கெனவே புதையல் கிடைத்து விட்டதா? நீ என்னம்மா கூறுகிறாய்?" என்று குழம்பிப் போய்க் கேட்டனர் ரமாவும், ஈஸ்வரும். மற்றவர்களும் புரியாமல் திகைத்தனர்.



சுதந்திரம்....

பூத்துக் குலுங்கும் கொடியிலே
பூக்களுக்குச் சுதந்திரம்!
வண்ணப் பூக்கள் அழைப்பிலே
வண்டுக் கெல்லாம் சுதந்திரம்!
நடனமாடும் மலையிலே
நதி களுக்குச் சுதந்திரம்!
பாடித்திரியும் விண்ணிலே
பறவைக் கெல்லாம் சுதந்திரம்!
விந்தை மிக்க வனத்திலே
விலங்குக் கெல்லாம் சுதந்திரம்!
ஆட்டிப் படைக்கும் காற்றிலே
அலைகளுக்குச் சுதந்திரம்!
அமைதி கொண்ட நாட்டிலே
அனைவருக்கும் சுதந்திரம்!

— கருமலைப் பழம் நீ

புவனா எல்லோரையும் பார்த்துப் புன்னகைத்தாள்.

"அப்பா அம்மா, உங்களுக்குக் கூடவா எனக்குக் கிடைத்துள்ள விலைமதிப்பில்லா புதையல் என்னவென்பது புரியவில்லை!" என்று கேட்ட புவனா, ரமா ஈஸ்வரின் கைகளைப் பிடித்துக் கொண்டு விஸ்வநாத்திடம் வந்தாள்.


"விஸ்வநாத் சார், இந்த ராம்தம்பூர் எனக்கு வழங்கியுள்ள விலைமதிப்பில்லா அன்புப் புதையல் இவர்கள்தான். பெற்ற தாய் தந்தையர் உயிருடன் இருந்தால் கூட இவர்களுடைய அளவுக்கு அன்பு காட்ட அவர்களால் முடிந்திருக்குமா என்பது சந்தேகமே" என்றாள்.


ரமாவும் ஈஸ்வரும் அன்புப் பெருக்கால் விசும்பினர்.


"இவர்களுக்கு நீ வளர்ப்பு மகளா! நம்பவே முடியவில்லையே!" என்று வியந்தார் விஸ்வநாத். பத்திரிகைகள் போட்டி போட்டுக் கொண்டு புவனாவைப் பேட்டி கண்டு சிறப்புக் கட்டுரைகளை வெளியிட்டன. தொலைக்காட்சியும் வானொலியும் கூட அவளைத் தனியாகப் பேட்டி கண்டன. சென்னைக்குப் புறப்படும் நாள் நெருங்கியது.

விஸ்வநாத்தின் வற்புறுத்தல் தாங்காது அவர் அளித்த பணத்தைக் கொண்டு புவனா சென்னையில் ஓர் அழகான ஆலயம் கட்டி வருகிறாள். அதில் குழந்தைகளெல்லாம் விரும்பும் கண்ணன் குடியேறப் போகிறார். இதில் என்ன புதுமை என்கிறீர்களா? இந்தக் கண்ணபிரானுக்கு பூஜை, அபிஷேகம், அலங்காரம் எல்லாம் செய்யவிருப்பது தம்பி தங்கைகளே! கோவிலில் சிறுவர்க்கான நூல் நிலையம், கலை நிகழ்ச்சிகளை நடத்தக் கலையரங்கம், விளையாட மைதானம், கைத் தொழில் அழகுப் பொருள்களைச் செய்யக் கற்பிக்கும் பயிற்சிக்கூடம் எல்லாம் இருக்கிறதாம். கலையழகு கொஞ்சும் இந்தக் கண்ணன் கோவிலுக்கு வெகு விரைவில் குடமுழுக்கு நடக்கவுள்ளது. உங்களுக்கெல்லாம் கூட அழைப்பு வரும். கண்டிப்பாக வாருங்கள். அங்கே சந்திப்போம்!

(நிறைந்தது)


சிரிப்...
சீனு நான் சுகுணாவை அழைச்சி கிட்டு வர சொன்னா நீ குணாவை அழைச்சிகிட்டு வந்திருக்கே?
சீனு : இவன் சுகுணா சார்.
-ஆர்.மாணிக்கம், பு.முட்லூர்
பஸ்ல வரும்போது என் பை தவறி விழுந்துட்டது.
எந்த ஊரில்?
"விழு"ப்புரத்தில!"
-பாளை பசும்பொன்,மகராஜநகர்
"இது பம்பரம்தானே...? 'மும்பரம்'ன்னு ஏன் சொல்றே?"
"இந்த பம்பரம் வாங்கி வந்த இடம் 'மும்பாய்' ஆச்சே!"
-அருணாசலம், தென்காசி
காப்பியில ஒரு "ஈ" இருக்கு
COFF"EE"ல ரெண்டு "ஈ" இருக்கும் சார்!"
-பாளை பசும்பொன், மகராஜநகர்
"ஏன்டா உங்க ஸ்கூல மட்டும் அட்மிஷன் ஆக இவ்வளவு கூட்டம்?"
"புக்ஸை ஸ்கூலுக்கு எடுத்துவர ஒரு தள்ளுவண்டி ஃப்ரீயா தறாங்க!"
-காவேரிப்பட்டணம் சோமசேகர்





கேட்கட்டுமா டாக்டர்?

● *நீரோடை சந்தானம், தூத்துக்குடி*

? எனது வீட்டிலுள்ள ஒரு பெரியவருக்கு ஆஸ்துமா. அவருக்கு வயது 61. தூங்குவதே இல்லை. ஆஸ்துமா இருந் தால் தூக்கமே வராதா?

! ஆஸ்துமா என்பது சுவாசிப்பதில் சிர மம் ஏற்படும் நிலைமை. இது இரு வகைப் படும். 1. ஒவ்வாமை காரணமாக ஏற்படும் நுரையிரல் ஆஸ்துமா, மூச்சுக் குழல்கள் தற்காலிகமாக சுருங்கி விடுவதால் இந்த ஆஸ்துமா வருகிறது. ஒவ்வாமை நீங்கியபின் ஆஸ்துமா சரியாகி விடும். 2. இருதய ஆஸ்துமா. இருதயம் வீக்கமடைந்தோ அல்லது பலவீன மடைந்தோ சரிவர செயல்படாதபோது நுரையீரல்கள் சுவாசிப்பதற்கு சிரமப்படும் நிலை இது. இந்த ஆஸ்துமாவில்தான் தூக்கமே வாரது. காரணம், படுத்தவுடன் இருதயத்திற்கும் நுரையீரல் களுக்கும் வேலைப்பளு அதிகரிப்பதால் மூச்சுத் திணறல் அதிகரிக் கும். இளைப்பு வரும். இவை அந்த நபரைத் தூங்க விடாது என் றாலும், இதற்கு சிகிச்சை உள்ளது. முறை யான பரிசோதனைகளுக் குப் பிறகு சரி யான மாத்திரை, ஊசிகள் மூலம் குணப்படுத்தலாம். உங்கள் வீட்டுப் பெரிய வரை உடனடியாக மருத்துவரிடம் அழைத் துச் சென்று ஆலோசனை பெறுங்கள்.

பற்களின் கறையைப் போக்க முடியுமா?

● *மோ.புஷ்பா, காரைக்கால்*

பற்களில் உட்புறம் கறையாக உள்ளது. இதனைப் போக்க முடியுமா? எப்படி?

! பற்களின் கறையைப் போக்க முடியும். 'ஸ்கேலிங்' (SCALING) என்ற முறைப்படி பல் மருத்துவர் உங்கள் பற்களில் படிந்துள்ள கறையைச் சுரண்டி எடுத்து விடுவார். அதற்குப் பிறகு மீண்டும் பற்களில் கறை படியாமலிருக்க இந்த வழிமுறைகளை நீங்கள் அவசியம் கடைப் பிடிக்க வேண்டும். 1. பற்களை வெகு சுத்தமாகப் பராமரிப்பது முக்கியம். 2. புகையிலை, வெற்றிலை போடக்கூடாது. 3. புகை பிடிக்கக் கூடாது. 4. பான் மசாலா, பாக்கு உபயோகிக்கக் கூடாது. 5. காபி, டீ சாப்பிடக் கூடாது. 6. சத்துள்ள உணவுகளைச் சாப்பிட வேண்டும். முக்கியமாக கால்சியம், பாஸ்பரஸ் நிறைந்த பால், முட்டை, பச்சை இலைக் காய்கறிகள், ஆரஞ்சு, திராட்சை, எலுமிச்சைப் பழச் சாறுகள் நல்லது.

● *எம்.ஏ.ஏ.யுனூத், கொத்தாந்திவு (இலங்கை)*

? எனக்கு சில நேரங்களில் இடுப்பு வலி உண்டாகிறது. இதற்கு என்ன காரணம்? என்ன சிகிச்சை?

! இடுப்பு வலிக்குப் பல காரணங்கள் உண்டு. முதுகெலும்புத் தொடரில் உள்ள கீழ் முதுகெலும்புகள் தேய்வது இடுப்பு வலிக்கு முக்கியமான காரணம். முது கெலும்பில் உள்ள இடைவட்டுக் கள் (DISCS) முன்பக்கமாக இடம் பெயர்வது அல்லது பக்கவாட்டில் விலகுவது இடுப்பு வலியை உண்டாக்குகின்ற

மற்றொரு காரணம். இவை தவிர, முதுகைத் தவறாக இயக்குவது, காச நோய் மற்றும் புற்றுநோய் போன்ற நோய்த் தொற்றுக்கள் முது கெலும்பைப் பாதிப்பது, ஆகியவையும் இடுப்பு வலிக்கு வழி வகுக்கும். இவற்றில் எந்தக் காரணத்தால் என்பதை முதலில் தெரிந்து அதற்கேற்ப சிகிச்சை பெறுங்கள். பொதுவாக இடுப்பு வலிக்குத் தரப்படும் சிகிச்சை முறைகள். இவை 1. வலி நிவாரணிகளுடன் பூரண ஓய்வு. சுமார் 2 வாரங்களுக்கு படுக்கையில் மல்லாந்து படுத்து, முழங்காலை 45 டிகிரி கோணத்தில் மடித்து படுத்துக் கொண்டால் இடுப்பு வலி குறையும். 2. இதில் வலி குறையாதவர்களுக்கு 'டிராக்ஷன்' (TRACTION) முறையில் காலில் எடை போட்டு இழுத்துக் கட்டி விடுவார்கள். இப்படி சுமார் 2 வாரங்களுக்குப் படுத்துக் கொண்டு ஓய்வெடுத்தால் இடுப்பு வலி குணமாகும். 3. பின்னர், மூன்று மாதங்களுக்கு இடுப்பில் பட்டை (LUMBA-SACRAL BELT) அணிந்து கொள்ள வேண்டும். 4. அப்படியும் இடுப்பு வலி குறையாவிட்டால் அறுவை சிகிச்சை தேவைப்படும்.

● *ஜெ.சுஜாதா, செம்பனார் கோவில்*

? அறுவை சிகிச்சையின்போது 'அனஸ்தடிக்' என்பவர் முக்கிய பங்கு வகிப் பார் என்கிறார்கள். அவர் யார்? என்ன பணி செய்வார்?


! அனஸ்தடிக் அல்ல! அனஸ்தட்டிஸ்ட்! (ANAESTHETIST) தமிழில் கூறினால் 'மயக்க மருத்துவர்' இவரும் ஒரு மருத்துவர்தான். M.B.B.S படித்த பிறகு, மயக்கம் தரும் முறைகளைப் பற்றிய படிப்பு படித்த மருத்துவர். இவருடைய பணிகள் பல. அவற்றுள் மிக முக்கியமானவை இவை: ஒருவருக்கு சிகிச்சை செய்வதற்கு மயக்கம் தர இயலுமா என்பதைக் கணிப்பது; அறுவை சிகிச்சை நோயாளிக்கு மயக்கம் தருவது; அறுவை சிகிச்சை நடக்கும் போது நோயாளியின் சுவாசம் மற்றும் இருதயத் துடிப்பு ஆகியவைகளை சீராக இயக்குவது; அறுவை சிகிச்சை முடிந்த பின்னர் அந்த நபருக்கு மயக்கம் தெளிய உதவுவது. இவை தவிர நீடித்த வலிகளைக் குறைப்பதற்கும் (உதாரணம்: புற்றுநோய் வலி) விஷம் சாப்பிட்டவருக்கு ஏற்படு கின்ற சுவாசக் கோளாறுகளை சரி செய் வதற்கும் மயக்க மருத்துவர் சிறப்பு சிகிச்சைகளைத் தருவார்.


● *எ.சேகர், கள்ளக்குறிச்சி*


? குழந்தை பிறக்கும்போது எவ்வளவு எடை இருக்க வேண்டும்? ஒவ்வொரு வயது ஏறும்போது இருக்க வேண்டிய உடல் எடை, உயரம் எவ்வளவு?

வயது	உயரம் (செ.மீ)		எடை (கிலோகிராம்)	
	ஆண்	பெண்	ஆண்	பெண்
பிறக்கும்போது	47.1	46.7	2.600	2.500
1 வயது	73.9	72.5	8.400	7.800
2 வயது	81.6	80.1	10.100	9.600
3 வயது	87.8	87.2	11.800	11.200
4 வயது	96.0	94.5	13.500	12.800
5 வயது	102.7	101.4	14.800	14.500
6 வயது	108.5	107.4	16.300	16.000
7 வயது	113.9	112.8	18.000	17.600
8 வயது	119.3	118.2	19.700	18.400
9 வயது	123.7	122.9	21.500	21.300
10 வயது	124.4	128.4	23.400	23.600

டாக்டர் கு. கணேசன்












1

2




3







4




5




6



7



8



9



10



11

எந்த நாட்டுக் கொடிகள்? — போட்டி

நடுவில் சக்கரம் வைத்த மூவர்ணக் கொடியைப் பார்த்ததுமே நம் பாரத நாட்டுக் கொடி என்பதைப் புரிந்து கொள்கிறோம். இதே போல் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு கொடி உண்டு. உலகப் புகழ்பெற்ற அமைப்புகளுக்கும் கொடி உண்டு. மிகவும் வித்தியாசமான பதினோரு கொடிகள் இங்கே எண்களோடு தரப்பட்டுள்ளன.

உங்களுக்கு உதவ, இவைகளின் முதல் கடைசி எழுத்துக்களும் தரப்பட்டுள்ளன. பா....ன்; ப....ஷ்; ஜ....ன்; பூ....ன்; ஐ...சபை; மி....ர்; ஆ...யா; ஸ்ரீ....கா; பி...ல்; உ...டா; நே....ம்

எந்த நாட்டின், அமைப்பின் கொடிகள் என்பதை எண்களைக் குறிப்பிட்டு ஓர் அஞ்சலட்டையில் எழுதி, முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். தவறாமல் உங்கள் முகவரியையும் குறிப்பிடுங்கள். முகவரிக் கூப்பனில்லாது வருபவை ஏற்கப்படமாட்டா. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்திய தொடர்பு முகவரியைத் தர வேண்டும். முடிவு தேதி **31.8.96.** தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு கோகுலம் பொறுப்பாகாது. ஒன்றுக்கு மேற் பட்டோர் சரியான விடை எழுதியிருந்தால், பரிசு குலுக்கல் முறையில் பகிர்ந்தளிக்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை
ஈக்காடுதாங்கல்,
சென்னை — 600 097.



யாருடைய பணப் பை?

அம்மாவின் கண்களில் நீர் நிறைந்தது.

"சின்னய்யா, நான் உன்னை மிகவும் சிரமப்படுத்தறேன். சின்னப் பையனான உனக்கு கஷ்டம் தரும்படி இந்தக் காய்ச்சல் எனக்கு வந்திருச்சே! வேலைக்கும் போக முடியாமல், வீட்டு வேலையும் செய்ய முடியாமல்....." - சலித்துக்கொண்ட தாயின் வாயை வாஞ்சையுடன் மூடினான் மகன்.

''அம்மா! கவலைப்படாதிங்க. சீக்கிரமே குணமாயிடுவிங்க. உங்களுக்குப் பணிவிடை செய்ய நான் சந்தோஷப்படறேன். இதுதானே மகனின் தலையாய கடமை? கண்ணை மூடிக் கொஞ்சம் ஒய்வு எடுங்கள்''. சின்னய்யா பரிவுடன் சொன்னான்.

சற்று நேரத்திற்கெல்லாம் வீட்டு வாசலில் பள்ளித் தோழன் பைரவன் அழைக்கவே போனான்.

''டேய் சின்னய்யா, உனக்கு என்ன ஆச்சு? சொல்

லாமலேயே ஒரு வாரம்

பள்ளிக்கு விடுப்பு எடுத்திட்டியே? என்ன காரணம்னு கேட்டு வர ஆசிரியர் அனுப்பினார். அடுத்த வாரம்தான் பரீட்சைக்குப் பணம் செலுத்த இறுதிநாள். உங்கம்மாவைக் கூப்பிடு, அவர்களிடமே சொல்லிடறேன்"

சின்னய்யா பதறினான். ஏற்கனவே உடல் களைத்துப் போய்ச் சோர்ந்திருக்கும் தாய், மகனுக்குப் பரிட்சைக்குப் பணம் கட்ட வேண்டும் என்று அறிந்தால் மனக் கவலையும் படக் கூடுமே என்று அஞ்சினான். அதனால், நண்பனிடம் தானே அம்மாவிடம் எல்லாவற்றையும் கூறி விடுவதாகச் சொல்லி அனுப்பி வைத்தான்.

அடுத்தநாள் காலை வீட்டு வாசலில் சின்னய்யனுக்கு ஓர் அதிசயம் காத்திருந் தது. வீட்டு வாசலில் ஒரு பணப்பை! யார் வைத்திருப்பார்கள்? எப்படி அது வந்திருக்கும் என்று அதிகம் யோசிக்கவில்லை. மழைக்காக யாராவது ஒதுங்கியிருப்பார்கள். மறந்து வைத்துச் சென்றிருக்கக்கூடும். எது எப்படியானாலும், பணப்பை தன்னுடையது இல்லை. அதனால், அதை வைத்துக் கொள்ளத் தனக்கு உரிமை இல்லை என்ற முடிவுக்கு வந்தான். சற்றும் யோசிக்காமல் சின்னய்யா அதைக் காவல் நிலையத்திற்குச் சென்று ஒப்படைத்தான்.


"சீக்கிரமே தொலைத்தவரைக் கண்டு பிடித்து உரியவரிடம் ஒப்படைத்து விடுங்கள். பாவம் பணத்தை இழந்தவர் எப்படித் தவிக்கிறரோ?"- என்று கூறினான். பள்ளிக்கு விரைந்தான்.


''சின்னய்யா, நான் வைத்த பரீட்சையில் நீ வெற்றி பெற்றுட்டே! இதுவரை வகுப்புல முதல் மதிப்பெண் பெற்றுவந்த நீ, துன்பப்படும் சூழ்நிலையில் எப்படி நடந்து கொள்கிறாய் என்பதை அறிந்து கொள்ள ஆசைப்பட்டேன். பைரவன், நீ வீட்டுல கஷ்டப் படறதைச் சொன்னான். உன் அம்மா வேலைக்குச் செல்லாததால பரீட்சைப் பணம் செலுத்த இயலாத நிலையில் இருப்பதை அறிந்தேன். இன்றைக்குக் காலையில் உன் வீட்டு வாசலில் பணப் பையை வைத்துவிட்டு மறைந்து நின்றேன். வெளியே வந்த நீ, ஒரு கணம் கூட மனது சலனப் படாமல், வறுமையிலும் ஒழுக்கமே உயர்வு என்பதை மெய்ப்பிக்கும் விதத்தில், பணத்தை ஒப்படைக்க வந்துவிட்டாய். உன்னை மாணவனாக அடைந்ததில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்" என்றார் ஆசிரியர்.

தலைமை ஆசிரியர் நடந்ததை அறிந்து "சிறந்த மாணவனுக்கு உரிய பணப் பரிசை" சின்னய்யனுக்கு வழங்கினார்.

சின்னய்யன் அப்பணத்தைத் தனது பரிட்சைக்கான கட்டணமாகச் செலுத்தினான். நன்றாகப் படித்துப் பொதுத் தேர்வில் மாநிலத்திலேயே முதல் மதிப்பெண் பெற்ற மாணவனாகத் திகழ்ந்து பள்ளிக்கும், தாய்க்கும் பெருமையைக் குவித்தான். சாதனை படைத்தான்.

அ.சு.கிருஷ்ணன்




GO BANANAS!
WITH THE AUGUST '96 ISSUE OF
96 pages for just Rs. 5!
GOKULAM
The monthly magazine for children
GOKULAM, EKKADUTHANGAL,
MADRAS - 600 097.


சாட்
பீட்
கீத்!

யார் வந்தது?

சின்னபாபு

மாணவர் கைத்திறன் காட்சிக்குப் பொறுப்பேற்றிருந்த பேராசிரியர் தம்பு சாமி, நடந்ததை விளக்கிக் கொண்டிருந்தார். எதிரே சாட் பீட் கீத் அமர்ந்திருந்தனர்.


"இந்தக் கண்காட்சி, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடந்து வருவது உங்களுக்கும் தெரியும். இந்த ஆண்டு நூற்று இருபத்து மூன்று கலைக் கைத் தொழில் பொழுதுபோக்கு பொருன்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அத் தனையும் நம்ம பள்ளி மாணவ மாணவி யர் செய்தவை.



"கண்காட்சியை, கல்வி அமைச்சர்தான் திறந்து வைத்தார். சரியான மழை. அதனால் ஆறு மணிக்கு நடைபெற வேண்டிய திறப்புவிழா ஏழரை மணிக்குத் தான் நடைபெற்றது. மழை காரணத்தால் கூட்டம் கூட அதிகம் இல்லை. மின்சாரம் வேறு போய்விட்டது. கண்காட்சிப் பொருன்களின் சிறப்பை, பார்வையாளர்களுக்கு விளக்கிக் கூறும் பணிக்கு வந்திருந்த இருபது மாணவரும், நானும், உதவியாளர்களும், பாதுகாப்புக்காக இரவில் பள்ளியிலேயே தங்கினோம்" என்று நிறுத்தினார் பேராசிரியர் தம்புசாமி.

" சார், அப்போ, கண்காட்சி அமைக்கப்பட்டிருந்த பெரியகூடத்தைப் பூட்டினீர்களா?'' என்று கேட்டாள் கீதா.


''இல்லைம்மா. கறிகாய்களை வைத்து பொம்மைகள், மலர்களை வைத்து கோபுரம், மாதா கோவில், மசூதி எல்லாம் பண்ணி வைத்திருந்தார்களே? கதவை மூடிவிட்டால் வாடிவிடுமே என்பதற்காக பிரதான கதவைத் திறந்தே தான் வைத்திருந்தோம். யாரும் உள்ளே போய் விடாமல் இருக்க நாலைந்து ஸ்டூல்களைப் போட்டு வழி



யைத் தடுத்திருந்தோம். நாங்களும் அங்கேயேதானே படுத்துக் கொண்டிருந்தோம்?"

"எல்லோருமே வெளியேதான் படுத்துக் கொண்டீர்களா? உள்ளே யாரும் படுக்கவில்லையா?" என்று கேட்டான் சாதிக்.

'கண்காட்சிக் கூடத்திற்குள் யாருமே படுக்கவில்லை. எல்லோரும் வெளியே தாழ்வாரத்தில்தான் படுத்துக்கொண்டோம். கொசுக்கடியாலும், ஏற்றிருந்த பொறுப்பினாலும் எனக்குச் சரியான தூக்கம் இல்லை. அப்படியும் என்னையும் அறியாமல் தூங்கி விட்டேன். சட்டென்று விழிப்பு வந்த போது பாதி ராத்திரி இருக்கும். கண் காட்சிக் கூடத்திற்குள் ஏதோ சத்தம் கேட்டது. ஒரே இருட்டு. மனப்பிரமையாக இருக்கும் என்று எண்ணினேன். மறுபடி மேஜை நகரும் சத்தம். உடனே பக்கத்தில் இருந்தவர்களை எழுப்பினேன். டார்ச் வேலை செய்யவில்லை. யாரோ, கண் காட்சிக் கூடத்தில் இருந்து வெளியே ஓடி வரும் சத்தம் கேட்டது. என் அருகே படுத்துக் கொண்டிருந்த போட்டோ கிராபர், குருட்டாம்போக்கில் ஃபினாஷை நொடியில் தயார் செய்து காமிராவைத் தட்டி விட்டார். அதுவும் கூட சரியாக வேலை செய்ய வில்லை. இருந்தாலும் அந்த ஒரு விநாடி ஒளியில், தடையாகப் போட்டிருந்த ஸ்டூல் வரிசையைத் தாண்டி யாரோ வெளியே ஓடுவது தெரிந்தது. நொடியில் சுழல் மாடிப்படியில் இறங்கி மறைந்து விட்டான்" என்றார் பேராசிரியர்.



"அந்த ஒரு நொடி ஒளி வெள்ளத்தில், முகம் தெரியவில்லையா:"

''தெரியவில்லையே! போட்டோ எடுப்பார்கள் என்பதை எதிர்பார்த்திருப்பான் போலிருக்கு. ஏதோ ஒரு அட்டையை வைத்து முகத்தை மறைத்துக் கொண்டிருந்தான். கறுப்பு சட்டை, பேண்ட்"

"போட்டோ வந்துவிட்டதா? அதில் இருந்து ஏதாவது கண்டுபிடிக்க முடிந்ததா?" என்று கேட்டான்

பீட்டர்.

"இன்னும் அரைமணி நேரத்தில் போட்டோ கிடைத்து விடும்"

"காட்சியாக வைக்கப்பட்டிருந்த பொருள்களில் ஏதாவது திருடு போயிருக்கிறதா?"- கீதாவின் கேள்வி.


"இன்று அதிகாலையிலேயே எழுந்து விட்டோம். ஒவ்வொரு பொருளாகப் பரிசோதித்தோம். காட்சிக்காக வைக்கப்பட்டிருந்த நூற்று இருபத்து மூன்று பொருள்களும் இடம்கூட மாறாமல் அப்படியே இருக்கின்றன. லைட், ஸ்விட்ச் என்று எல்லாவற்றையும் சோதித்தோம். எதுவுமே திருட்டுப் போகவில்லை. எல்லாம் சரியாக இருக்கின்றன. அதற்குப் பிறகுதான் காட்சியைக் காண வருபவர்களை அனுமதித்தோம்"

"போலீசுக்கு புகார் பண்ணினீர்களா?" - இது சாதிக்.

"பண்ணவில்லை. ஏதாவது பொருள் காணாமல் போயிருந்தால் புகார் பண்ணலாம். எதுவுமே திருடு போகவில்லை. வந்தவன் யார் என்பதும் தெரியவில்லை. திருட வந்தவன், நாங்கள் படுத்திருப்பதைக் கண்டதும் ஓசைப்படாமல் சென்றான் என்றுதான் எண்ணிக் கொள்ள வேண்டும். எதை வைத்துப் புகார் பண்ணுவது? அனாவசியமா பள்ளியின் பெயர் பரபரப்பாக அடிபடும். நீங்கள் மூன்று பேரும் சாரண முகாமில் இருந்து திரும்பியதும் உங்களைக் கலந்து கொண்டு பிறகு மேல் நடவடிக்கையை முடிவு பண்ணலாம் என்று தலைமை ஆசிரியர் சொல்லி விட்டார்"

சாப் பீட் கீத் மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். இரயிலில் கண்விழித்த களைப்பு மூவர் முகத்திலும் தெரிந்தது.

அந்த நகரிலும், சுற்று வட்டாரப் பள்ளிகளிலும் இருந்து மாணவ



மாணவியர் தங்கள் ஆசிரியர்களுடன் பொருட் காட்சியைக் காண வந்திருந்தனர்.

"பொருட்காட்சியைப் பார்க்கிறீர்களா? என்று கேட்டார் பேராசிரியர்.

"அவசியம் இல்லை சார். நீங்கள்தான் எதுவுமே காணாமல் போகவில்லை என்று கூறிவிட்டீர்களே? அதைப் பார்த்து மட்டும் எங்களுக்கு என்ன தெரியப் போகிறது?"

"நீங்கள் கூறியதைப் பார்த்தால், திருட வந்தவன், தடையாக ஸ்டூல்களைப் போட்டு மறித்திருப்பதையும், தாழ் வாரத்து மாடியில் சுழலும் மாடிப்படி இருப்பதை யும் நன்கு அறிந்தவனாக இருப்பதைத் தெளிவுபடுத்துகிறது."

"போட்டோ கிடைத்தால் ஏதாவது பய னுள்ள துப்புக் கிடைக்கலாம்"

சாப் பீட் சீத் தங்களுக்குள் விவாதித் துக் கொண்டிருந்தபோதே, போட்டோ வந்து விட்டது. முந்தின நாள் அமைச்சர் பங்கேற்ற படங்கள் சிறப்பாக இருந்தன. பாதித் தூக்கத்தில் எழுந்து எடுத்த படம் பாதி ஃபிளாப்! முகத்துக்கு நேரே, ஏதோ ஓர் அட்டை, அல்லது புத்தகம் தூக்கிப் பிடிக்கப்பட்டிருப்பது தெரிந்தது. பிடித் திருந்திருந்த நான்கு விரல்கள் முழங்கை யுடன் நன்கு தெரிந்தன. அடையாளம் தெரிய விரல்களில் ஒரு மோதிரம்கூட இல்லை!

கீழே ஸ்டூலில் கால் வைத்து ஏறுவது தெரிந்தது. பூட்ஸ் அணிந்த கால். மற் றொரு கால் குதிக்கத் தயாராக இருந்தது. போட்டோவில் கழுத்துக்குக் கீழேயும், முழங்காலுக்கு மேலேயும் உடம்பு இல்லை. ஒரே வெளுப்பு!

"திருட வந்தவனைப் போட்டோ எடுத் திருக்கிறதை யாரிடமும் சொல்ல வேண் டாம்" என்று சாட் பீட் சீத் கேட்டுக் கொண்டனர்.

போட்டோவை வைத்துக் கொண்டு மூவரும் தலையைப் பிய்த்துக் கொண்டு விவாதித்தனர். எந்த உருப்படியான உளகமும் கிடைக்கவில்லை.

சாதிக், போட்டோவை முகத்துக்கு நேரே பிடித்துப் பார்த்துக் கொண்டிருந் தான். அவனுடைய நான்கு விரல்களும் போட்டோவில் பின்னால் தெரிந்தன.

அதையே பார்த்துக் கொண்டிருந்த சீதா, "பீட்டர், அந்த போட்டோவை வாங்கி, நீயும் சாதிக்கைப்போல் பிடி பார்க் கலாம்?" என்றாள் திடீரென்று.

பீட்டர், அதேபோல் போட்டோவைக் கையில் வாங்கி முகத்துக்கு நேராப் பிடித் தான். நான்கு விரல்களும் பின்னால் தெரிந் தன.

"இந்த மாதிரி அட்டையை நாம் முகத் துக்கு நேராகப் பிடிக்கும்போது, சாதாரண மாக வலது கையைத்தான் பயன்படுத்து கிறோம். ஆனால் இந்த போட்டோவில் இருப்பவர், இடது கையில் பிடித்திருக் கிறார். அதனால், இவர் இடதுகைப் பழக்க முடையவராக இருக்க வேண்டும்!" என் றாள் சீதா.

"முதல் வெற்றி! பாராட்டு சீதா!" என்று சாட் பீட் மகிழ்ச்சியுடன் சீதாவின் கை யைப் பிடித்துக் குலுக்கினர்.

"புறங்கையிலோ, விரல்களிலோ, ஏதா வது மச்சம், மரு அடையாளம் தெரிகிறதா பார்க்கலாம்?"

மூவரும் போட்டோவை வாங்கி மாறி மாறிப் பார்த்தனர். இடது கை, ஆள் காட்டி விரலின் நகத்தில் ஏதோ கருப் பாகத் தெரிந்தது.

"நகத்தில் மச்சம் இருக்குமா?"

"கண்டிப்பாக இருக்காது. தோலில் தான் மச்சம் இருக்கும்."

"அப்போ இது என்ன?"

உடைத்த உளுத்தம் பருப்பு அளவுக்கு அந்தக் கருப்பு ஆள்காட்டி விரலில் என் னவோ மச்சம்போல் தெரிந்தது.

"இது ஏன் தேர்தலில் ஓட்டு வைத்த அடையாளமாக இருக்கக் கூடாது? இடது கை ஆள் காட்டி விரல்தானே அடையாள மையை வைச்சிருக்கிறார்கள்?" என்றான் பீட்டர்!



''பாபு, ஜனவரி மாதத்தின் சிறப்பு என்ன?''
''நிறைய லீவு நாட்கள் வரும் சார்.''
— சிவக்குமார்.

"இப்போ எங்கே தேர்தல் நடந்தது?" - இது கீதா.

"பொதுத்தேர்தல் இல்லைன்னா என்ன? இடைத்தேர்தல் போன வாரம் காந்திநகரில் நடந்திருக்கே?"- இது சாதிக்.

"அப்படியானால், வந்தவன் காந்திநகர் வாசி"

மூவரும் ஒருவரை ஒருவர் பெருமையுடன் பார்த்துக் கொண்டனர்.

"இந்த போட்டோவில் வேறு ஏதாவது துப்புக் கிடைக்கிறதா பார்க்கலாம்"

மூவரும், போட்டோவைக் கையில் வைத்துக்கொண்டு மாறி மாறிப் பார்த்தனர்.

ஸ்டூல் மேல் அழுந்தியிருந்த பூட்ஸ் ஸோடு வலதுகால், கலர் போட் டோவில் நன்றாக விழுந்திருந்தது.

"இந்த வலதுகால் பூட்ஸுல் ஷுலேசுக்கு ஒரு கார்னர் இல்லை கவனித்தீர்களா?- சாதிக்தான் கேட்டான்.

"ஷு லேசை மாட்டும் இரண்டு வரிசை ஆறு ஓட்டையில், மூன்றில் வட்ட விளம்புகள் உதிர்ந்து வெளுப்பாக உலோகம் தெரிகிறது" – பீட்டர் கூறினான்.

மூவரும் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர்களாக பேராசிரியர் அறைக்குச் சென்றனர்.

"சார், நம்ம பள்ளியில் பணியாற்றுபவர்களில் காந்திநகரில் இருந்து வருபவர்கள் யாராவது இருக்கிறாங்களா?"

"நம்ம வேலாயுதம் காந்திநகர்வாசி தானே?


"எந்த வேலாயுதம் சார்?"

"இடதுகைப் பழக்கமுடைய வேலாயுதத்தைத்தான் சொல்றேன். அவர்தானே பள்ளி நூலகர்?"

நால்வரும் போனபோது வேலாயுதம் நூலகத்தில்தான் இருந்தார். என்னதான் முயன்றாலும் முகத்தில் தோன்றிய கலவரத்தை அவரால் மறைக்க முடியவில்லை. வலதுகால் பூட்சில் ஷுலேசில் கார்னர் இல்லை. ஷுலேசை மாட்டும் ஓட்டை மூன்றும் தேய்ந்து வெளிறிக் கிடந்தன.

சாட் பீட் கீத் ஆதாரங்களை அடுக்கிய போது வேலாயுதம் தலை குனிந்தார்.

"வந்தது நீங்கள்தான் என்பதைக் கண்டுபிடிக்க முடிந்ததே தவிர, எதற்காக வந்தீர்கள்; என்ன செய்தீர்கள் என்பதை எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதை ஒப்புக் கொள்றோம்" என்றான்



"பாம்பு கடிச்ச மாதிரி கனவு கண்டேன்?"
"விஷப் பாம்பா, விஷமில்லாத பாம்பா?"
— வி.சி. கிருஷ்ணரத்னம்

பீட்டர்.

"அப்பா!" என்று பதறியபடி ஓடி வந்தான் மோகன். அவன் வேலாயுதத்தின் மகன். அதே பள்ளியில் 5–ஆம் வகுப்பில் படிக்கிறான். கண்காட்சியில் அவன் வைத்திருந்த தபால்தலை சேகரிப்பு, பார்வையாளர் கவனத்தை ஈர்த்து வந்த ஒரு காட்சிப் பொருள்.

"அப்பா, நான் காட்சிக்கு வைத்திருக்கும் சர்வீஸ் தபால் தலை வரிசையில் யாரோ இருபது ரூபாய் தபால் தலையை மாற்றி விட்டார்கள். முத்திரை போடாத தபால் தலை அப்பா அது. அதை மாற்றி இப்போ முத்திரை போட்ட, தபால் தலையை வைத்திருக்கிறார்கள் "என்றான் அப்பாவித்தனமாக மோகன்.

சர்வீஸ் தபால் தலை, அரசாங்கப் பணிகளுக்காக மட்டுமே பயன்படுத்தக் கூடியது. வெளியார் பயன்படுத்துவது பெருங் குற்றம். தினமும் பள்ளிக்கான தபால் செலவு, இருப்பு கணக்குகளை கவனிப்பது வேலாயுதத்தின் பொறுப்பு.

"தெரியாத்தனமாக, மோகன், காட்சிக்காக வைத்து விட்டிருந்த பயன்படுத்தாத சர்வீஸ் தபால்தலையை, விஷயம் தெரிந்தவர்கள் கண்டுபிடித்து விட்டால், தன் வேலைக்கு ஆபத்து என்று அதை மாற்றி விடவே நீங்கள் நேற்று வந்திருக்கிறீர்கள்" என்றாள் கீதா.


வேலாயுதம் தலை குனிந்தார்.

"சார், நாங்க வீட்டுக்குப் போய் குளித்து சாப்பிட்டு ஒரு தூக்கம் போட்டு வருகிறோம்" என்று சாட் பீட் கீத் கிளம்பினர். இப்போதைக்கு அவர்களுக்கு நாமும் விடை கொடுப்போம்.



பாதிக் கீரை

கோடை விடுமுறைக்கு எங்கள் வீட்டிற்கு வந்த உறவினர்களுள் ஐந்து வயது அத்தை பையன் முத்துவும் அடக்கம். ஒருநாள் எங்கள் தெருவில் கீரைக்காரி "அரைக்கீரை, அரைக்கீரை" எனக் கூவி விற்றுச் சென்றாள். எங்கள் வீட்டிலும் வந்து கேட்டாள். உடனே முத்து " எங்களுக்கு முழுக்கீரைதான்




வேண்டும். பாதிக்கீரையெல்லாம் வேண்டாம்" என்றானே பார்க்கலாம்.

அனந்தபுரம் க.ஜெயப்புதல்வன்

விசில்

ஒருநாள் திருவாரூரிலிருந்து கும்பகோணத்திற்கு சோழன் பேருந்தில் சென்று கொண்டிருந்தேன். குடவாசல் பேருந்து நிலையத்தில் பஸ் நின்று கண்டக்டரின் விசில் சத்தத்துடன் பஸ் புறப்பட்டது. மறுபடி அரசினர் மருத்துவமனை நிறுத்தத்தில் பஸ் நின்று ஒரு பயணியை ஏற்றிக் கொண்டது. பஸ் புறப்பட வேண்டும். ஆனால் கண்டக்டரின் விசில் சத்தம் இல்லை! அப்போது தான் ஓட்டுநர் உள்பட அனைவருமே கவனித்தோம் பேருந்தில் கண்டக்டர் இல்லை என்பதை! சிறிது நேரத்திற்கெல்லாம் அடுத்து வந்த வேறொரு பேருந்திலிருந்து சிரித்துக்கொண்டே கண்டக்டர் வந்து இறங்கி எங்கள் பஸ்ஸில்




ஏறி விசில் அடித்தார். பஸ் புறப்பட்டது.

நடந்தது இதுதான். பஸ் ஸ்டாண்டில் வேறோர் பஸ்ஸுக்கு அடிக்கப்பட்ட விசிலைக் கேட்டு டிரைவர் வண்டியை எடுத்து வந்து விட்டார்!

திருவாரூர் மு.தனகோபாலன்

பார்க்கிறேன்!

எங்கள் தெருவுக்கு ஒருநாள் இரு குரங்குகள் எப்படியோ வந்துவிட்டன. அதை வேடிக்கைப் பார்க்க சிறுவர்களின் கூட்டம் கூடிவிட்டது. என் தம்பியும் போய்ப் பார்க்க வேண்டும் என்று அடம் பிடித்தான். ஆனால், அவனை அனுப்ப வேண்டாம் என்று அம்மா கூறி விட்டார். அவன் கேட்பதாய் இல்லை.




உடனே நான் (முகம் பார்க்கும்) கண்ணாடியை எடுத்து "இதுல பார்டா, குரங்கு தெரியும்" என்றேன். சற்றும் எதிர்பாராத நிலையில் உடனே அவன். "அதுதான் கண்ணாடி இல்லாமலேயே பார்க்கிறேனே?" என்றான். அவன் திருப்பி விட்ட பதிலைக் கேட்டு நாங்கள் அனைவரும் வாய்விட்டுச் சிரித்து விட்டோம் தம்பி உள்பட.

பவித்திரமாணிக்கம் டி. வரதன்

பறக்காமல் இருக்க!

நானும் என்னுடைய அப்பாவும், அம்மாவும் உறவினர் கல்யாணத்துக்குச் சென்றோம். என் சித்தாப்பாவும் கூட வந்திருந்தார். நாங்கள் கல்யாணத்திற்குப் போய்விட்டு வீட்டுக்குத் திரும்பி வரக் கிளம்பினோம். கல்யாணம் சென்னையில். எங்கள் ஊருக்கு வருவதற்குள் பசி எடுத்து




விட்டது. ஆகையால் வழியில் ஓட்டலுக்குச் சென்றோம். "பேப்பர் தோசை" கேட்டோம். சர்வர் எடுத்து வந்து வைத்தார். அப்போது சித்தப்பா, "கொஞ்சம் மேலே சுற்றுகின்ற ஃபேனை நிறுத்துங்கள். தோசை பறந்துவிடப் போகிறது!" என்று நகைபடக் கூறினார். அனைவரும் சிரித்து விட்டோம்.

விழுப்புரம் ந.துரை

கொண்டையில்

வகுப்பில் ஆங்கில ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். எல்லோரும் கவனித்துக் கொண்டிருந்தோம். ஒரு மாணவி மட்டும் கவனிக்காமல் என்னவோ தேடிக் கொண் டிருந்தாள். "என்ன பண்றே? புத்தகம் இருக்கா?" என்று கேட்டார் ஆசிரியர். "இருக்கு" என் றாள் அவள். "நோட்டு இருக்கா?"




என்றார். "அதுவும் இருக்கு" என்றாள் அவள். "அப்ப, என்ன தான் தேடறே?" என்று கேட்டார் ஆசிரியர் எரிச்சலுடன். "என் பேனாவைக் காணோம் சார்" என்றாள் அந்த மாணவி கவலையுடன். அவளை உற்று நோக்கிய ஆசிரியர், "உன் பேனா, உன் கொண்டையிலே இருக்கிறது!" என்று கூறவும் வகுப்பே சிரிப்பலையில் அதிர்ந்தது. அதுவரை தன் தலைக் கொண்டையில் செருகியிருந்த அந்தப் பேனாவையே அந்த புத்திசாலி மாணவி தேடிக் கொண் டிருந்திருக்கிறாள்!

துத்திப்பட்டு ப.பரசுரமன்

போடா, மல்லாட்டை!

ஓய்வுநேரங்களில் எங்கள் ஆசிரியர், பொது அறிவில் வினாக்கள் கேட்பார். ஒருமுறை, 'பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் எது?' என்று கேட்டார். யாருக்கும் தெரியவில்லை. எனக்கும் கூடத்தான். இந்த எளிய கேள்விக்குக்கூட விடை தெரியவில்லையே என்று ஆசிரியருக்கு ஒரே கோபம். அந்த நேரம் பார்த்து, என் நண்பன் சதிஷ், "பிலிப்பைன்சுக்கு எதுடா தலைநகர்?" என்று மெதுவாகக் கேட்டான். எனக்கு ஒரே சலிப்பு. "போடா, மல்லாட்டைத்தான்" என்றேன். எங்க ஊர்ப் பக்கம், மணிலா என்கிற வேர்க்கடலையை "மல்லாட்டை" என்பார்கள். நான் கூறியதைக் கேட்ட




ஆசிரியர், மணிலா என்பதைத்தான் நான் நாசூக்காக அப்படிக் கூறி நண்பனுக்கு உணர்த்தியதற்காக எனக்கு மதிப்பெண் வழங்கினார். எனக்கு ஒரே மகிழ்ச்சி! இருக்காதா பின்னே?

சாத்தனூர் அணை எம்.சேதுபதி

டூப் ரூபாய் இல்லை!

ஒரு ரூபாய், 2 ரூபாய், 5, 10, 20 ரூபாய், 500 ரூபாய் நோட்டுக்களைப் போல பெரிய சைஸில் போலி டூப் நோட்டுகள் சென்னை பாரிஸ் கார்னர் முதல் எல்லா இடங்களிலும் இரண்டு ரூபாய் விலையில்



கிடைக்கின்றன. இவைகளைக் குழந்தைகள் வாங்கி விளையாடுகின்றனர். பெரியவர்கள் பீரோக்களில் ஒட்டி வைத்தால் பணம் நிஜமாகவே வருமென நம்புகின்றனர்.

எங்கள் பள்ளியில் மூன்றாம் வகுப்பு மாணவர்களிடையே கசமுசா என்ற குரல் எழவே ஆசிரியை என்னவென்று விசாரித்தார். "டீச்சர், இவன் வீட்டிலிருந்து ரூபா திருடிட்டு வந்துட்டான்" என்றான் ஒரு குட்டிப் பையன். "டீச்சர், அது டூப் ரூபா" என்றான் அந்தப் பையன். டீச்சர் அந்த நோட்டை வாங்கிப் பார்த்தவர் அசந்து விட்டார். அது நிஜமான ஐந்நூறு ரூபாய் நோட்டு! விளையாட்டான நோட்டு என எண்ணி அந்த மாணவன் அதை எடுத்து வந்து விட்டான்!. பிறகு பெற்றோரை வரவழைத்து "ரூபாயை, குழந்தைகள் கைக்கு எட்டும்படி வைக்காதீர்கள்" என்று கூறித் திருப்பித் தந்தார் ஆசிரியர். ஆயிரம் முறை நன்றி கூறி, பணத்தைப் பெற்றுச் சென்றனர் பெற்றோர்".


அண்ணாநகர் வி.பொன்னியம்மாள்.

விரல் கணக்கு

இந்த விடுமுறையில் எங்கள் வீட்டிற்கு எங்கள் அக்கா தன் குழந்தையோடு வந்து இருந்தாள். குழந்தை கான்வெண்டில் முதல் வகுப்புப் படிக்கிறான். படுசுட்டி. அவன் என்னிடம் வந்து "கணக்குக் கேளு, நான் பதில் சொல்கிறேன்" என்றான். நானும் "ஐந்திலிருந்து

மூன்றைக் கழித்தல் எவ்வளவு?" என்று கேட்டேன். அவன் தன் கை விரல்களை நீட்டி மடக்கி ஒருவழியாக சரியான விடையைக் கூறினான்.

பிறகு என் அம்மாவிடமும் சென்று கணக்குப் போடும்படி கேட்டு இருக்கிறான். என் அம்மா "நாற்பதில் இருந்து முப்பத்து ஐந்தைக் கழித்தால் எவ்வளவு?" என்று கேட்டார்கள். சற்று யோசித்த அவன் என் அம்மாவின் கை, அவன் கை விரல்களை இழுத்து நீட்ட வைத்து எண்ண ஆரம்பித்து விட்டான்! "என்ன




செய்கிறாய்?" என்று கேட்டாள் அம்மா. "நாற்பது விரல் இருந்தாத்தானே பாட்டி முப்பத்தி ஐந்தைக் கழிக்க முடியும்?" என்று அவன் கூறினானே பார்க்கலாம். ஒரே சிரிப்புத்தான்!

நங்கைநல்லூர் தி.வே.சிவசங்கர்

காப்டன்!

அன்று டி.வி.யில் அனைவரும் 'பெப்சி கப்' மாட்ச் பார்த்துக் கொண்டிருந்தோம். தெரிந்தவர்கள் வீட்டிலிருந்தும் சிறுவர்கள் வந்திருந்தனர். அதில் ஒரு சிறுவனுக்கு கிரிக்கெட் புரியும் வயது கிடையாது. அவன் மிகவும் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தான். சிறுவனின் அண்ணன் அவனைக் கூப்பிட்டு "தம்பி! அதோ பார் இந்திய அணி காப்டன்




(captain) என்று அசாருதினைக் காண்பித்தான். அந்தச் சமயம் அசார் தலையில் கேப் (cap) போட்டிருந்தார். சிறிது நேரத்திற்கு பின் ஜடேஜாவைக் காண்பித்த சிறுவன் "எல்லாரும் காப்டனைப் பாருங்கள்" என்றான். அவன் அண்ணன் "தம்பி! இவரல்ல காப்டன்" எனக் கூறிப் பார்த்தான். ஆனால் சிறுவனோ "உங்களுக்கு எல்லாம் ஒண்ணுமே தெரியவில்லை. காப் (cap) போட்டவர்தான் காப்டன் (captain)" என்றான். எங்களால் சிரிப்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அன்று முதல் நாங்கள் அந்தச் சிறுவனை காப்டன் (captain) என்றே அழைக்கிறோம்.

சிதம்பரம்-2 நித்யா இளங்கோ

ஏரி(றி) பார்த்தியா?

இந்த விடுமுறைக்கு எனது சித்தியும் சித்தி மகன் ரகுவும் சென்னைக்கு வந்து சென்னையைச் சுற்றிப் பார்த்து விட்டு



வந்தார்கள்.

"ரகு எங்கெல்லாம் போனே?" என்று கேட்டேன்.

"முதலைப் பண்ணை, படகு சவாரி, வண்டலூர் ஜூ, பீச் எல்லாம் பார்த்தேன்" என்றான்.

"மெரினா பீச்சில் கலங்கரைவிளக்கத்தைப் பார்த்தியா?

"பெரிய லைட், சுத்தி சுத்தி எரியுமே? அதானே?" என்று கேட்டான். பிறகு "ஓ பார்த்தேனே" என்றான்.

"அங்கே ஏறிப் பார்த்தியா?" எனக் கேட்டேன்.

"அங்கே ஏரி எதுவுமில்லையே! எல்லாம் கடல்தானே?" என்று அவன் கூறியதும் எல்லோரும் சிரித்து விட்டோம்.

கலங்கரைவிளக்கத்தில் ஏறிப் பார்த்தயா என்று கேட்டதை நீர் நிரம்பிய 'ஏரி' என்று நினைத்துக் கொண்ட அவனுடைய அப்பாவித்தனத்தை நினைத்தால் இப்போதும் சிரிப்பு வருகிறது.

சென்னை-15. பாக்கியலக்ஷ்மி

'ஷாம்பு'

என் விட்டிற்கு கிறிஸ்துமஸ் - பொங்கல் விடுமுறையில் என் பெரியப்பா, பெரியம்மா அவர்களின் பிள்ளைகள் எல்லாம் வந்திருந்தனர். நான் என் மாமாவிற்குப் பொங்கல் வாழ்த்து எழுதிக் கொண்டிருந்தேன். அதன் மேல் தபால் தலை ஒட்ட வேண்டும் என்பதால், பெரியப்பா பையனை அழைத்து போய் ஸ்டாம்பு வாங்கி வா" என்றேன்.



அவனோ கடைக்குச் சென்று தலையில் தேய்த்துக் கொள்ளும் ஷாம்புவை வாங்கி வந்தான். என்னிடம் கொடுத்தான். புரியாமல் விழித்தபோது "நீதான் ஷாம்பு வாங்கி வரச் சொன்னாயே?" என்று கேட்டான். திகைத்தோம். திகைப்பு நீங்கி உண்மை புரிந்ததும் எல்லோரும் சிரித்தோம். பிறகுதான் பெரியப்பா "என்ன கேட்கணுமோ அதைத் தெளிவாகக் கேட்க வேண்டும்" என்று கூறினார். உண்மை தானே?

குருசாமிப்பாளையம் ச.செல்வராஜ்


துப்பாக்கியில்

எங்களது வகுப்பாசிரியர் மாணவர்களின் அறிவு வளர்வதற்கு நிறைய பொது அறிவுக் கேள்விகளைக் கேட்பார். அன்



றும் பாடத்தை நடத்தி முடித்துவிட்டு, "நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு நீங்கள் சரியான பதிலைக் கூற வேண்டும் என்று கூறிவிட்டு, 'காந்தியடிகள் இறந்தது கி.மு.விலா அல்லது கி.பி.யிலா' என்று கேட்டார். அதற்கு ராஜேஷ் என்கிற குறும்புக்கார மாணவன் எழுந்து, "சார்! நீங்கள் கூறியதே தவறு. காந்தியடிகள் இறந்தது துப்பாக்கியில்தான்' என்று கூறினான். ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்து விட்டோம்.

மூலப்பாளையம் ச.மகேஷ்



வாலறுந்த குதிரை!

ராமுவும் சோமுவும் அண்ணன் தம்பிகள். ராமு பெரிய பணக்காரன். ஆனால், தலை நிறைய கர்வம். யாருக்கும் உதவி புரிய மாட்டான். தம்பி சோமு இதற்கு நேர் எதிர். பரம ஏழை. விறகு வெட்டித்தான் பிழைத்தான். பல நாள் பட்டினிதான். ஆனால், யார் கெட்டாலும் தன்னால் இயன்றவரை உதவுவான். அன்பாகப் பேசுவான்.

மழைகாலம் நெருங்கிக் கொண்டிருந்தது. அதற்கு முன் நிறைய மரங்களை வெட்டி வைத்துக் கொள்ள சோமு எண்ணினான். அதனால் வெட்டிய மரங்களைத் தூக்கிக் கொண்டு வர, அண்ணன் ராமுவிடம் போய் அவனுடைய குதிரையை இரவல் கேட்டான். அண்ணன் ராமு வேண்டா வெறுப்பாகத் தன் குதிரையைத் தந்தான்.

"இனிமேல் இப்படிப்பட்ட உதவியை எல்லாம் கேட்காதே! குதிரை பத்திரம். அதற்கு ஏதாவது ஆயிற்று என்றால் சும்மா விடமாட்டேன்'' என்று குதிரையைத் தந்து எச்சரித்து அனுப்பினான்.

சோமு, அண்ணனின் குதிரையுடன் காட்டுக்குக் கிளம்பினான். மரங்களை வெட்டி கட்டாகக் கட்டி, குதிரையின் முதுகில் வைத்துக் கட்டினான்.

திரும்பும் வழியில் சோமு ஒரு புலியிடம் சிக்கிக் கொண்டான். புலியைக் கண்டு பீதியடைந்த குதிரை தறி கேட்டு ஓட, புலி விடாமல் துரத்தியது. புலியின் பக்கம் நெருங்கிப் பாய்ந்தது. குதிரையின் வால் தான் அதன் வாய்க்குக் கிடைத்தது! குதிரை அறுந்த வாலுடன் தப்பித்துக் கொண்டது!

அண்ணன் ராமுவுக்கு பயங்கரமான கோபம். வால் அறுந்த குதிரை என்று ஊரார் ஏச மாட்டார்களா? எத்தனை பரிகாசம் பண்ணுவார்கள்! தம்பி இந்த வரை புலிக்கு இரையாகாமல் உயிர் தப்பி வந்தானே என்று அண்ணன் எண்ணவில்லை. தம்பியை அழைத்துக் கொண்டு நீதிமன்றம் போனான். தம்பி சோமுவின் மேல் குற்றம் சாட்டினான்.

அண்ணன் தொடுத்த குற்றங்கள் எதையும் தம்பி மறுக்கவில்லை.

''நான் வேண்டுமென்றே இதைச் செய்யவில்லை. எதிர்பாராதது நடந்து விட்டது. இப்படி யாகும் என்று தெரிந்திருந்தால் அண்ணனிடம் குதிரையை இரவல் வாங்கியிருக்க மாட்டேன்" என்று அழுதான் சோமு.

"குதிரைக்கு என்ன விலை ஆகுமோ அந்தத் தொகைக்கு நான் அண்ணன் வீட்டில் வேலை செய்து கழித்து விடுகிறேன்" என்று தானே ஒரு வழியும் கூறினான்.


'அது முடியாது. எனக்கு என் குதிரையே தான் வேண்டும். இந்த வாலறுந்த குதிரை வேண்டாம்'' என்று முரண்டு பிடித்தான். ராமு.

நீதிபதி, அண்ணன் ராமுவுக்கு இதமாக எத்தனையோ கூறினார். ஆனால் ராமு கேட்கவில்லை. பிடிவாதமாக இருந்தான்.

''சரி, உனக்கு வால றுகாத, உன் குதிரை தானே வேண்டும்? அதற்குக் காயம் ஆறி, வால் வளர்ந்து பழைய நிலைக்கு வரும் வரை சோமுவிடமே குதிரை இருக்கட்டும்'' என்று தீர்ப்பளித்தார் நீதிபதி.

அறுந்த வால் எந்தக் காலத்தில் முளைப்பது? ராமு தன் பிடிவாத குணத்தால்தானே கேட்டான். இப்பொழுது வாலறுந்த குதிரை, ஜாம் ஜாமென்று சோமுவுக்கு விறகு ஏற்றி வரப் பயன்படுகிறது.

-எம். பத்மப்பிரியா.
விஷ்ணுபுரம்



யோசனை

சிங்கராஜாவின் அமைச்சரவைக் கூட்டம் அவசரமாகக் கூடியிருந்தது. எல்லா அமைச்சர்களும் அமர்ந்து கொண்டதும் சிங்கராஜாவே பேச ஆரம்பித்தார்.

"நமது அரசின் நிதி நிலை மிகவும் மோசமாக; கவலைக்குரியதாக இருக்கிறது. காடுகள் மனிதர்களால் அழிக்கப்படுவதால் நாம் வாழத் தேவையான பகுதிகள் குறுகிக் கொண்டே வருகின்றன. நம் வனவிலங்குகளின் எண்ணிக்கையும் குறைந்து கொண்டே வருகின்றது. நம்மைக் காப்பாற்றிக் கொள்ள நாம் செய்ய வேண்டிய பணிகள் வளர்ந்து கொண்டே இருக்க, அரசாங்கத்தின் வருமானம் குறைந்து கொண்டே வருகின்றது. வருமானத்தை அதிகரிக்க உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுத்தாக வேண்டும். என்ன செய்யலாம் என்று உங்கள் கருத்தைக் கேட்கவே இந்த அவசரக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறேன். ஒளிவுமறைவு இன்றி உங்கள் கருத்தைக் கூறுங்கள்" என்றார் சிங்கராஜா.

"குகையில் வாழும் விலங்குகளுக்கு குகை வரி போடலாம்" என்றார் துணை அமைச்சர்களில் ஒருவரான நரியார்.

"நிலத்தில் வாழ்ந்தாலும் நீந்துவதில் தனியான ஆர்வம் காட்டும் யானை, புலி போன்றவைகளுக்கு தண்ணீர் வரி விதிக்கலாம்" என்றார் மற்றொரு துணையமைச்சர் கரடியார்.

எல்லா அமைச்சர்களும் கூறியதை சிங்கராஜா கவனமாகக் கேட்டார். தலைமை அமைச்சர் புலியார் மட்டும் வாயே திறக்கவில்லை. சிங்கராஜாவுக்கு இது கவலையாக இருந்தது.

"புலியாரே, தலைமை அமைச்சரான தாங்கள் எந்தக் கருத்தையும் கூறவில்லையே! உங்கள் அனுபவமும் கருத்தும் நல்லாட்சிக்கு வழிகாட்டி அல்லவா? தயவுசெய்து கூறுங்கள் உங்கள் கருத்தை?" என்று கேட்டார் சிங்கராஜா.

புலியார் எழுந்தார்.

"சிங்கராஜா, துணையமைச்சர்கள் கூறிய யோசனைகள் எல்லாமே பயனுள்ளவைதான். ஆனால், நமது நிதிப் பற்றாக்குறைக்கு, இவை போதுமானவை அல்ல. அதோடுகெட்ட பெயர்தான் கிடைக்கும்."

"அப்படியானால், நமக்கு உதவக்கூடிய வேறு யோசனைகள் ஏதாவது உங்களுக்குத் தோன்றுகிறதா?" – சிங்கராஜாதான் ஆவலுடன் கேட்டார்.

"இருக்கிறது. ஆனால் அதைச் செயல்படுத்த எல்லா விலங்குகளின் முழு ஒத்துழைப்பும் தேவை."

"யோசனையை முதலில் கூறுங்கள்?"

"எத்தனையோ நூற்றாண்டுகளாக, நம்முடைய விலங்குகளில் சில, தலைமுறை தலைமுறையாக குகைகளிலும், பாறைப் பிளவுகளிலும் வாழ்ந்து வருகின்றன. தங்கள் முன்னோர்கள் சேர்த்து வைத்த நகைகளும், தங்க வெள்ளிக் கட்டிகளும் அவைகளிடம் குவிந்து கிடக்கின்றன. அவைகளை நமது அரசின் திட்டங்களுக்கு நன்கொடையாக வழங்கும்படி கேட்டுக் கொள்ளலாம். அப்படி வழங்குபவர்களை நமது அரசாங்கத்தின் காப்பாளர்களாக அறிவிக்கலாம்."

"வெறும் காப்பாளர் அறிவிப்புக்கு எல்லாம், இந்த விலங்குகள் மயங்கி, தங்களிடம் உள்ள முன்னோர் சேர்த்து வைத்துள்ள சொத்துகளை அரசாங்கத்திற்குக் கொடுத்து விடுவார்கள் என்று நாங்கள்

யாருக்குத் துலாபாரம்!

நம்பவில்லை."

கூறியது துணை அமைச்சர்களில் ஒருவ ரான கரடியார்தான்.

"எனக்கும் அப்படித்தான் தோன்று கிறது புலியாரே" என்றார் சிங்கராஜா.

"என்னிடம் இதற்கும் ஓர் அருமையான யோசனை இருக்கிறது. நீங்கள் மனம் வைத்தால் அதைச் செயல்படுத்தி வெற்றிகாண முடியும்" என்றார் புலியார்.

''யோசனையைச் சொல்லுங்கள்?''

"கேட்டு விட்டு என் மேல் கோபப்படக் கூடாது? உங்கள் பிறந்த நாளன்று இவர் களையெல்லாம் நீங்கள் அரச சபைக்கு அழைக்க வேண்டும். நீங்களே அவர்களை உங்கள் சிங்காசனத்தில் ஒரு நிமிஷம் உட் கார வைத்து, செங்கோலையும் தந்து, அரசு காப்பாளர் பதக்கத்தை அவர்களுக்கு அணிவிக்க வேண்டும். சிங்கராஜாவுக்கு சமமான பொறுப்பை தங்கள் நன்கொடை யால் அவர்கள் பெறுகிறார்கள் என்பது பொருள். இதற்கு மயங்காதவர்களே இருக்க மாட்டார்கள். சிங்கராஜா தனது சிங்காதனத்தில் இவர்களை ஒரு நிமிஷம் உட்கார வைக்கவும், தங்கச் செங்கோலை வைத்துக் கொள்ளவும், பதக்கத்தைத் தன் கையால் அணிவிக்கும் வரை அனுமதிக்க பரந்த மனத்துடன் ஒப்புக் கொண்டால் இது மிகவும் வெற்றி தரும் திட்டமாக அமையும்."

தங்கள் முன்னோர்கள் உட்கார்ந்து அலங்கரித்த பெருமைமிக்க சிங்காதனத் தில் மற்றவர்களை உட்கார அனுமதிப் பதா? சிங்கராஜா தயங்கினார்.

"இது சிங்கராஜாவுக்குப் பெருமையே தவிர, கௌரவக் குறைவு அல்ல. சிங்கா சனத்தின் அருகே கூடச் சென்றிராத பல விலங்குகள் உள்ளன. அவையும் கூட ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தினால் இந்தப் பெருமையைப் பெறலாம் என்றும் அறிவிக்கலாம். இது சிங்கராஜாவுக்குப் பெருமையளிக்கும் செயலே. அரசாங்க செலவுக்குப் பணம் போதவில்லை என் றால், எல்லா ராஜாக்களும் அதிக வரி விதிப்பார்கள். எப்ப டியோ கஷ்டப்பட்டு எல்லோரும் மனத் திற்குள் திட்டிக் கொண்டே வரியைச் செலுத்துவார்கள். அப்படி அதிக வரி விதித்து எல்லோரையும் துன்பப்படுத்தாது, இப்படி ஒரு புதுமையான திட்டத்தை அறி வித்ததற்காக ஏழைகள் உங்களை மனதார வாழ்த்துவார்கள்'' என்று திட்டத்தின் அருமை பெருமைகளை மேலும் விளக்கி னார் புலியார்.

சிங்கராஜா அதற்கு மேல் தயங்க வில்லை. "நீங்களே திட்டத்தைத் தீட்டுங் கள். நானே அறிவிக்கிறேன்" என்றார்.

அறிவிப்பு வெளியாயிற்று. எதிர்பார்த் ததற்கும் மேல் நல்ல வரவேற்பு இருந்தது. தங்கள் குகைளில் யாருக்கும் பயன்படா மல் குவிந்திருந்த செல்வங்களை, பல விலங்குகள் தாமாகவே கொண்டு வந்து தந்தன. சிங்கராஜாவின் அரசுக்கு ஏற்பட்ட நிதி நெருக்கடி ஒருவழியாகத் தீர்ந்தது.



அடுத்து நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இப்படி ஓர் அருமையான யோசனையைக் கூறியதற்காக சிங்கராஜா புலியாரைப் பாராட்டினார்.

"எந்தெந்த விலங்குகளிடம் பரம்பரைச் செல்வம் குவிந்து கிடக்கின்றன என்பதை நமது ஒற்றர்கள் மூலம் தெரிந்து வைத்துக் கொண்டுதான் இந்த யோசனையை வெளியிட்டேன். நீங்களும் பரந்த மனத்துடன் இதற்கு ஒத்துழைத்தீர்கள். திட்டத்தின் வெற்றிக்கு உங்கள் ஒத்துழைப்பே காரணம்" என்றார் புலியார் அடக்கமாக.

"புலியாரே, உங்களிடம் உள்ள விவரப்படி பரம்பரைச் செல்வத்தைக் குவித்து வைத்துள்ள எல்லா விலங்குகளும் இந்தத் திட்டத்திற்குள் வந்து விட்டனவா?" என்று கேட்டார் சிங்கராஜா.

"இல்லை அரசே. அருவிக் கரை குகையில் வாழும் புலியார்தான் பாக்கி. அவரிடம் அளவற்ற தங்க வெள்ளிக் கட்டிகளும் நகைகளும் குவிந்து கிடக்கின்றன. அவரும் இந்த திட்டத்திற்கு இணங்கி விட்டால், இது பூர்த்தியாகி விடும்" என்றார் புலியார்.

"அருவிக்கரைப் புலியார், பெரிய கஞ்சன். இதற்கெல்லாம் எளிதில் மசியக் கூடியவர் அல்ல. பேசாமல் சட்டம் போட்டு அவைகளை அரசாங்கமே எடுத்துக் கொள்வதுதான் ஒரே வழி" என்றார் துணை அமைச்சர் கரடியார்.

"சட்டம் போட்டு எடுத்துக் கொண்டால், குடிமக்களிடம் கெட்ட பெயர் வாங்கும்படி இருக்கும். நான் வேறு ஒரு திட்டம் வைத்திருக்கிறேன். அது வெற்றி பெறவில்லை என்றால் கடைசியில்



சட்டம் போடலாம். சிறிது பொறுத்திருப்போம்" என்றார் தலைமை அமைச்சர் புலியார்.

அருவிக்கரைப் புலியார் இரை கிடைக்காமல் அலைந்து கொண்டிருந்தார். குளித்துத் தண்ணீர் குடிக்க ஆற்றில் இறங்கிய யானையாரைக் கண்டதும் அவர் சுறு சுறுப்பானார். யானையார் ஆற்றில் இறங்கித் தன்னை மறந்து குளித்துக் கொண்டிருக்கும்போது, புலியார் பின்னால் இருந்து தாவி விட்டார்.

"புலியாரே, என் தோல்வியை நான் ஒப்புக் கொள்கிறேன். எனக்கு முன்னால் வந்து தாக்கியிருந்தால் நீங்கள் காணாமல் போயிருப்பீர்கள். புத்திசாலித்தனமாக பின்னால் இருந்து தாவி, தலைப்பக்கம் தாக்க வந்து விட்டீர்கள். இனிமேல் நான் போராடினால் பயனில்லை," என்று பணிந்தார் யானையார்.

"இதுதான் புத்திசாலித்தனம்," என்று பாராட்டிய அருவிக்கரைப் புலியார், "சரி, நம்ம காட்டு அரசாங்கத்தின் சட்டப்படி, எனக்கு இரையாகப் போகும் உங்களிடம் உங்கள் கடைசி விருப்பம் என்ன என்பதைக் கேட்கிறேன். கூறுங்கள். தப்பிச் செல்வதைத் தவிர வேறு எதைக் கேட்டாலும் நிறைவேற்றிய பிறகே, இரையாகப் பிடித்த விலங்கு அல்லது பறவைகளைத் தின்னலாம் என்று நம்ம சிங்கராஜா கடுமையான உத்தரவு பிறப்பித்திருக்கிறாரே. சொல்லுங்கள்? உங்கள் கடைசி விருப்பம் என்ன யானையாரே?" என்று கேட்டார்.

"நான் குட்டியாக இருக்கும்போது, என் பின்காலில் ஏதோ கட்டி வந்து திண்டாடினேனாம்!. கால் சரியாப் போனால் அரச மரத்தடி விநாயகர் கோவிலுக்கு தங்க வெள்ளி துலாபாரம் தருவதாக எங்கம்மா வேண்டிக்கிட்டாங்களாம். அந்த வேண்டுதலை மட்டும் நிறைவேற்றினீங்கன்னா நான் மகிழ்ச்சியோடு உங்களுக்கு இரையாவேன்" என்றார் யானையார்.

"என்னது! உங்களை வைச்சு தங்க வெள்ளி துலாபாரமா? இது நடக்கக்கூடிய காரியமா? குட்டியா இருந்தப்போ வேண்டிக்கிட்டதை, அப்பவே செஞ்சிருக்க வேண்டியதுதானே?" என்று பதை பதைத்தார் அருவிக்கரைப் புலியார்.

"எங்கம்மா என் கூடவே இருந்திருந்தால் பிரார்த்தனையை உடனேயே நிறைவேற்றியிருப்பாங்க. அவங்களை சர்க்கஸ்காரன் பிடிச்சுக்கிட்டுப் போயிட்டான். எனக்கு அவங்க வேண்டிக்கிட்டது கூடத் தெரியாது. எனக்கு போன மாதம் காலில் கட்டி வந்தது. பெரியமலை வைத்தியர் தான் மருந்து வைச்சுக் கட்டினார். அப்பத்தான் அவர், இதே கால்லதான் உனக்கு சின்னப்போ கட்டி வந்தது. நான்தான் வைத்தியம் பண்ணினேன். உங்கம்மா இப்படி தங்க வெள்ளி துலாபாரம் பண்றதா வேண்டிக்கிட்டாங்க. அதைப் பண்ணாம விட்டதால் தெய்வ குற்றமா இருக்கும்னு நினைக்கிறேன். அதனால முதல்ல துலாபாரத்தை முடின்னு அறிவுரை பண்ணினார். தற்செயலா நானும் உங்ககிட்டே சிக்

கிக்கிட்டேன். என் கடைசி விருப்பத்தை நிறைவேற்றி வைத்து என்னை இரையாக்கிக் கொள்ளணும்னு வேண்டிக்கிறேன்" என்று பணிவாக மண்டியிட்டு இறைஞ்சினார் யானையார்.

"ஐயையோ! உங்கம்மா துலாபாரம் பண்ண வேண்டிக்கிட்டப்போ நீ ஐநூறு கிலோதான் இருந்திருப்பே! இப்போ பத்தாயிரம் கிலோ இருப்பியே! இந்த அளவுக்கு துலாபாரம் கொடுக்க யார்கிட்டே தங்கமோ வெள்ளியோ இருக்கு! எனக்கு நீங்க இரையாகவும் வேண்டாம். உங்க கடைசி விருப்பத்தை நிறைவேற்ற நான் தங்க வெள்ளி துலாபாரம் தரவும் வேண்டாம். என்னை விட்டுடுங்க" என்று திரும்பிப் போக முயன்றார் புலியார்.

"இந்த மாதிரி இரையாகப் பிடித்த விலங்கின் கடைசி விருப்பத்தை நிறைவேற்றாமல் பின்வாங்கறவங்களுக்கு சிங்கராஜா ஆட்சியில் என்ன தண்டனை தெரியுமா?" என்று கோபத்தோடு கேட்ட யானையார், தன் நீண்ட துதிக்கையால் அப்படியே புலியாரை வளைத்துத் தூக்கினார். அரச சபையை நோக்கி நடந்தார்.

"இரையாகப் பிடித்த விலங்கின் கடைசி விருப்பத்தை நிறைவேற்ற முடியாமல் பின்வாங்குவது வனவிலங்குகளின் இனத்திற்கே பெரிய அவமானம். அதோடு பெரிய குற்றமும் ஆகும்" என்றார் சிங்கராஜா.

"கடைசி விருப்பமாக யானையார் இப்படித் தங்க வெள்ளி துலாபாரம் கேட்பார் என்று யாருக்குத் தெரியும்? தெரியாமல் யானையாரை இரையாக்கிக் கொள்ள முயன்று விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்று நடுங்கினார் அருவிக் கரைப் புலியார்.

"மன்னிப்பது என் கையில் இல்லை. இரையாக சம்மதித்துத் தன் கடைசி விருப்பத்தைத் தெரிவித்த யானையார்தான் மன்னிப்பை முடிவு பண்ண வேண்டும்" என்ற சிங்கராஜா யானையாரைப் பார்த்தார்.

"எத்தனையோ தலைமுறையாக திரண்ட செல்வத்தைத் தன் குகையில் வைத்துப் பாதுகாத்து வரும் அருவிக்கரைப் புலியாரே எனக்குத் துலாபாரம் பண்ணத் தன்னிடம் தங்கம் வெள்ளி இல்லை என்று பின்வாங்கும்போது, எந்தக் காலத்தில் எங்கம்மாவின் பிரார்த்தனையை நான் நிறைவேற்றுவது? அவரிடம் உள்ள தங்க வெள்ளிக் கட்டிகளை, இருக்கின்ற வரை எடுத்து வைத்துத் துலாபாரம் செய்யட்டும். குறைவதை மகாராஜா அருள்கூர்ந்து எனக்காகத் தங்கள் அரசாங்கக் கஜானாவில் இருந்து தர உத்தரவிட வேண்டும்" என்றார் யானையார் பணிவாக.

மிகப் பெரிய தராசை அமைத்து யானையாரை ஒரு தட்டில் நிற்க வைத்தார்கள். இன்னொரு தட்டில் அருவிக்கரை புலியாரின் குகையிலிருந்து கட்டி கட்டியாகத் தங்க வெள்ளிக் கட்டிகளையும், நகைகளையும் எடுத்து வந்து வைத்தார்கள். அருவிக்கரைப் புலியார் யாருக்கும் தராது பாதுகாத்து வந்த அத்தனை செல்வமும் காலி! அத்தனையையும் வைத்தும் யானையார் இருந்த தராசுத் தட்டு மேலே எழும்பவில்லை! சிங்கராஜா பெரிய மனம் வைத்து அரண்மனை பொக்கிஷத்தைக் காலி பண்ணி தட்டில் வைத்தார். அதற்கப்புறம்தான் யானையார் இருந்த தட்டு உயர்ந்து சமமானது.

எல்லோரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். குறிப்பாக சிங்கராஜா அளவற்ற மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார். காரணம், அரசமரத்தடிப் பிள்ளையார் கோவில் அரச குடும்பத்தின் சொத்து!


நன்கொடையாகக் கொடுத்து, ஆட்சிக் காப்பாளராகி பெருமையாக வாழும் வாய்ப்பையும் இழந்து, இரையையும் இழந்து தவிக்கும் நிலை வந்தாலும் இந்த வரை உயிரைக் காத்துக் கொள்ளவாவது முடிந்ததே என்ற மகிழ்ச்சியில் ஓடினார் அருவிக்கரை புலியார்.

"எங்க ஆசிரியர் முதல் மாணவனுக்கு 'குட்' போடுவார்..."

"கடைசி மாணவனுக்கு?"

" 'குட்டு' போடுவார்!

— கு. அருணாசலம்





முதலை அரசி!

வெகு காலத்துக்கு முன்பு தற்போது 'மியன்மார்' எனப்படும் பர்மா நாட்டை ஒரு மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு நீண்ட நாள் குழந்தை இல்லை.

கோயில் கோயிலாகச் சென்று பிரார்த்தித்த பிறகு, ஓர் ஆண் குழந்தை பிறந்தது. மன்னவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி!

ஒரு நாள் குழந்தையைப் பார்க்க வந்த ஒரு சோதிடர். "அரசே! இக்குழந்தை பிறந்த நேரம், அதற்குச் சரியில்லாமல் இருக்கிறது..." என்றார்.

பதறிப் போன அரசன். "அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்....? என்று கேட்டான்.

"ஒரு சிறிய யாகம் செய்தால் தீமை விலகி விடும்.... அதற்கு முன் ஏற்பாடாக, உடனே குழந்தையை நம் நாட்டின் புனித 'ஐராவதி' நதிக்கு எடுத்துச் சென்று, புனித நீராட்டி வரச் சொல்லுங்கள்...." என்றார் சோதிடர்.

"அப்படியே செய்கிறேன்...." என்ற மன்னன் ஒரு பல்லக்கில் ராணியுடன் குழந்தையை ஐராவதியில் நீராடி வர அனுப்பினான்.

ஆற்றில் ஒரு துயர நிகழ்ச்சி நடந்தது.

ராணி குழந்தையை ஆற்று நீரில் குளிப்பாட்டும் போது,, அவள் கையிலிருந்து நழுவிய குழந்தை ஆற்று நீருடன் அடித்துச் செல்லப்பட்டு விட்டது.

ராணி பதறிப் போனாள். செய்வது அறியாது தவித்தாள். நீருக்குள் தேடிப் பார்த்தாள். உடன் சென்ற பரிவாரத்தினரும் தேடிப் பார்த்தனர். குழந்தை அகப்படவே இல்லை.

கரையேறிய அரசி அழுது கொண்டே அரண்மனை திரும்பினாள். அவளுடைய கெட்ட காலம் போலும்! வழியில் ஒரு கல் இடறிக் கீழே விழுந்து காயம் வேறு பட்டுவிட்டது.

காயத்திலிருந்து ரத்தத்தைக் கூடத் துடைத்துக் கொள்ளும் உணர்வற்று அரசி அரண்மனையை அடைந்தாள்.

மன்னனிடம் அரசி நடந்தவற்றை எடுத்துக் கூறி அழுதாள். ஆனால் மன்னன் அதையெல்லாம் நம்பவில்லை. அரசியின் கை, வாய் முகமெல்லாம் ரத்தக்கறை படிந்திருப்பதைக் கண்ட

ஜானகி மணாளன்

அரசன் அவ ளைத் தவறாக எண்ணி விட்டான்.

'குழந்தையைத் தானே கொன்று விட்டுத் தன்னிடம் வந்து அரசி பொய் கூறுகிறாள்....'என்று அரசன் நினைத்து விட்டான்.

எனவே, மிகுந்த கோபமுற்று, "எந்த நதியில் குழந்தையைப் புனித நீராட்டி வரக் கொண்டு போய்த் தவற விட்டாளோ, அதே ஐராவதி நதியில் இவளையும் வீசி எறியுங்கள்" என்று தன் பரிவாரத்தினருக்கு உத்தரவிட்டான். அரசி ஆற்றில் தூக்கி எறியப் பட்டாள்.

ஐராவதி நதிக்குள் நழுவிய குழந்தை என்ன ஆயிற்று...?

மிகப் பெரிய மீன் ஒன்று, குழந்தையை வாயில் கௌவிக் கொண்டு, நீரில் வெகு தூரம் போய்விட்டது.

வழியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஒருவன் வீசிய வலையில், குழந்தையை விழுங்கிய அந்தப் பெரிய மீன் சிக்கிக் கொண்டது.

மீனைப் பார்த்ததும் மீனவனுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. 'இன்று நமக்கு நல்ல வேட்டைதான்' என்று எண்ணி வீட்டுக்கு விரைந்து சென்று தன் மனைவியிடம் கொடுத்துச் சமைக்கச் சொன்னான். நறுக்குவதற்காக மீனை அவன் மனைவி கழுவிச் சுத்தம் செய்த போது, மீனின் வயிற்றிலிருந்து சிரிப்பொலி கேட்டது. அவள் திடுக்கிட்டாள். கணவனிடம் கூறினாள்.

அந்த மீனிடம் ஏதோ அதிசயம் இருக்க வேண்டும் என்று கருதிய அவர்கள் கவனத்துடன் மீனை அறுத்தனர்.

மீனின் வயிற்றுக்குள் இருந்த குழந்தை அவர்களைப் பார்த்துச் சிரித்தது.

அவர்களுக்குக் குழந்தை கிடையாது. கடவுள் அருளால்தான், அக்குழந்தை தங்களுக்குக் கிடைத்திருப்பதாக அவர்கள் நினைத்தனர். குழந்தையைத் தாங்களே வளர்த்து வர நிச்சயித்தனர். குழந்தை கிடைத்த மகிழ்ச்சியை, ஊரை அழைத்து விருந்து வைத்துக் கொண்டாடினர்.

அதற்குள் ஐராவதி ஆற்று மீனின் வயிற்றிலிருந்து மீனவனுக்குக் குழந்தை கிடைத்த செய்தி நகர் முழுவதும் பரவி விட்டது. அரண்மனைக்கும் அது எட்டத் தவறவில்லை.

அரசனுக்குப் 'பளிச்'சென்று புரிந்து



விட்டது. ஆற்று நீரில் நழுவிக் போன தன் குழந்தைதான், மீனால் விழுங்கப்பட்டு மீனவனின் வீட்டுக்கு வந்து வாழ்கிறது என்பதை அவன் புரிந்து கொண்டு விட்டான். அப்படியானால், அரசி கூறிய அனைத்தும் உண்மைதானோ...? அநியாயமாக அவளைத் தண்டித்து விட்டோமே.. என்று அரசன் மிகவும் வேதனைப்பட்டான்.


இருந்தாலும் தனது ஒரே வாரிசு மீனவன் வீட்டில் உயிருடன் இருப்பதை எண்ணி அரசன் மகிழ்ச்சி அடைந்தான்.

மீனவனிடம் கெஞ்சிக் கேட்டுத் தன் குழந்தையைத் திரும்பப் பெற்று வந்துவிட விரும்பிய மன்னன் ஏராளமான பொன்னும் பொருளும் எடுத்துக்கொண்டு மீனவனைத் தேடிப் போனான்.


நடந்த அனைத்தையும் அரசன் மீனவனிடம் எடுத்துக் கூறினான். "தயவு செய்து, என் குழந்தையை என்னிடம் திருப்பித் தந்து விடு...." என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

அரசனின் பரிதாப நிலை மீனவன் மனத்தில் இரக்கத்தை ஊட்டியது. குழந்தை இல்லாத தனக்குக் குழந்தை கிடைத்தது மகிழ்ச்சிதான் என்றாலும், இழந்து விட்ட குழந்தையை மீண்டும் திருப்பப் பெறும் போது, அரசனுக்கு ஏற்படப் போகும் மகிழ்ச்சியையும் அவன் எண்ணிப் பார்த்தான்.

அது மட்டுமல்ல. தன்னிடம் வளர்ந்தால் அக் குழந்தை ஒரு மீனவனாகத் தான் உருவாகும்; அதுவே அரண்மனையில் வாழ்ந்



பிறந்த நாள்



பிறந்த நாள் எல்லோருக்கும்
பிரியமான நல்ல நாள்
உறவுக்காரர் வாயில் இனிப்பை
ஊட்டுகின்ற இன்ப நாள்

நண்பருக்கு இனிப்பைத் தந்து
நாமெல்லோரும் மகிழும் நாள்
அன்னை நம்மைப் பெற்றெடுத்த
அருமையான பிறந்த நாள்

நல்ல நல்ல செயல்களைத்தான்
நாளும் செய்வேன் என்றுதான்
சொல்லவைக்கும் பிறந்த நாள்
சொன்னபடி செய்யும் நாள்

எந்த நாளாய் இருந்த போதும்
எவரோ ஒருவர் பிறந்த நாள்
எந்த நாளும் சந்திக்கின்ற
எல்லோரையும் வாழ்த்துவோம்

வாழ்க வாழ்க என்று சொன்னால்
வாழும் உலகம் இன்பமாய்
ஆழ்ந்த மனதில் தோன்றும் வாழ்த்து
அன்பை நாளும் வளர்க்குமே.

— **செல்லகணபதி.**


தால், அரசகுமாரனுக்குரிய கல்வி, சுக போகங்கள் அதற்குக் கிடைப்பதோடு, நாளைக்கு அது அந்நாட்டின் அரசனாக வும் ஆகி விடுமே....? அந்த நல்ல வாய்ப்பை நாம் கெடுப்பானேன் என்று எண்ணி, மீனவன் குழந்தையை அரசனி டமே திரும்ப ஒப்படைத்து விட்டான்.

மன்னனுக்கு மட்டற்ற மகிழ்சசி என் றாலும் அவன் மனதில் நிம்மதி இல்லை. அநியாயமாக ஒரு பாவமும் அறியாத ராணிக்குக் கொடுமை இழைத்து விட் டோமே என்று எண்ணி எண்ணிக் குமைந்தான்.

அந்தத் துக்கத்திலிருந்து விடுபட விரும்பிய மன்னன் சோதிடர்களை அழைத்துப் பேசினான்.

அவர்கள் சொன்னார்கள்: "மன்னவா, நதியில் அரசியார் தூக்கி எறியப் பட்ட அதே நாளில் ஐராவதி நதியில் புதிய உயிரினம் ஒன்று தோன்றியுள்ளது. அதை முதலை என்று அழைக்கிறார்கள். மறைந்த நம் அரசியாரே முதலை என்ற உயிரினமாக மறு பிறப்படைந்துள்ளதாக எங்களுக்குத் தோன்றுகிறது. ஏமாற்ற மடைந்து மறைந்த நம் அரசி யாரின் மறுபிறவியான முதலை, தன் ஏமாற்றத்தை மக்களிடம் காட்டி வருகிறார். நீரில் இறங்கும் எந்த உயிரி னத்தையும் முதலை அரசியார் விட்டு வைப்பதில்லை!" என் றனர் ஜோசியர்கள்.

மீனவனால் காக்கப்பட்ட அக்குழந்தை பெரியவனானதும் அந்த நாட்டின் மன்ன னானான். இருந்தும் தன்னை ஈன்ற தாயைக் காண முடியாமல் போய்விட் டதே என்ற ஏக்கமும் வருத்தம் அவன் மனத்தில் இருந்து கொண்டே இருந்தது. நேரம் கிடைக்கும்போதெல்லாம் ஐராவதி நதிக்கு அவன் போவான். தாயின் மறுபிறவி என்று எண்ணப்பட்ட முதலை களைக் கண்டு கலங்குவான். ஐராவதி நதியில் யாரும் முதலைகளை வேட்டை யாடக் கூடாது என்று ஓர் உத்தரவும் பிறப்பித்தான். இன்றும் அந்த உத்தரவு நடைமுறையில் உள்ளது.



காரணம்

பூவை அமுதன்

தேர்ச்சி பெற்றிருந்த மாணவர்கள் சிரிப்பும் கும்மாளமுமாக ஏழாம் வகுப்பு 'ஏ' பிரிவில் அமர்ந்திருந்தார்கள். எல்லோருடைய உள்ளங்களிலும் மகிழ்ச்சி வெள்ளமாக வழிந்து கொண்டிருப்பதை அவர்களுடைய முகங்கள் வெளிப்படுத்திக் கொண்டிருந்தன.

ஏறக்குறைய எல்லோருமே புதிய உடையில் இருந்தார்கள்; புதிய உணர்வில் இருந்தார்கள். சென்ற ஆண்டு அவர்களுக்கு ஆசிரியராக இருந்த அரங்கனார் அந்த வகுப்புக்குள் வந்தார்.

"உங்களை ஏழாம் வகுப்பில் பார்ப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த வருடமும் நான்தான் உங்களுக்கு வகுப்பு ஆசிரியர். உங்களோடு சேர்ந்து எனக்கும் பிரமோஷன்" என்று சொல்லி விட்டுச் சிரித்தார் அரங்கனார்.

அவர் பேச்சு மாணவர்களுக்கு உற்சாகமூட்டுவதாகவும் நம்பிக்கை அளிப்பதாகவும் இருந்தது.

அடுத்து ஆசிரியர் சொன்ன சில வார்த்தைகள்தாம் மாணவர் சிலரைச் சங்கடப்படுத்தியதாகத் தோன்றின. ஆசிரியர் இரண்டொரு மாணவர்களின்

பெயர்களைக் குறிப்பிட்டு எச்சரிக்கை செய்தார்.

"மணி, அப்துல், நீங்கள் இரண்டு பேரும் இந்த ஆண்டு தேர்ச்சி பெற்றதே பெரிய விஷயம்! பார்டர் கேஸ்தான். ஒரு மார்க்குக் குறைந்திருந்தாலும் பெயிலாகிப் போயிருப்பீர்கள். இந்த வருடம் அப்படி இருக்க கூடாது. சாம்வேல், நீ நன்றாகப் படிப்பவனாயிற்றே? கணிதத்தில் நூறுக்கு நூறு எடுக்கிற நீ, ஆண்டுத் தேர்வில் எழுபத்தெட்டுதானே எடுத்திருக்கிறாய்!" என்று ஆசிரியர் தம் கையில் வைத்திருந்த குறிப்பைப் பார்த்துக் கொண்டே கூறினார்.

அடுத்து யாரைச் சொல் வாரோ என்று எல்லோருக்கும் 'திக்திக்' என்று அடித்துக் கொண்டிருந்தது.

"பலராமன் இந்த வகுப் பிலேயே நீதான் அதிகமான மொத்த மதிப்பெண் பெற்றிருக் கிறாய். உன் முயற்சி மேலும் தொடர வேண்டும்" என்று கூறி விட்டு, "உங்களுக்கு டைம்டேபிள் இப்போது வந்து விடும்!" என்று அமர்ந்து கொண் டார் ஆசிரியர்.



அப்துல்

தலையைக் கவிழ்த்துக் கொண்டிருப் பதைப் பலராமன் பெருமாளுக்குச் சுட்டிக் காட்டினான்.

“பாவம்டா அப்துல்! நல்லாப் படிப் பான்தான். தேர்வு நேரத்தில் அவனுக் குக் காய்ச்சல் வந்திட்டது தெரியுமா?” என்று பரிதாபப்பட்டான் பெருமாள். எல்லோரும் அப்துலுக்குப் பரிதாபப்பட்டனர்.

இதையெல்லாம் கவனித்துக் கொண் டிருந்த மணிக்கு அவர்கள் மேல் எரிச் சல் எரிச்சலாக வந்தது. தன்னுடைய மார்க் குறைவுக்கு யாருமே வருந்த வில்லை என்பது ஒரு பக்கம்! அதை விட... தன்னைப் போலவே குறைந்த மார்க் வாங்கிய அப்துலுக்காக எல் லோரும் இரங்கியது மணிக்கு ஆத் திரத்தை மூட்டியது. அவர்களை அப்படியே விழுங்கி விடுவதைப் போல் பார்த்தான்.

“சும்மா பீத்திக்காதிங்கடா! நீங்கள் ளாம் காப்பி அடிச்சு எழுதி யிருப்பீங்க. நான் சுயமாக எழுதினேன். அதுதான் மார்க்குக் குறைச்சல். ஒவ்வொரு பையனுக்கு ஒவ்வொன்னிலே திறமை



இருக்கும் தெரியுமா...? நான் ஓடற ரயில்லே ஏறவும் செய்வேன். ரயில் நிற்கறத்துக்கு முன்னாடியே இறங்கவும் செய்வேன். உன்னாலே முடியுமா?” என்று வீம்பாகப் பேசினான் மணி.

தான் குறைந்த மார்க் வாங்கியதை நியாயப்படுத்திக் கொண்டதைவிட, அவர்கள் நிறைய மார்க் வாங்கியதை கேவலப்படுத்தும் முயற்சியே அவன் பேச்சில் இருந்தது.

“இதெல்லாம் திறமையிலே சேர்த் தியா, என்ன? இது முட்டாள் தனம்!” என்றான் பலராமன் அழுத்தந்திருத்த மாக.

“தைரியமில்லாத கோழைப் பையன் நீ! பேருதான் பலராமன். உனக்குப் பலமே கிடையாது. பலராமனாம் பலராமன். பேரைப் பாரு!” என்று பழித்தான் மணி.

“சும்மா உளறாதே. உன் பேரு மணி. நீ எதிலே மணியாட்டம் இருக்கே? மண்டுப் பய. உன் கையெழுத்துக் கூட மணி மணியா இல்லையே...? கோழி கிறுக்கலாயில்லேயிருக்கு” என்று சீறினான் பெருமாள்.

இவர்கள் இப்படிச் சண்டை யிட்டுக் கொண்டிருந்ததைப் பின் பெஞ் சில் இருந்த மணவாளன் கவனித்து விட் டான். வத்தி வைப்பதில் நிபுணன் அவன். உடனே அவன் எழுந்து நின்று, “சார்!” என்று கூவி அவர்கள் சண்டையை சுவாரஸ்யமாக விவரித்துச் சொன்னான்.

“முதல் நாளே இப்படியா? ஒருவனுக் குள்ள திறமை, எல்லோராலும் பாராட்டக்கூடியதாக இருக்க வேண்டும். பரிகாசம் பண்ணுவதாகவோ, உயிருக்கே உலை வைப்பதாகவோ இருக்கக் கூடாது. பாட்டுப்பாடுவது திறமை. ஓட்டத்தில் முதலாக வருவது திறமை. சித்திரம் தீட்டுவது திறமை. இப்படியிருந்தால் தான் எல்லோரும் பாராட்டு வார்கள். பொய் பேசுவதிலே திறமையிருக்கிறது என்றால் எல்லோரும் நகைப்பார்கள். ஓடும் பஸ்ஸிலிருந்தும் இரயிலிலிருந்தும் இறங்குவதும் ஏறுவதும் உபயோகமான திறமை, உயர்தரமான சாமர்த்தியம் என்று யாரும் சொல்ல மாட்டார்கள்.



"எனக்கு மூணு மொழி தெரியும்?"

"என்னென்ன?"

"என்னோட படிக்கும் தேன் மொழி, கனிமொழி, அருள் மொழி இவங்களைத் தெரியும்!"

— பா. ஜெயக்குமார்

பேசாமல் உட்காருங்கள்!" என்று அவர்களை அடக்கினார் ஆசிரியர் அரங்கனார்.

அப்போதும் மணி ஏதோ முணு முணுப்பதும் பக்கத்தில் இருப்பவர்களை முறைப்பதுமாகவே இருந்தான். அதை ஆசிரியர் கவனித்து விட்டார்.

"ஏய் மணி! என்ன அங்கே முணுமுணுப்பு? உனக்குச் சொன்னதைப் போலத்தானே அப்துலுக்கும் சொன்னேன்? அதை அவன் உள்ள படியே உணர்ந்து வருத்தப்படுகிறான். அந்தக் குறையைப் போக்கிக் கொள்ள அவன் முயற்சி மேற் கொள்வான்; முன்னேறுவான். ஆனால், நீ உனக்குக் கொடுத்த எச்சரிக்கையை அலட்சியப் படுத்துபவன் போல் நடந்து கொள் கிறாய். ஊக்கத்தோடு படித்து உயர் மதிப்பெண் பெற வேண்டும் என்ற எண்ணமே உனக்கு ஏற்படவில்லை போல் தெரிகிறது. மாறாக மற்றவர்கள் உழைப்பால் பெற்ற பெருமையை வேண்டுமென்றே குறைத்து அவர்களைச் சிறுமைப்படுத்தப் பார்க்கிறாய். மற்றவர் களைக் காய்வதை விட்டு விட்டு நீ முன்னேறுவதற்குப் போதுமான முயற்சி எடுத்துக் கொள். நான் உங்கள் குறைகளைச் சுட்டிக் காட்டுவது மற்ற வர்கள் உங்களைக் கேலி செய்ய வேண்டும் என்பதற்காக அல்ல; மேலும் ஊக்கத்தோடு செயல்பட வேண்டும் என்பதற்காகத்தானே?"

ஆசிரியர் சொல்லிக் கொண்டிருக்கும் போது, பாட அட்டவணையைக் கொண்டு வந்தார் பியூன். ஆசிரியர் கரும்பலகையில் அதை எழுதினார். மாணவர்கள் கவனத்துடன் எழுதிக் கொள்ள முற்பட்டனர்.


மணி மட்டும் எழுதலாமா வேண் டாமா என்று தயங்குவது போல் நெளிந்தான். ஆசிரியர் கரும்பலகையி லிருந்து திரும்பி அவனைத்தான் கவனித்தார். அப்போது பெருமாள் தன் நோட்டுப் புத்தகத்திலிருந்து ஓர் ஏட்டைக் கிழித்து மணியின் முன் நீட்டிக் கொண்டிருந்தான்.

"மணி! முதல் நாளே கையை ஆட்டிக் கொண்டு வந்திருக்கிறாய்! ஒரு நோட்டுப் புத்தகம் கூடக் கொண்டு வரவில்லை இல்லையா? இப்போது பார்! உனக்கு யார் உதவுகிறார்கள் என்பதைக் கவனி! தன்னை வேதனைப் படுத்துகிறவனுக்கும் உதவி செய்கிற மனம் இருக்கிறதே அது எவ்வளவு உயர்ந்தது தெரியுமா? நினைத்துப் பார்! பெருமாள் எவ்வளவு உயர்ந்தவன் என்பதை இப்பொழுதாவது உணர் கிறாயா! அதோடு, மற்றவர் உயர்வுக்கும் உன் தாழ்வுக்கும் அடிப்படைக் காரணம் என்ன என்பதை இப்பவாவது புரிந்து கொண்டாயா?" என்றார் ஆசிரியர்.

மணி உண்மையிலேயே அவமானத்தோடு தலையைக் குனிந்து கொண்டான்.

அப்போது பலராமன் தன் பேனாவை மணியிடம் நீட்டி, "இதிலே நீ எழுது! நான் பென்சில் வைத்திருக் கிறேன். அதில் எழுதிக் கொள்கிறேன்!" என்று தான் எடுத்த துண்டுப் பென்சிலைக் காட்டினான் மணிக்கு.

மணியின் கண்களில் நீர் முட்டிக் கொண்டு நின்றது. காரணம் அவன் மாறிவிட்டான்.



உனக்குத்தான் அம்பி!

அம்பி! அம்பி! உனக்குத்தான்
அண்ணன் கடிதம் எழுதுகிறேன்!
தம்பி! தம்பி! உன்னைத்தான்
தகவல் கேட்டு எழுதுகிறேன்!

வெயிலே நுழைய முடியாதம்
வீட்டுத் தோட்டம் நலந்தானா?
குயில்கள் நுழைந்து பாடிவரும்.
குடைமரங்கள் வளந்தானா?

மஞ்சள் கலந்த கருநீலம்
மனத்தைக் கவரும் ஒரு பறவை
கொஞ்சிப் பேச வந்திடுமே
குருவி இப்போது வருகிறதா?

எங்கோ மறைந்து குரல் கொடுக்கும்
ஈடாய் நாமும் குரல் கொடுத்தால்.
சங்கிலித் தொடர்போல் எதிரொலிக்கும்
சங்கீத குயிலும் வருகிறதா?

தொங்கும் மாங்காய் சுவைத்திடவே
தோட்டம் சுற்றும் கிளிக்கூட்டம்
அங்கே பறந்து திரிகிறதா?
அழகின் சிரிப்பு இருக்கிறதா?

கறுகறுப்புப் பான அணில் கூட்டம்
விறு விறு என்றே மரம் ஏறும்
கொறித்து கொய்யாக் கனிபோடும்
கோலக் காட்சி தொடர்கிறதா?

பலாமரத்தின் வேர்களிலே
பழம் வெடித்து மணக்கிறதா?
துலாக்கோல் தட்டாய்த் தேன்கூடு
தோப்பில் கட்டி இருக்கிறதா?

— பல்லவன்





ஓர் ஊரில் ஒரு கிழவி வசித்து வந்தாள். அவளுக்கு நான்கு பெண்கள். நான்கு பெண்களுக்கும் திருமணம் பண்ணி வைத்தான் கிழவி. நான்கு பெண்கள் வீட்டிலும் மூன்று மாதங்கள்

சூப்பர் கிழவி!

ந.ங.குலியாள்.

ஒருமுறை மூன்றாவது மகள் வீட் டிற்குப் போய்க் கொண்டிருந்தாள். வழியில் காடு. காட்டைக் கடந்துதான் செல்ல வேண்டும். வழியில் கிழவிக்குத் தாகம் ஏற்பட்டது. இன்னும் சிறிது தூரம் சென்றால் ஆறு வந்து விடும். ஆதலால் தாகத்தைப் பொறுத்துக் கொண்டு வேகமாகச் சென்று கொண்டிருந்தாள்.

திடீரென்று ஒரு சிங்கம் எதிரே வந்தது. அது கிழவியைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தது.

"ஏ கிழவி, எனக்கு ஒரே பசி. உன்னைத் தின்னப் போகிறேன்" என்றது சிங்கம்.

கிழவி தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "ஏ முட்டாள் சிங்கமே. நான் ஒல்லியாக; எலும்புக்கூடாக எப்படி இருக்கிறேன் பார்? என் மகள் வீட்டிற்குச் செல்கிறேன். அவர்கள் பெரிய பணக்காரர்கள். அங்கு சென்று நன்றாகத் தின்று உடம்பைக் கொழுக்க வைத்து இதே வழியில் வருவேன். அப்பொழுது என்னை நீ தின்னலாம். பசியும் தீரும். இப்போ தின்றால் பசி அடங்காது" என்றாள் கிழவி.




சிங்கம் யோசித்தது. "இதோ பார், என்னை ஏமாற்றலாம் என்று மட்டும் நினைக்காதே. எப்பொழுதும் இந்த இடத்தில்தான் இருப்பேன். எப்பொழுது வருவாய் என்று காத்துக் கொண்டிருப்பேன்" என்று உறுமியது சிங்கம்.

"இன்னும் மூன்று மாதம் கழித்து வருவேன்" என்றாள் கிழவி.

சிங்கம் கிழவியைப் போக அனுமதித்தது.

மகள் வீட்டிற்கு வந்து நடந்ததைக் கூறினாள் கிழவி.

"சரி போகட்டும் அம்மா. நீ போகும் பொழுது நான் ஒரு மாற்றுத் திட்டம்



போட்டு அனுப்புகிறேன் கவலைப் படாதே" என்றான் புத்திசாலி மகன்.

மூன்று மாதம் கழித்து கிழவி போகும் சமயம் ஒரு பெரிய பானை யைத் தயார் செய்து வைத்தான் மகன். அது கிழவி உட்காரும் அளவுக்கு இருந்தது. சிறு சிறு ஓட்டைகளும் இருந்தன.

"சிங்கம் உங்களை எங்கே சந்தித்தது?" என்று கேட்டான் மகன்.

"காட்டுப் பாதையின் நடுவில் சந்தித்தது. அது நல்ல மேட்டுப்பகுதி" என்றாள் கிழவி.

சிங்கம் சந்தித்த இடததிற்கு சிறிது முன்னால் பானையில் கிழவியை உட்கார வைத்து அதை நன் றாக இறுக்கி மூடி, பானையை மேட்டுப் பகுதியில் உருட்டி விட்டான் மகன்.

சிங்கம் அதே இடத்தில் கிழவிக்கா கக் காத்திருந்தது. "டமடம" வென்று பானை உருண்டு வருவதைக் கண்டது சிங்கம். கிழவிதான் ஏதோ தந்திரம் செய்கிறாள் என்பதை அது உணர்ந்து கொண்டது.

பானையைத் தடுத்து நிறுத்தியது.

"ஏ கிழவி, வெளியே வா" என்றது சிங்கம்.

கிழவி பேசவில்லை.

"வெளியே





கர்மவீரர்

விருது நகரில் பிறந்து வந்தவர்,
மேன்மை மிக்கவர்
கறுப்பு நிறத்து காந்தி என்று
சிறப்புப் பெற்றவர்.

தமிழ கத்தின் முதல்வர் என்று
தகுதி கண்டவர்
அமைதி சற்றும் குன்றி டாத
ஆட்சி தந்தவர்

படித்தி டாத மேதை என்ற
பெயர்ப டைத்தவர்;
துடிப்பி னோடு ஏழை மக்கள்
துயர்து டைத்தவர்.

சிறுவர் கற்கப் பள்ளி மிகவும்
திறந்து வைத்தவர்;
அரிய உணவுத் திட்டம் அவர்க்கு
வரைந்து வைத்தவர்.

நல்ல கொள்கை தன்னில் எந்த
நாளும் நின்றவர்;
சொல்ல வந்த கருத்தை என்றும்
சுருங்கச் சொன்னவர்.

கர்ம வீரர் காம ராஜர்
கருணை மிக்கவர்;
தர்ம சீலர் தமது கடமை
தவறி டாதவர்

-புவனை கலைச்செழியன்

வரவில்லை என்றால் பானையை உடைத்து விடுவேன்" என்று பாய வந்தது சிங்கம்.

கிழவி பயந்து போய் வெளியே வந்தாள்.

"உன்னை என்ன செய்கிறேன் பார்!" என்று பாய்ந்தது சிங்கம்.

"நில் சிங்கமே. என்னுடைய கடைசி ஆசையை நிறைவேற்று. அருகில் இருக்கும் ஆற்றில் குளித்து விட்டு சுத்தமாக வருகிறேன். அப்புறம் நீ என்னைச் சாப்பிடு" என்றது கிழவி.

"சரி போ, சீக்கிரம் குளித்து விட்டு வா. எனக்குப் பசிக்கிறது" என்றது சிங்கம்.

"சிங்கமே, என்னையா திங்கப் போறே? இரு. உன் உயிருக்கே உலை வைக்கிறேன்!" என்று மனதுக்குள் கருவிக் கொண்ட கிழவி ஆற்றுக்கு விரைந்தாள்.

கிழவி ஆற்றில் இறங்கி அங்கேயே நீரில் உட்கார்ந்து கொண்டாள். நேரம் கழிந்தது. சிங்கம் கிழவியை அழைத்தது. பதிலே சொல்லாமல் நீரிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தாள் கிழவி.

"நீ வரவில்லை என்றால் நானே வருவேன்" என்றது சிங்கம்.

"வாயேன்! எனக்கு என்னவோ தெரியலே. தலையைச் சுத்திக்கிட்டு வருது. நீ வந்து என்னைக் கையைப் புடிச்சு எழுப்பி, கூட்டிக்கிட்டுப் போயேன்" என்றாள் பொல்லாத கிழவி.

சிங்கமும் ஆற்றில் இறங்கியது.

கிழவி பேசாமல் உட்கார்ந்திருப்பதைக் கண்ட சிங்கம் கோபமடைந்து, "உன்னை இப்பவே கொல்கிறேன் பார்!" என்று பாய்ந்தது.


கிழவி அதன் திறந்த வாயில் ஆற்று மணலை அள்ளிப் போட்டாள். கண்களிலும் வீசினாள்.

சிங்கம் கண் தெரியாமல் துடித்தது. மண்ணை விழுங்க முடியாது திண்டாடியது. கிழவி அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அதன் முகத்தை ஆற்றில் முக்கினாள். சிங்கம் மூச்சுத் திணறி இறந்தது.

கிழவி பெருமூச்சு விட்டாள். நிம்மதியாகக் கிளம்பினாள்.

(ருஷ்யத் தழுவல்)

- கே. எச். கலீல் ரஹ்மான்


புள்ளிகளைச்
சேருங்கள்!

ராஜனும், பாலாஜியும் நல்ல நண்பர்கள். கஷ்டம் காரணமாக அவர்கள் படிக்கவில்லை. வேலை கிடைத்த போது உழைத்தார்கள். வேலை கிடைக்காத போது ஏதாவது பழங்களை வாங்கிக் கொண்டு சந்தைக்குச் சென்று விற்பார்கள்.


அன்றும் அப்படித்தான், வேலை கிடைக்காததால் பழ வியாபாரம் செய்ய சந்தைக்கு வந்திருந்தார்கள். அன்று சந்தையில் நல்ல கூட்டம். கொண்டு போன பழத்தில் பாதிக்கு மேல் விற்று முடித்து விட்டார்கள்.


சந்தை, கலையத் தொடங்கி விட்டது. ராஜனிடம் ஒரு பலாப்பழமும் பாலாஜியிடம் ஒரு மாம்பழமும் பாக்கி இருந்தன.

கிளம்பிக் கொண்டிருந்த நேரத்தில் ஒரு வயதான பெரியவர் ராஜனின் கடைக்கு வந்தார். ராஜனிடம் இருந்த பலாப்பழத்தைப் பார்த்து, "இது நல்ல பழமா தம்பி?" என்று அவனிடமே கேட்டார்.

ராஜன், இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிப் பழம் விற்பதில் கை தேர்ந்தவன்.

"ஆமாம் ஐயா! அருமையான பழம். ரொம்ப சுவையாக இருக்கும்" என்று புளுகினான். அவன் கேட்ட விலையைத் தந்து வாங்கிக் கொண்ட பெரியவர், பாலாஜியிடம் இருந்த பெரிய பழத்தைப் பார்த்து, "என்ன விலை"





யாருக்கு இலாபம்?

என்று கேட்டார்.

"ஐயா, இது பெரிய பழமாகத் தெரியலாம். ஆனால், பூச்சி பட்டது. இருந்தாலும் ருசி நிறைந்தது" என்று பணிவாக உண்மையைச் சொன்னான் பாலாஜி.

உண்மை பேசுவது அவன் குணம்.

"தம்பி உன்னிடம் வாங்க வரும் வாடிக்கையாளரிடம் பொருள்களின் குறைபாடுகளைக் கூறி விற்கிறாயே! இது நஷ்டம் ஏற்படுத்தும் இல்லையா?" என்று கேட்டார் பெரியவர்.

"உண்மைச் சொல்வதே எனது கொள்கை. விற்க வேண்டும் என்பதற்காகப் பொய் கூற மாட்டேன்" என்றான் பாலாஜி.

பெரியவர் போனவுடன் ராஜன் பாலாஜியிடம் வந்து, "நான் எப்படி அடியில் பூச்சியரித்த பழத்தை அவர் தலையில் திறமையாகக் கட்டி விட்டேன்! அதே போல் நீயும் மாம்பழத்தைக் கிழவரிடம் நல்ல விலைக்குக் கொடுத்திருந்தால் எவ்வளவு இலாபம்! தேடி வந்த இலாபத்தை உதறி விட்டாயே?" என்று கடிந்துக் கொண்டான்.

"வாய்மையே வெல்லும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளவன் நான்" என்று கூறி போய்விட்டான் பாலாஜி.

மறுநாள் அதே பெரியவர் பாலாஜியின் கடையைத் தேடி வந்தார். அவனிடம் வந்தால் நல்ல பொருட்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையே அதற்குக் காரணம்.

ஒரு வருடம் ஓடியது. அந்தப் பெரியவர், ஒரு நாள் பாலாஜியிடம் வந்தார்.

" தம்பி என் நண்பர் ஒருவர் உன்னைப் போன்ற உண்மையே பேசும் விசுவாசம் மிக்க ஒருவனைத் தேடுகிறார். என்னோடு வா" என்று அவனைக் கூட்டிச் சென்றார்.

பெரியவர் அழைத்துச் சென்ற மனிதர் பெரிய முதலாளி. பாலாஜியும் அவரிடம் உண்மையாக நடந்து கொண்டு அவர் மனத்தில் நல்ல இடம் பிடித்தான். படிப்படியாக உத்தியோக உயர்வு பெற்று, வர்த்தகத்தில் பெரிய பங்காளி ஆனான்.

ராஜன் மட்டும் இன்னமும் பழம் விற்றுத் திண்டாடிக் கொண்டிருக்கிறான்.

வீரலக்ஷ்மி கண்ணப்பன்,
கொழும்பு - 13.

சார் தபால்

★ சாட்பீட்கீத்! மிகவும் அருமையாக இருந்தது. சின்ன பாபுவை விட்டு ஒரு முழுத் தொடர்கதையையே இவர்களை வைத்து எழுதச் சொல்லுங்களேன்? - முகவை, க. தாரிணி, தருமபுரி கி. சுந்தர பாபு, கபிஸ்தலம் ஆர். ரவிவர்மன், செம்பனார் கோயில் ஜெ. ஜம்மு, சோழன் மாளிகை கோ. ஆனந்தன், வெள்ளிக்கிடங்கு ஆர். முருகானந்தம், கபிஸ்தலம் எஸ். வினோத் பாபு.

★ பாடல்கள் எல்லாமே பலாச்சுளைதான்! கோகுலம் மட்டுமே தரமான சிறுவர் பாடல்களை வெளியிடுகிறது. வளர்க அதன் தொண்டு. - குழிக்கரை க. தேவநாயகி, தேனி மு. ருக்மணி.

ஏமாற்ற முடியாது!

★ ஜூன் '96 இதழில் கேளுங்கள் சொல்லப்படும் பகுதியில் 'உலகின் மிகப் பெரிய மக்கட் தொகை நகரம் எது?' என்ற கேள்விக்கு, 'தெற்கு கொரியா நாட்டில் உள்ள சியோல் நகரம் என்றும் அதன் ஜனத் தொகை 10,27,790 என்றும் பம்பாய்க்கு இரண்டாவது இடம் (9,480,427) எனவும் சேர நம்பி பதிலளித்துள்ளார். 'Manorama' Year Book 1996 ல் (பக்கம் 20) உலகின் அதிக மக்கட்தொகை கொண்ட நகர்கள் பட்டியலில் வேறு மாதிரி இருக்கிறதே? - கொங்கங்குளம் வி. ஜெயப் பிரகாஷ்

(இன்றுள்ளபடி சரியான தகவல் as on date நீங்கள் தந்துள்ளதே. - ஆசிரியர்.)

★ வண்ண லேபில்கள் உள்ளே என்று அட்டையில் போட்டுவிட்டு, இப்படி ஏமாற்றி விட்டீர்களே! நியாயமா? - லால்குடி கீதா கணேசன், கோவை தீபிகா, மதுரை எம். அழகப்பன், சேலூர் 'ரா. சிவராம கிருஷ்ணன், நெய்வேலி ஸ்ரீ ஸ்ரீராம், கூகலூர் கே.வி. மஞ்சுளாதேவி, பெல்-காமராஜபுரம் ச. செண்பகவள்ளி, திருவண்ணாமலை ஜி. தேவன், குளகிரி டி. ஜெகதீசன், மேலகரம் ஜெ. சங்கீதா, கரூர் ஜி.ஆர். அனிதா, போத்தனூர் ஆர். சங்கீதா, திருவல்லிக்கேணி ஆர். பார்த்தசாரதி, திருவிடைமருதூர் எஸ். சுதாகர் விசலூர் ஜி.ஜி. கிருஷ்ணன், செல்லபுரம் கே. புவனேஸ்வரி, இன்னும் ஏராளமானோர்.

(ஏமாற்றும் எண்ணம் இல்லை! தவறுக்கு மிகவும் வருந்துகிறோம்! இனி இப்படி நேராது. ஆசிரியர்.)

★ புவனா தேடிய புதையல் முடியப் போவதை எண்ணி மனது என்னவோ பண்ணுகிறது சார்! எத்தனை பாதிப்பை ஏற்படுத்திவிட்டது! - வலிவலம் க. அருணாசலம், கபிஸ்தலம் ஆர். ரவிவர்மன், வெள்ளிக்கிடங்கு ஆர். முருகானந்தம், கபிஸ்தலம் எஸ். வினோத் பாபு, சின்ன சேலம் ஆர். பிரசன்ன குமார்.

★ பட்டத்தைத் தேடி அலைகின்றவர்களுக்கு 'குரங்கார் வாங்கிய பட்டம்!' நல்ல பாடம். ஒரே சிரிப்பு. எழுதியவர் பெயரை இப்படி இருட்டடிப்புச் செய்யலாமா? - கண்ணம்பாடி து. விக்னேஷ், விருத்தாசலம் ஆர். பிரசன்னா, வெளியூர் ஆர்.சூடாமணி, புதுகை, வி. சாந்தப்பன், சிறுமணி இ. ஜெயஸ்ரீ, புதுவை எஸ். கவியன்பன்.

★ ஜூலை இதழில், பிருந்தாவனக் கவியரங்கம் பகுதியில் வெளிவந்துள்ள "கோடைகாலம்" பாடல், நான் பூந்தளிர் 1991 ஏப்ரல் இதழில் எழுதியதன் அப்பட்டமான காப்பி. ஜெராக்ஸ் அனுப்பியுள்ளேன். இனியாவது இம்மாதிரி காப்பிக் கவிதைகளைப் பிரசுரிக்காமல் இருக்கவும். - ஜி.கே. வெண்ணிலா, சென்னை - 15.


(என்றோ வெளியான எல்லாவற்றையுமே ஆசிரியர் நினைவில் வைத்திருக்க இயலுமா? ஆசிரியரை ஏமாற்றலாம். ஆனால் பல்லாயிரக் கணக்கான வாசகர்களை ஏமாற்ற முடியாது என்பதை இனிமேல் இப்படி அனுப்புவோர் உணர வேண்டும். ஆர்.)

★ "கல்மாலை" படக்கதையின் கருத்தும் அருமை, படங்களும் அழகு! - திண்டிவனம், க. சாரங்கபாணி, கபிஸ்தலம் ஆர். ரவி வர்மன், நெற்குப்பை கி. மனோகரன், மேலப்பாதி என். ராஜி, எஸ். நாகராஜன், கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு, விருத்தாசலம் வி. பிரபாகர்.

★ தேரைக்கும் தவளைக்கும் வித்தியாசம் தெரியாது இருந்த எங்களுக்குக் கண் திறந்து விட்டது கோகுலம்! - கருப்பூர் இல. சடகோபன், திருமலை கி. சுந்தரரூபன், சிதம்பரம் வா. சுப்பையா, தேவனாங்குறிச்சி பா. வடிவேல், கபிஸ்தலம் ஆர. ரவிவர்மன், திருச்செங்கோடு இரா.க. தென்றல் நிலவன், விபீஷணபுரம் ஸ்ரீவித்யா காளிதாஸ்.

பாரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.

சிரசாசனம் செய்கிறேன்
சிறிது கையைத் தட்டுங்கள்!



...RED NO.TN/MS (S) 281 Registered as Newspaper in Srilanka
...ed to post without prepayment under licence No. TN/MS (S) 14